**கவனிக்க.**– 2024.03.15 ஆந் திகதிய 2376 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி IV (அ) பிரசுரிக்கப்படவில்லை.

# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 2377 - 2024 මාර්තු මස 22 වැනි සිකුරාදා - 2024.03.22

*2377 ஆம் இலக்கம் - 2024 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 22 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

## பகுதி I : தொகுதி (IIஅ) - விளம்பரங்கள்

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்களில் தரப்பட்டுள்ளன.)

| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| பதவிகள் - வெற்றிடம் | 4 | பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | 5 |

**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

**முக்கிய அறிவித்தல்கள்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்.** இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலூன பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முன்னர், அதாவது 2024, ஏப்பிறல் மாதம் 10 ஆந் திகதி புதன்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2024, மாச்சு மாதம் 28 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு**

*"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரனியல் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."*

**கங்கானி லியனகே,**
*அரசாங்க அழுத்தகர்.*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2024 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.*

*இவ்வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

1-B 82552-5,441 (2024/03)

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானியில் விளம்பரப்படுத்தப்படும் அரசாங்க சேவை நியமனங்களுக்கு ஏற்புடைத்தாகும் பொது நிபந்தனைகள்

**1. வேண்டப்படும் பொதுத் தகைமைகள் :**

*1.1 விண்ணப்பதாரர் ஒவ்வொருவரும் தாம் இலங்கையர் என்பதைத் திருப்திகரமான முறையில் நிரூபித்தல் வேண்டும். இலங்கையர் என்பவர் இலங்கைப் பிரசாவுரிமைச் செய்சட்டத்தினால் வரையறை செய்யப்பட்டபடி வம்சாவழியாகவோ பதிவுவழியாகவோ இலங்கைப் பிரசையாக இருப்பவராகும்.*

*1.2 சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான அல்லது அதைவிட உயர்ந்த பரீட்சையில் சித்தியடைந்திருத்தல் ஆகக்குறைந்த கல்வித் தகைமையாக விதிக்கப்பட்டுள்ள எந்தப் பதவிக்கும் விண்ணப்பிக்கும் வேட்பாளர் ஒருவர் சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான பரீட்சையில் அவர் சிங்களவராக இருந்து சிங்கள மொழி மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து அல்லது தமிழராகவிருந்து தமிழ் மொழி மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து, விடயத்துக்கேற்ப, சிங்கள மொழியில் அல்லது தமிழ் மொழியில் சித்திபெற்றிருத்தல் வேண்டும். இத்தேவைப்பாடு (1961, சனவரி 01 ஆந் தேதிக்கு முற்பட்டவொரு திகதி தொடக்கம் அரசாங்க சேவையில் இருப்பவர்களுக்கும் அரசாங்க சேவையில் பிற பதவிகளுக்கு நியமனங்களைப் பெற முயற்சி செய்பவர்களுமானவர்களுக்கும் ஏற்புடைத்தாகாது).*

*1.3 சிங்களத்தில் அல்லது தமிழில் கல்வி கற்காதவர்களும் விதித்துரைத்த அரச கரும மொழித் தேர்ச்சி சோதனைகளில் சித்தியடையத் தவறியமைக்காக தகுதிகூர் நிலைப்பரீட்சார்த்த நியமனங்கள் முடிவுறுத்தப்பட்டவர்களுமான "புதிய சேர்வாளர்கள்" ஆகிய அரசாங்க உத்தியோகத்தர்களினால் அனுப்பப்படும் விண்ணப்பங்கள், அவர்கள் அப்பதவிக்கு விதித்துரைக்கப்பட்ட அதியுயர் தேர்ச்சிச் சோதனையிலிருந்து விலக்களிப்பைப் பெறும் உரிமையை வழங்கக்கூடிய தகைமைகளைப் பெற்றிருந்தாலன்றி ஏற்றுக்கொள்ளப்பட மாட்டா.*

**2. சேவை நிபந்தனைகள் : பொது**

*2.1 நிதி ஒழுங்குவிதிகள், தாபனக்கோவை, திணைக்களக் கட்டளைகள் அல்லது ஒழுங்குவிதிகள் ஆகியவற்றுடன் அரசாங்கத்தினால் காலத்துக்குக்காலம் விதிக்கப்படும் வேறு எவையேனும் கட்டளைகள் அல்லது ஒழுங்கு விதிகளுக்கு அமைவாகவே சகல அரசாங்க சேவை உத்தியோகத்தர்களும் இருப்பர்.*

*2.2 அரச உத்தியோகத்தர் ஒருவர், அரசாங்க உத்தியோகத்தர் (பிணைக்) கட்டளைச் சட்டத்தின் நியதிகளின்படி பிணை செலுத்தும்படி வேண்டப்படலாம்.*

*அந்தப் பிணை சம்பந்தப்பட்ட அமைச்சின் செயலாளர் தீர்மானிக்கும் அத்தகைய தொகையாகவும் அத்தகைய விதத்திலும் செலுத்தப்படல் வேண்டும்.*

*2.3 அரச உத்தியோகத்தர் ஒருவர் தீவின் எந்தப் பகுதியிலூவது சேவையாற்றும்படி கேட்கப்படலூம்.*

***3. நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்களுக்கு ஏற்புடையதாகும் சேவை நிபந்தனைகள் :***

*3.1 நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்கள் மேலே 2 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட நிபந்தனைகளுக்கு அமைவாக இருக்க வேண்டியதுடன் பின்வரும் நிபந்தனைகளுக்கும் அமைவாக இருத்தல் வேண்டும் :-*

*3.1.1 சகல நியமனங்களும் ஏதாவது ஒரு பதவி தொடர்பாக நீண்ட காலம் தேவையெனக் கருதப்பட்டாலொழிய மூன்று வருடத்துக்கு தகுதிகூர் நிலையிலேயே இருக்கும். தகுதிகூர் காலத்தின் ஏதாவது ஒரு நேரத்தில் காரணம் எதுவும் கொடுக்காமலே ஒரு நியமனத்தை நிறுத்திவைக்கலாம்.*

*3.1.2 சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் IV ஆம் அத்தியாயத்தின் ஏற்பாடுகளுக்கும் அரசாங்கத்தின் மொழிக் கொள்கையைச் செயற்படுத்துவதற்கு காலத்துக்குக் காலம் ஆக்கப்படும் எந்தச் சட்டங்களுக்கும் அல்லது ஒழுங்குவிதிகளுக்கும் அல்லது விதிகளுக்கும் அமைந்து நடக்குமாறு வேண்டப்படுவர்.*

*3.1.3 சிங்கள மொழி மூலத்தில் அல்லது தமிழ் மொழி மூலத்தில் அரசாங்க சேவையில் சேராத சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் அரசகரும மொழிகளிலொன்றில் பணியாற்றும் அறிவைப் பெற்றுக்கொள்ளுமாறு வேண்டப்படுவர்.*

*3.1.4 அரசாங்க சேவையில் சிங்களம் அல்லது தமிழ் தவிர்ந்த ஒரு மொழி மூலத்தில் அரசாங்க சேவையில் சேர்ந்த உத்தியோகத்தரொருவர் தகுதிகூர் நிலைக்காலம் முடிவுற்றதன் பேரில் பதவியில் உறுதிப்படுத்தல் பிறவற்றுள், அவர் அரச கரும மொழிகளிலொன்றில் நியமனத் திகதியிலிருந்து ஒரு வருடத்துக்குள் I ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் இரண்டு வருடங்களுக்குள் II ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் (ஏற்புடையவிடத்து) மூன்று வருடங்களுக்குள் III ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் சித்தியடைவதில் தங்கியிருக்கும். ஒரு தேர்வுக்கென விதிக்கப்பட்ட காலத்தினுள் அதில் சித்தியுரத் தவறினால் வேதன ஏற்றம் இடைநிறுத்தப்படும். அந்த இடைநிறுத்தம் விதிக்கப்பட்ட காலத்துக்கு மேல்வரும் ஆறு மாதங்களுள் தேர்வில் சித்தியுறத் தவறினால் நிறுத்தமாக மாற்றப்படும். அத்தகைய ஏற்ற நிறுத்தம் தேர்வில் எய்தும் வரையில் அல்லது 3.1.6 ஆம் பிரிவின் ஏற்பாடுகள் ஏற்புடைத்தாகும். அத்தகைய காலம் வரையில் செயலில் இருக்கும்.*

*3.1.5 அத்தகைய உத்தியோகத்தர்களுக்கு நியமனம் வழங்கப்பட்டதன் பேரில் அரசகரும மொழிகளிலொன்றில் தேர்ச்சி பெறுவதற்கு 6 மாத காலத்திற்கு முழுச் சம்பளத்துடனான வசதிகள் வழங்கப்படல் வேண்டும். அதன் பின்னர் அவர் தொடர்புடைய தேர்ச்சிப் பரீட்சையில் சித்தியடையுமாறு வேண்டப்படுவர். அவர் சித்தியடையத் தவறுமிடத்து முழுச் சம்பளத்துடனான 6 மாத காலத்திற்கு உடனடியாகப் பின்னர், அவர் தமது வழக்கமான கடமைகளை நிறைவேற்றும் வேளையில், 2 வருட காலத்திற்குள் பரீட்சையில் சித்தியடைவதற்கு அவருக்குச் சந்தர்ப்பம் வழங்கப்படும்.*

*3.1.6 இந்த விதித்துரைத்த 2 1/2 வருட காலத்திற்குள் பரீட்சையில் அவர் சித்தி அடையத் தவறினால் அவருடைய சேவை முடிவுறுத்தப்படும்.*

*3.1.7 அரசாங்க சேவையின் நிரந்தரமான பதவியொன்றில் ஏற்கனவே பதவி உறுதிசெய்யப்பட்ட அரச உத்தியோகத்தர் ஒருவர் அரசாங்க சேவையில் உள்ள வேறொரு நிரந்தர பதவியொன்றில் நியமிக்கப்படுமிடத்து அவர் இயல்பாகவே தகுதிகூர் நிலையில் இருக்க வேண்டியதில்லை.*

*3.1.8 தெரிவுசெய்யப்பட்ட வேட்பாளர் (அரசாங்க சேவையில் ஏற்கனவே நிரந்தர/தற்காலிக பதவிகளை வகிப்பதுடன் ஏற்கனவே வைத்திய பரீட்சைக்கு உள்ளானவர்கள் தவிர்ந்த) தீவின் எந்தப் பகுதியிலாவது சேவை செய்வதற்கு உடற்றகுதி உள்ளவர்கள் என்பதனைச் சோதனை செய்து அவர்கள் அரசாங்க மருத்துவ உத்தியோகத்தர் ஒருவரின் மருத்துவப் பரிசோதனைக்கு உட்படல் வேண்டும்.*

***4. பணிக்கமர்த்தும் நியதிகள் :***

*4.1 நிரந்தரமானதும் ஓய்வூதியத்திற்குரித்துடையதுமான பதவிகளுக்கு நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர் அவர்களின் வேதனத்திலிருந்து அறவிடப்பட வேண்டுமென அரசாங்கத்தால் விதிக்கப்பட்டுள்ள நூற்று வீதத்துக்குச் சமமானவொரு தொகையைத் தங்களின் வேதனங்களிலிருந்து விதவைகள், அநாதைகள் ஓய்வூதியத் திட்டத்திற்கு உதவுதொகையாக வழங்குதல் வேண்டும்.*

*4.2 நிரந்தர அல்லது தற்காலிகப் பதவிகளுக்கு ஏற்பாட்டு நிதிய அடிப்படையில் நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர்கள் தங்களின் திரட்டிய வேதனங்களின் 6% ஐ அரசாங்க சேவை ஏற்பாடு நிதியத்துக்கு உதவு தொகையாக வழங்குமாறு வேண்டப்படுவர். நிதி ஆண்டின் இறுதியில் கட்டாய உதவுதொகையாகக் குறித்த நிதியத்திற்கு வரவு வைக்கப்பட்டுள்ள தொகையின் 150% க்குச் சமமானவொரு தொகையைக் குறித்த நிதியத்துக்குத் தனது உதவுதொகையாக அரசாங்கம் செலுத்தும்.*

*4.3 அரசாங்க சேவையில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நியமனங்கள் வகிப்பவர்களும், உள்ளூராட்சிச் சேவையிலுள்ள ஓய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கும் நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுக்குமான உத்தியோகத்தர்களுக்கு உள்ளூராட்சிக் சேவையில் ஓய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுமான உத்தியோகத்தர்களுக்கு முறையே உள்ளூராட்சிச் சேவையிலும் அரசாங்க சேவையிலுமுள்ள அவர்களது பதவிகளில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும்.*

*4.4 ஓய்வூதியப் பிரமாணக் குறிப்புகளின்கீழ் ஓய்வூதியத்திற்குரித்துடையவையான, அரசாங்க சேவையிலுள்ள பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படும் தரைப்படை, கடற்படை, வான்படை ஆகியவற்றின் நிலையப்படை ஆளணியினர்க்கு அரசாங்க சேவையிலுள்ள அவர்களது பதவிகளில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும். இப்பிரமாணக் குறிப்புகளின்கீழ் ஓய்வூதியத்திற்குரித்துடையதெனப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ள ஓர் அரச உத்தியோகத்தர் ஆக அளிக்கப்படுமொரு பதவியொன்றில் நியமனத்தை ஏற்பதாக விடுவிக்கப்படும், படைத்தாங்கு சேவைகளின் உறுப்பினரொருவரினது இழக்கப்படாத முழுச் சம்பள சேவைக்காலமானது இப்பிரமாணக் குறிப்புக்களிலுள்ளவற்றிற்கு மாறாக யாதேனும் இருந்தபோதிலும் இப்பிரமாணக் குறிப்புகளின்கீழ் கொடுக்கப்படற்பாலதான ஏதேனும் ஓய்வூதியத்தின் அல்லது பணிக்கொடையின் பொருட்டுக் கணக்கில் எடுத்துக்கொள்ளப்படும்.*

**5. யுத்த சேவைச் சலுகை :**

*5.1 ஏனைய சகல விடயங்களிலும் தகைமை கொண்டிருப்பின் ஐக்கிய இராச்சியத்தின் போர்ப்படைகளில் சேவையாற்றியவர்களுக்கும், தீயணைக்கும் படை, விமானத் தாக்கப்பாதுகாப்புப் படை, ஊர்ப்பாதுகாப்பு படை என்பனவற்றிலும் முழுநேரக் கடமையாற்றியவர்கள் அவர்கள் தாமாகவே இப்படைகளை விட்டு விலகியிருக்காவிடின், 1939 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 03 ஆந் திகதியிலிருந்து 1949 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 ஆந் திகதிவரையில் உள்ள அச்சேவைக்காலத்தை தகைமை நோக்கத்தின் பொருட்டு மாத்திரம் தங்கள் வயதிலிருந்து கழிக்க அனுமதிக்கப்படுவர். ஆயின், அவர்கள் குறித்த படைகளில் 1945 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 15 ஆந் திகதிக்கு முன்பு சேர்ந்திருத்தல் வேண்டும். அத்துடன் அவர்கள் பற்றிய சேவை திருப்திகரமானதாகவும் தொடர்ச்சியானதாகவும் இருத்தல் வேண்டும்.*

***6. அரசசேவையில் சேவையாற்றும் உத்தியோகத்தர்கள் :***

*6.1 எல்லாத் தகைமைகளையும் உடைய அரசாங்க சேவை உத்தியோகத்தர்களின் விண்ணப்பங்கள் தொடர்புள்ள திணைக்களத் தலைவர்களினூடாக அனுப்பப்படல் வேண்டும். அரசாங்க சேவையில் நிரந்தரமான பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தரின் விண்ணப்பங்களைப் பொறுத்தமட்டில் விண்ணப்பதாரர் தெரிவுசெய்யப்பட்டால் அவர்கள் புதிய பதவியை ஏற்றுக்கொள்வதற்கு அவரை விடுவிக்க முடியுமா அல்லவா என்பதைத் திணைக்களத் தலைவர்கள் தாம் விண்ணப்பங்களை அனுப்பும்போது குறிப்பிடுதல் வேண்டும்.*

*6.2 விண்ணப்பதாரி குறிப்பிட்ட ஒரு நேரத்திலும் இடத்திலும் நேர்முகப் பரீட்சைக்குச் சமுகம் கொடுக்கும்படி வேண்டப்படலூம். அது தொடர்பாகப் பிரயாணச் செலவோ வேறு செலவுகளோ கொடுக்கப்பட மாட்டாது.*

*6.3 விண்ணப்பதாரியைச் சிபாரிசு செய்ய விரும்பும் எவராயினும் ஒருவர் சான்றிதழ் ஒன்றின் மூலம் அப்படிச் செய்யலாம். விண்ணப்பதாரி ஒருவரைத் தெரிவு செய்வதற்கு எந்தவொரு விதத்திலாவது ஆதரவு தேடினால் அல்லது செல்வாக்கைப் பிரயோகிக்க எத்தனித்தால் அது அத்தகைய விண்ணப்பதாரியைத் தகைமையற்றவர் ஆக்கிவிடும்.*

*6.4 விண்ணப்பத்தில் கொடுக்கப்பட்டுள்ள கூற்று ஏதாவது பிழையானதாக இருந்து அப்பிழை விண்ணப்பதாரர் தெரிவு செய்யப்படுவதற்கு முன்பதாகக் கண்டுபிடிக்கப்பட்டால் அது அவரைத் தகுதியற்றவராக்குவதற்கு உட்படுத்தும். அவர் தெரிவுசெய்யப்பட்ட பின்பு அப்பிழை கண்டுபிடிக்கப்படின் அது அவர் வேலையிலிருந்து நீக்கப்படுவதற்கு உட்படுத்தும்.*

*6.5 விளம்பரத் தேவைகளுக்கு அமையபடாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.*

**7. தகைமையின் நோக்கத்துக்காக வேதனத்தின் பொருள் வரையறை :**

*7.1 தகைமையின் நோக்கில் வேதனம் திரட்டிய வேதனம் மட்டும் எனப் பொருள்படும். அதில் பதில் வேதனம். படி முதலியன சேர்ந்திருக்கா.*

**8. ஆட்சேர்த்தல், பதவி உயர்வு வழங்குதல் தொடர்பான புதிய தேசிய கொள்கை :**

*இனிமேல் வெளியிடப்படவிருக்கும் அரசாங்க நிருவாக சுற்றறிக்கைகளின் மூலம் திருத்தங்கள் மேற்கொள்வதற்கு உட்பட்டு 1990.03.09 ஆந் திகதிய இல. 15/90, 1990.03.25 ஆந் திகதிய இல. 15/90 (i), 1990.06.15 ஆந் திகதிய 15/90 (ii) கொண்ட அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கைகளில் காட்டப்பட்டுள்ள கொள்கைகளுக்கு இணங்க அரசாங்க சேவைக்கு, மாகாண அரசாங்க சேவைக்கு, அரசாங்க கூட்டுத்தாபனங்களுக்கான ஆட்சேர்ப்புக்கள், பதவி உயர்வுகள் என்பன 1990.01.01 ஆந் திகதி தொடக்கம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.*

# பரீட்சார்த்திகளுக்கான விதிகளும் அறிவுறுத்தல்களும்

1976 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க திருத்தச் சட்டத்துக்கமைவான, 1968 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க பொதுப் பரீட்சைகள் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கும் காலத்துக்குக்காலம் வெளியிடப்படுகின்ற சட்டங்களுக்கும் ஒழுங்குமுறைகளுக்கும் ஏற்ப ஒழுகுவதற்கு சகல பரீட்சார்த்திகளும் கட்டுப்பட்டவர்களாவர்.

1976 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்கத் திருத்தச் சட்டத்துக்கமைவான, 1968 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க பொதுப் பரீட்சைகள் சட்டத்தின் 20 ஆம் வாசகத்தின் மூலம் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்துக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கமைய கீழ்க் குறிப்பிடப்படும் நிபந்தனைகள் மற்றும் கட்டுப்பாடுகள் விதிக்கப்படுகின்றன.

அனைத்துப் பரீட்சார்த்திகளும், கீழ்க் குறிப்பிடப்படும் விதிகளுக்கு கட்டுப்பட வேண்டும் என்பதுடன் இவ் விதிகளில் எவற்றையேனும் மீறும் பரீட்சார்த்தி ஒருவர் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தின் தீர்மானத்துக்கு அமைய கீழ்க் குறிப்பிடப்படும் தண்டனைகளில் ஒன்று அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட தண்டனைகளுக்கு உட்படுத்தப்படுவார்.

I. விசாரணைக்கு உட்படுத்தப்படுகின்ற முழுப் பரீட்சைக்கும் அல்லது அதன் ஒரு பகுதிக்கு தோற்றுவதற்குத் தடை விதித்தல்;
II. விசாரணைக்கு உட்படுத்தப்படும் பரீட்சையின் ஒரு பாடத்திற்கு அல்லது மொத்தப் பரீட்சைக்கும் தகுதியற்றவர் ஆக்குதல்;
III. இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தின் நடாத்தப்படுகின்ற அனைத்துப் பரீட்சைகளுக்கும் தோற்றுவதற்கு வாழ்நாள் தடை விதித்தல்;
IV. குறிப்பிட்ட காலப் பகுதிக்கு இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தினால் நடாத்தப்படுகின்ற பரீட்சைகளில் தோற்றுவதற்குத் தடை விதித்தல்;
V. இடைநிறுத்தப்பட்ட, பரீட்சைக்கான தடை உடன் கடிதம் ஒன்றை வழங்குதல்;
VI. குறிப்பிட்ட காலப் பகுதிக்கு சான்றிதழ் தடை செய்யப்படல்;
VII. பொதுப் பரீட்சைகள் சட்டத்தின் கீழ் குற்றவியல் வழக்கு ஒன்றைத் தாக்கல் செய்வதற்காக பரீட்சார்த்தியை காவற்றுறையிடம் ஒப்படைத்தல் அல்லது அக்குறித்த செயற்பாடு தொடர்பாக காவற்றுறையில் புகார் செய்தல்;
VIII. பரீட்சார்த்தி அரசாங்க ஊழியராக அமையும் சந்தர்ப்பத்தில் குறித்த பரீட்சார்த்தியின் செயற்பாடு தொடர்பாக (ஒழுக்காற்று நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக) குறித்த பரீட்சார்த்தியின் நியமன அதிகாரிக்கு அறிவித்தல்.

பரீட்சைக்கு முன்பு, பரீட்சை நடைபெற்றுக் கொண்டிருக்கும் போது அல்லது பரீட்சைக்கு பின்பு அல்லது வேறு எந்த ஒரு சந்தர்ப்பத்திலும் அவ்வாறான பரீட்சார்த்தி தொடர்பாக நடவடிக்கை எடுக்கும் அதிகாரத்தை பரீட்சைகள் ஆணையாளர் நாயகம், தம்வசம் கொண்டவர் ஆவார். இது தொடர்பாக அவரால் மேற்கொள்ளப்படும் தீர்மானம் இறுதியானதாகும்.

1. சகல பரீட்சார்த்திகளும் பரீட்சை மண்டபத்தினுள் மற்றும் பரீட்சை நடைபெறும் வளாகத்தினுள் பரீட்சை மேற்பார்வையாளருக்கு அவரது பணிக் குழாமுக்கு, அதே போன்று ஏனைய பரீட்சார்த்திகளுக்கு இடையூறு அல்லது தடங்கல்கள் ஏற்படாத வகையில் நடந்துகொள்ள வேண்டும். பரீட்சார்த்திகள் பரீட்சை வளாகத்தின் சொத்துகளுக்கு அல்லது பரீட்சை ஊழியர்களின் தனிப்பட்ட சொத்துகளுக்கு சேதம் ஏற்படுத்துதல் கூடாது.
2. பரீட்சார்த்திகள் பரீட்சை நடைபெற்றுக் கொண்டிருக்கும் காலப் பகுதியிலும் பரீட்சை ஆரம்பிப்பதற்கு முன்பும் அதே போன்று பரீட்சை நடைபெற்று முடிவடைந்தவுடனும் பரீட்சை மேற்பார்வையாளர் மற்றும் அவரது பணிக் குழுவின் அறிவுறுத்தல்களுக்கு ஏற்ப நடந்து கொள்ளல் வேண்டும்.
3. பரீட்சையின் போது வினாப்பத்திரத்திற்கு விடையளிப்பது ஆரம்பிக்கப்பட்டு அரை மணித்தியாலம் கழிந்த பின்னர் எந்தவொரு பரீட்சார்த்தியும் பரீட்சை மண்டபத்திற்குள் அனுமதிக்கப்பட மாட்டார்கள். மேலும் பரீட்சை முடிவடையும் வரை எந்தவொரு பரீட்சார்த்தியும் பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே செல்வதற்கும் இடமளிக்கப்பட மாட்டாது. செயன்முறைப் பரீட்சைகள் அல்லது வாய்மொழி மூலமான பரீட்சைகளுக்கு உரிய நேரத்திற்கு சமுகம் அளிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
4. சகல பரீட்சார்த்திகளும் தமது சுட்டெண்ணுக்குரிய ஆசனம் தவிர்ந்த வேறு எந்த இடத்திலும் அமர்தல் கூடாது. பரீட்சை மேற்பார்வையாளரின் விசேட அனுமதி இன்றி தன்னுடைய இடத்தை மாற்றக் கூடாது. தனக்கு ஒதுக்கப்பட்ட ஆசனத்தைத் தவிர வேறு இடத்தில் அமர்தல் மோசடி நோக்கத்துடன் செய்யப்பட்ட செயலாகக் கருதப்பட நேரிடும்.
5. பரீட்சை மண்டபத்தில் பூரண அமைதி பேணப்பட வேண்டும். எக் காரணம் கொண்டும் பரீட்சை மண்டபத்தினுள் பரீட்சை மேற்பார்வை பணிக்குழுவில் உள்ள ஒருவரைத் தவிர பரீட்சை மண்டபத்தினுள் அல்லது வெளியே இருக்கும் எவர் ஒருவருடனும் எந்தவித காரணத்திற்காகவும் கதைத்தல் அல்லது தகவல் பரிமாறல் அல்லது வேறு எந்தவிதமான கொடுக்கல் வாங்கலிலும் ஈடுபடுதல் முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளது.
6. பரீட்சை சுட்டெண்ணை மட்டும் கொண்டே பரீட்சார்த்தியின் விடைத்தாள்கள் இனங்காணப்படுகின்றமையால் விடைத்தாளில் தன்னுடைய பெயரை எழுதுதல், விடைத்தாளை இனங்கண்டு கொள்ளக்கூடிய வகையில் ஏதேனும் குறியீடு அல்லது குறிப்பு இடுதல், விடைத்தாளில் அநாகரிகமான அல்லது அவசியமற்ற விடயங்களை எழுதுதல், விடைத்தாளுடன் நாணயத்தாள்களை இணைத்தல் ஆகியவை முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளன. மேலும் வேறு எவரேனும் பரீட்சார்த்தியின் சுட்டெண்ணை தன்னுடைய விடைத்தாளில் எழுதுதலும் மோசடி நடவடிக்கை ஒன்றைச் செய்வதற்கு முயன்றதாகக் கருதப்படும். இனங்கண்டு கொள்ள முடியாத வகையில் சுட்டெண் எழுதப்பட்ட விடைத்தாள்களும் நிராகரிக்கப்படும்;
7. உமக்கு பரீட்சை மண்டபத்தினுள் வழங்கப்படும் தாள்கள் (பரீட்சை நடைபெறும் திகதிக்குரிய நோக்குனரின் குறுகிய கையொப்பம் மற்றும் திகதி இடப்பட்ட விடை எழுதும் தாள்கள்) தவிர வினாத்தாளிலோ அல்லது மேசையிலோ அல்லது வேறு ஏதேனும் இடத்திலோ எவற்றையும் எழுதுதல் கூடாது. இந்த அறிவுறுத்தல்களுக்கு மாறாக செயற்படுதல் மோசடி நோக்கத்துடன் செய்யப்பட்ட செயலாகக் கருதப்படும்.
8. பரீட்சார்த்திக்கு வழங்கப்படுகின்ற தாள்களை அல்லது விடை எழுதும் புத்தகத்தை கிழித்தல் அல்லது கசக்குதல் கூடாது. பரும்படி வேலைகளை செய்து பார்ப்பதற்காக உபயோகிக்கும் சகல தாள்களையும் தெளிவாக குறுக்காக கோடிட்டு விடைத்தாளுடன் இணைத்தல் அல்லது விடைத்தாளுடன் கையளித்தல் அல்லது வழங்கப்படுகின்ற அறிவுறுத்தலின் படி செய்தல் வேண்டும். பரீட்சை மண்டபத்தில் எழுதப்பட்ட எதனையும் வெளியே கொண்டு செல்லுதல் தடை செய்யப்பட்டுள்ளது. ஒரே வினாவிற்கான விடை இரு இடங்களில் எழுதப்பட்டிருப்பின் அவசியமற்ற விடையைத் தெளிவாக வெட்டி விட வேண்டும்.
9. பரீட்சையின் போது விடையளிப்பதற்காக உமக்கு வழங்கப்படுகின்ற தாள்கள் மற்றும் வேறு பொருட்களை பரீட்சை மண்டபத்திற்கு வெளியே கொண்டு செல்லுதல் தடை செய்யப்பட்டுள்ளது. இவ்வாறான அனைத்துப் பொருட்களும் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்திற்கு சொந்தமானதுடன் இவ் விதியினை மீறுதல் ஒரு தண்டனைக்குரிய செயற்பாடாகக் கருதப்படும்.
10. பரீட்சையின் போது விடையளிப்பதற்காக தனக்கு வழங்கப்படுகின்ற காகிதாதிகள் ஒவ்வொரு பரீட்சையின் போதும் தனக்ருகே வைத்துக் கொள்ளக்கூடிய எழுத்து மூலமான அனுமதியுள்ள பொருட்கள் தவிர்ந்த ஏனைய குறிப்புப் புத்தகங்கள், குறிப்புகள் உள்ளடங்கிய தாள்கள் அல்லது கடதாசித்துண்டுகள் போன்றவை பரீட்சை மண்டபத்தினுள் பரீட்சைக்குத் தோற்றும் சந்தர்ப்பத்தில் தன் வசம் அல்லது அருகே வைத்திருத்தல் கூடாது. அது போன்றே பரீட்சை மண்டபத்தினுள் கையடக்கத் தொலைபேசி, இலத்திரனியல் தொடர்பு சாதனங்கள்/கருவிகள் (Electronic Communication Instruments/ Devices) தன் வசம் அல்லது அருகே வைத்திருத்தல் மற்றும் அந்த சாதனங்கள்/கருவிகளை உபயோகித்து வெளி நபர்களின் உதவிகளைப் பெற்றுக் கொள்ளல் மற்றும் பரீட்சை நடைபெறும் போது வேறு நபர்களுக்கு மற்றும் சமூக ஊடகங்களுக்கு தகவல் அனுப்புதல் மோசடிச் செயற்பாடு என்பதுடன் தண்டனைக்குரிய குற்றமாகும்.
11. இலத்திரனியல் தொடர்பு சாதனங்கள்/கருவிகள் மேற்குறிப்பிட்ட 10ஆவது பந்தியில் விபரிக்கப்பட்டுள்ள செயற்பாடுகள் தொடர்பாக உபயோகிக்கப்பட்டது கண்டுபிடிக்கப்பட்டால் அச் சாதனங்கள்/கருவிகள் உரிய விசாரணை நடவடிக்கைகள் முடிவடையும் வரை பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தின் வசம் எடுக்கப்படுவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.
12. பரீட்சை மண்டபத்தில் அமர்ந்த பின்னர், பரீட்சைக்கு முன் அல்லது பரீட்சை நடைபெறும் சந்தர்ப்பத்தில் எந்தவொரு பரீட்சார்த்தியும் தன் அருகே பரீட்சைக்காக கொண்டு வருவதற்கு அனுமதிக்கப்படாத எந்தவொரு பொருளையும் அல்லது உபகரணத்தையும் வைத்திருத்தல் முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளது. பரீட்சை மேற்பார்வையாளர் மற்றும் அவரது பணிக் குழாம் கட்டளையிட்டால் சகல பரீட்சார்த்திகளும் தன் வசம் உள்ளவற்றை வெளிப்படுத்துவதற்கும் மற்றும் பரிசோதிப்பதற்கும் கட்டுப்படுவதுடன் இவ்வாறான தேவைப்பாட்டினை மீறுவது மோசடியான செயற்பாட்டை செய்வதற்கு முயற்சித்ததாகக் கருதப்படும்.
13. எவரேனும் ஒரு பரீட்சார்த்தி வேறு ஒரு பரீட்சார்த்தியின் விடைத்தாளிலிருந்து அல்லது புத்தகத்திலிருந்து அல்லது தாளிலிருந்து அல்லது குறிப்பெழுதிய தாள்களிலிருந்து அல்லது சமிக்ஞைகள் மூலம் அல்லது வேறு ஏதேனும் ஒன்றிலிருந்து பார்த்து எழுதுதல் அல்லது பார்த்து எழுத முயற்சித்தல் அல்லது மோசடியாக நடந்து கொள்ளல் என்பன குற்றமாகும். வேறு பரீட்சார்த்திக்கு உதவி செய்தல், வேறு பரீட்சார்த்தியிடமிருந்து அல்லது நபரிடமிருந்து அல்லது பரீட்சை பணிக் குழுவினரிடமிருந்து உதவி பெறுதல் குற்றம் என்பதுடன் விடையளித்து முடிந்த சகல தாள்களையும் எழுதிக் கொண்டிருக்கும் தாளுக்குக் கீழே வைத்து விடையளித்தல் வேண்டும். எழுதுகின்ற தாள்களை மேசையின் மேல் பரப்பி வைத்திருத்தல் கூடாது.
14. பரீட்சை ஆரம்பிக்கப்பட்டு வினாத்தாளுக்கு விடையளிக்கும் போது எக்காரணம் கொண்டும் குறுகிய நேரத்திற்குக் கூட பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே செல்வதற்கு எந்தவொரு பரீட்சார்த்திக்கும் இடமளிக்கப்பட மாட்டாது. எனினும், ஒரு பரீட்சார்த்திக்கு மலசலகூடத்திற்கு செல்வதற்காக பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே செல்ல வேண்டிய அவசியம் ஏற்பட்டால் பரீட்சை மேற்பார்வையாளரின் உதவி பணிக் குழுவின் உத்தியோகத்தர் ஒருவரின் கண்காணிப்பின் கீழ் பரீட்சார்த்திக்கு சிறிது நேரம் வெளியே செல்வதற்கு அனுமதிக்கப்படுவார். அவ்வாறு வெளியே செல்லும் முன்பும், மீண்டும் பரீட்சை மண்டபத்திற்குள் வரும் போதும் அவர் சோதனைக்கு உட்படுத்தப்படல் வேண்டும்.
15. பரீட்சை மண்டபத்தில் விடையளிக்கத் தொடங்குவதற்கு முன் அல்லது பின் உரிய பரீட்சார்த்திக்குப் பதிலாக போலிப் பரீட்சார்த்தி ஒருவர் தோற்றுதல் தண்டனைக்கு உள்ளாகக்கூடிய செயற்பாடாகும். ஆளடையாள அட்டையை மாற்றுதல் அல்லது போலி அடையாள அட்டையைச் சமர்ப்பித்தல் ஒரு மோசடிச் செயற்பாடாகக் கருதப்படும்.
16. பரீட்சார்த்தி ஒருவர் அல்லது பரீட்சார்த்தி அல்லாத ஒருவர் எந்தவொரு பரீட்சார்த்திக்கும் தவறான முறையில், மோசடி செய்யும் வகையில் உதவி செய்தல் ஒரு பாரிய குற்றமாக கருதப்படும்.
17. பரீட்சார்த்தி ஒருவர் கீழ்க் குறிப்பிடப்படும் அறிவுறுத்தல்களுக்கமைய செயற்படல் வேண்டும்:
    (i) சகல பரீட்சார்த்திகளும் தனது அனுமதிப்பத்திரத்தில் கையொப்பத்தினை உறுதி செய்து கொள்வதும், விண்ணப்பிக்கப்பட்ட பாடங்கள் மற்றும் அனுமதிப்பத்திரத்தில் குறிப்பிட்டுள்ள பாடங்களுக்கிடையில் பொருந்தாத தன்மை காணப்படின் பரீட்சைத் திணைக்களத்தில் விசாரித்து பரீட்சைக்கு முன் அதைத் திருத்திக் கொள்வதும் மேற்கொள்ளப்பட வேண்டும்;
    (ii) பரீட்சை ஆரம்பிப்பதற்கு அரை (1/2) மணித்தியாலத்திற்கு முன்னர் பரீட்சை மண்டபத்திற்கு சமுகமளித்தல் உசிதமானது என்பதுடன், பரீட்சை மண்டபம் நிச்சயமாகத் தெரியாதவிடத்து பரீட்சை ஆரம்பிக்கும் தினத்திற்கு முன்னரே அது குறித்து விசாரித்து பரீட்சை மண்டபத்தை சரியாக இனங்காணல் சிறந்தது;
    (iii) பரீட்சைக்குத் தோற்றும் பரீட்சார்த்தி ஒவ்வொரு பாடங்களுக்குத் தோற்றும் போதும் தனது ஆள் அடையாள அட்டையை வழங்கி தனது ஆள் அடையாளத்தை உறுதிப்படுத்திக் கொள்ளுதல் வேண்டும்.
        (a) ஆள் அடையாளத்தை உறுதிப்படுத்திக் கொள்வதற்குத் தேவையான ஆவணங்களை பரீட்சை மண்டபத்தில் சமர்ப்பிக்காவிடின், பரீட்சார்த்தியாய் இருத்தல் இரத்துச் செய்யப்பட நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதுடன், ஏதேனும் காரணத்தால் அதற்குத் தேவையான ஆவணங்களை பரீட்சை மண்டபத்திற்கு கொண்டு வர மறந்திருப்பின் அதனைப் பற்றி பரீட்சை மேற்பார்வையாளருக்கு அறிவித்து பரீட்சை முடிவடைவதற்கு முன்னர் அவற்றைச் சமர்ப்பிப்பதற்குரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும்.
        (b) சகல பரீட்சார்த்திகளும் தனது ஆள் அடையாளம் தெளிவாக வெளிப்படுத்தும் வகையில், முழு முகத்தையும் நன்றாக அடையாளம் காணக்கூடிய வகையில் பரீட்சை நடைபெறும் கால எல்லையில் பரீட்சை மண்டபத்தில் இருக்க வேண்டும்.
    (iv) பரீட்சார்த்தி புளூடூத் (Bluetooth) போன்ற இலத்திரனியல் தொடர்பு சாதனங்கள்/கருவிகளை (Electronic Communication Devices) உபயோகிக்கவில்லை என்பதனை உறுதி செய்து கொள்வதற்காக பரீட்சை மண்டபத்தில் தனது இரு காதுகளையும் தெளிவாகத் தெரியும் வகையில் வைத்திருத்தல் வேண்டும்;
    (v) பரீட்சை மண்டபத்தில் உமக்கு வழங்கப்படுகின்ற தாள்களை விடுத்து வேறு எவ்வித கடதாசிகளையும் விடையளிப்பதற்கு உபயோகிக்கக் கூடாது. எஞ்சிய கடதாசிகளை மற்றும் வேறு பொருட்களை அசுத்தப்படுத்தாது மீண்டும் உபயோகிக்கக்கூடிய வகையில் உமது மேசையின் மேல் வைக்க வேண்டும்;
    (vi) பரீட்சார்த்திகள் தங்களது பேனா, பென்சில், அழிறப்பர், அடிமட்டம், கேத்திரகணித உபகரணங்கள், வர்ணப் பென்சில் பெட்டி, வர்ண சோக் பெட்டி போன்றவற்றைக் கொண்டு வருதல் வேண்டும்;
    (vii) நீங்கள் உபயோகிக்கும் விடையளிக்கும் புத்தகம் மற்றும் சகல தாள்களிலும் விடையெழுத தொடங்கும் போது உடனடியாக சுட்டெண்ணைத் தெளிவாகக் குறிப்பிட வேண்டும். விடைத்தாள்களின் இருபுறமும் தெளிவாக, சுத்தமாக விடையெழுத வேண்டும். வினாவொன்றின் ஒரு பகுதிக்கு விடையெழுதிய பின் அவ் வினாவின் மற்றைய பகுதியை ஆரம்பிப்பதற்கு முன் ஒரு வரியையாவது வெறுமையாக விடுதல் வேண்டும். ஒவ்வொரு வினாக்களுக்குமான விடையினைப் புதிய பக்கத்தில் ஆரம்பித்தல் வேண்டும்;
    (viii) விடையளிக்கும் தாளின் இடதுபுற விளிம்புக்கோடு காணப்படுவது வினாக்களின் இலக்கங்களை எழுதுவதற்காகும். வலதுபுற விளிம்புக்கோடு ஒதுக்கப்பட்டிருப்பது மதிப்பிடுபவரின் உபயோகத்திற்காகும். அதனால் அவற்றில் எதுவும் எழுதுதலாகாது. உம்மால் விடையளிக்கப்பட்ட வினாக்களின் இலக்கங்களைப் பிழையாக இடுவது குழப்பத்திற்குக் காரணமாக அமையும் என்பதனால் வினா இலக்கத்தைச் சரியாக எழுதுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்;
    (ix) கணித வினாக்களுக்கு விடையளிக்கும் போது கணக்குச் செய்முறைகள் பார்த்த மற்றும் பரும்படி வேலைகள் அந்தந்த ஒழுங்கில் கணக்கிற்கான விடையைக் கண்டு பிடித்ததன் ஒரு பகுதியாகக் காட்டப்பட வேண்டும். அவசியமான இடங்களில் வரையப்படும் வரிப்படங்கள் மற்றும் படங்கள் சரியானவையாகவும் குறிப்பிடத்தக்க அளவு பெரிதானதாகவும் இருத்தல் வேண்டும்;
    (x) கட்டாயமான வினா மற்றும் தெரிவு செய்யப்பட வேண்டிய ஏனைய வினாக்கள் தொடர்பாக வினாப்பத்திரத்தில் ஆரம்பத்தில் குறிப்பிடப்பட்டுள்ள அறிவுறுத்தல்களைக் கவனமாக வாசித்தல் வேண்டும். வினாப்பத்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள அறிவுறுத்தல்களுக்கு ஏற்ப விடையளிக்கப்படாத சந்தர்ப்பங்களில் புள்ளிகள் வழங்கப்பட மாட்டாது;
    (xi) ஒவ்வொரு வினாவிற்கும் விடையளித்து முடிந்த பின் விடையளித்த புத்தகத்திற்கு மேலதிகமாக எழுதிய தாள்களை பக்க இலக்கங்களின் ஒழுங்கில் இணைத்து இடதுபுற மேல்மூலையில் கழறாத வகையில் கட்டுதல்/இணைத்தல் வேண்டும். விடைப்பத்திரத்தைக் கையளிக்கும் முன் சகல விடைத்தாள்களும் இணைக்கப்பட்டுள்ளனவா என்பதனை உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும். விடைப்பத்திரத்தைக் கையளித்த பின் பரீட்சை மண்டபத்திற்கு வெளியே கொண்டு செல்லப்பட்ட எந்தவொரு விடை எழுதிய தாளும் மதிப்பீட்டிற்கு உட்படுத்தப்பட மாட்டாது;
    (xii) உங்கள் விடைத்தாளை பரீட்சை மேற்பார்வையாளரிடம் அல்லது பணிக் குழுவின் உத்தியோகத்தர் ஒருவரிடம் கையளித்தல் வேண்டும். விடைப்பத்திரங்களை சேகரிக்கும் வரை உங்களது ஆசனத்தில் அமர்ந்திருத்தல் வேண்டும். அவ்வாறு செய்வதற்குத் தவறுவதானது, சிலவேளை உமது விடைப்பத்திரம் காணாமல் போவதற்கும் நீர் ஏதாவது பாடத்திற்கு சமுகமளிக்கவில்லை என்று கருதுவதற்கும் காரணமாக அமையும்;
    (xiii) ஏதாவது காரணத்துக்காக பரீட்சை மேற்பார்வையாளருடன் அல்லது பணிக் குழுவின் உத்தியோகத்தர் ஒருவருடன் கதைக்க வேண்டிய அவசியம் ஏற்படின், ஏனையவர்களுக்கு இடையூறு ஏற்படாத வகையில் மேசையில் இருமுறை தட்டுவதன் மூலம் சமிக்ஞை செய்தல் வேண்டும்.

பரீட்சைகள் ஆணையாளர் நாயகம்.

இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்,
பெலவத்தை,
பத்தரமுல்லை.

# பதவிகள் - வெற்றிடம்

## பதிவாளர் நாயகம் திணைக்களம்

சிங்கள மொழி பிறப்பு மற்றும் இறப்பு பதிவாளர் பதவி – கொழும்பு மாவட்டம்

இங்கு கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்ட பிரிவில் உள்ள பிறப்பு மற்றும் இறப்பு பதிவு செய்தல் பதிவாளர் பதவிக்காக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. விண்ணப்பதாரர் உரிய பிறப்பு மற்றும் இறப்பு பதிவு செய்தல் பிரிவினுள் நிரந்தர வதிவிடதாரராகவும் மற்றும் போதியளவான ஆதனத்திற்கு உரித்தான பிரதேசவாசிகளின் மதிப்பினைப் பெறும் ஆளுமையுடையவராக இருத்தல் வேண்டும்.

2. இந்தப் பதவிக்காக ஆண்/பெண் இருபாலாரும் விண்ணப்பிக்க இயலும்.

3. விண்ணப்பம் கோரப்படும் இறுதித் தினம், விண்ணப்பதாரரின் வயது 30 வருடங்களுக்கு குறையாதிருத்தல் வேண்டும் என்பதுடன், வயது 55 வருடங்களுக்கு மேற்படாதிருத்தல் வேண்டும். (இளைப்பாற்றப்படும் உச்ச வயதெல்லை 70 வருடங்கள் ஆகும்.)

4. பிரிவில் மக்களின் மொழித் தேவைக்கிணங்க இரண்டாம் மொழியில் கடமையினை மேற்கொள்ளும் இயலுமையுடன் இரண்டுக்கு மேற்படாத தவணைகளில் சிங்கள மொழிக்கான சிறப்பு சித்தி உட்பட க. பொ. த. (சா. த.) பரீட்சையில் குறைந்தது சிறப்புச் சித்திகள் இரண்டுடன் (02) ஆறு விடயங்களில் (06) சித்தி பெற்றிருத்தல் வேண்டும். அல்லது அதற்கு சமமான பரீட்சையில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.

**கருத்திற் கொள்ளவும்**.- க. பொ. த. (சா. த.) அல்லது அதற்கு சமமான பரீட்சையில் ஒரு விடயம் இரண்டு பகுதிகளாக சித்தியடைந்திருக்கும் சந்தர்ப்பங்களில், அது ஒரு விடயமாக கருதப்படல் வேண்டும். அந்த விடய பகுதிகள் இரண்டும் சித்தியடைந்திருந்தால் மாத்திரமே அவ்விடயம் சித்தியடைந்ததாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

5. பிரிவில் அனைவருக்கும் அல்லது அநேகமானவர்களுக்கு இலகுவாக நெருங்கக்கூடிய பிரிவின் மத்திய இடமொன்றில் அமைந்த பதவியின் கௌரவத்தினை பாதுகாக்கும் விதத்திலான கட்டிடத்தில் அலுவலகத்தினை அமைப்பதற்கும் இயலுமாயிருத்தல் வேண்டும்.

வைத்தியசாலையினுள் பிறப்பு, இறப்புக்களினை பதிவு செய்யும் பிறப்பு, இறப்பு பதிவாளர்களினை சேர்த்துக் கொள்ளும் பொழுது விண்ணப்பதாரர் அரசாங்க வைத்தியசாலையில் போதுமான அலுவலக வசதி கிடைக்கப்பெறாத சந்தர்ப்பங்களில் வைத்தியசாலைக்கு 01 கி. மீ. வரையிலான தூரத்தில் பிரிவில் அமைந்துள்ள பொருத்தமான வேறு கட்டிடத்தில் அலுவலகத்தினை அமைப்பதற்கு இயலுமாயிருத்தல் வேண்டும்.

6. விண்ணப்பம் கோரப்படும் பிறப்பு மற்றும் இறப்பு பதிவு செய்தல் பிரிவிற்கு உட்புகுத்தப்படும் கிராம பட்டியல்கள்/ கிராம அலுவலர் பிரிவு, கல்வி மற்றும் ஏனைய தகைமைகள் ஆகிய மேலதிக விபரங்கள் கீழ்க் குறிப்பிடப்படும் அட்டவணையில் குறிப்பிடப்பட்ட மாவட்டச் செயலகம், பிரதேச செயலகம் அல்லது உரிய காணி மற்றும் மாவட்டச் செயலகம், கிராம அலுவலர் அலுவலகம், சமுர்த்தி அபிவிருத்திச் சங்க அலுவலகம் மற்றும் தபால் அலுவலகம் ஆகிய பிரிவின் பிரசித்தமான இடங்களில் காட்சிப்படுத்தப்பட்டுள்ள அறிவித்தல்களில் பார்த்துக்கொள்ள இயலும்.

7. இதற்கு தேவையான விண்ணப்பங்கள் மற்றும் கிராம பட்டியல்கள்/ கிராம அலுவலர் பிரிவுகள் உள்ளடங்கிய “இணைப்பு 1” உரிய மாவட்டத்தின் மாவட்டச் செயலாளர் (அரசாங்க அதிபர்) அலுவலகத்தில் மற்றும் உரிய காணி மற்றும் மாவட்டப் பதிவகத்தில் அல்லது பிரதேச செயலகத்தில் பெற்றுக்கொள்ள இயலும். விண்ணப்பம் பதிவாளர் நாயகம் திணைக்களத்தின் வெப் தளத்திலும் (www.rgd.gov.lk) பெற்றுக்கொள்ள இயலும்.

8. பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் 2024, ஏப்பிறல் மாதம் 22 ஆந் திகதி அல்லது அதற்கு முன்பு அட்டவணையில் குறிப்பிடப்பட்ட முகவரிக்கு கிடைக்குமாறு பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும்.

டபிள்யு. ஆர். ஏ. என். எஸ். விஜயசிங்க,
பதிவாளர் நாயகம்.

பதிவாளர் நாயகம் திணைக்களம்,
இல. 234/A3, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை,
பத்தரமுல்லை,
2024, மாச்சு 06.

**அட்டவணை**

| மாவட்டம் | பிரதேச செயலகப் பிரிவு | விண்ணப்பம் கோரப்படும் பிரிவும் பதவியும் | விண்ணப்பம் அனுப்பப்பட வேண்டிய முகவரி |
|---|---|---|---|
| கொழும்பு | திம்பிரிகஸ்யாய | நய்ன்வேல்ஸ் வைத்தியசாலை பிரிவின் பிறப்பு, இறப்பு பதிவாளர் பதவி | மாவட்டச் செயலாளர்/ மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்டச் செயலகம், கொழும்பு. |

03-387

# பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும்

## சுகாதார அமைச்சு

### துணை மருத்துவ சேவையின் பயிற்சி நெறிகளுக்கு மாணவர்களை ஆட்சேர்த்தல் - 2024

சுகாதார அமைச்சின் துணை மருத்துவ சேவையின் பின்வரும் கற்கை நெறிகளுக்கு ஆட்சேர்ப்பு செய்வதற்கு தகைமைகளைக் கொண்டுள்ள இலங்கை பிரசைகளிடமிருந்து 2024.03.22 ஆம் திகதி முதல் 2024.04.25 ஆம் திகதி வரை விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. இந்த அமைச்சின் உத்தியோகபூர்வ இணையதளத்தின் (www.health.gov.lk) ஊடாக மாத்திரமே இதுற்காக விண்ணப்பிக்க முடியும்.

1. **கவனிக்க வேண்டியவை :**

1.1. ஒரு விண்ணப்பதாரர் ஒரு விண்ணப்பத்தை மட்டுமே சமர்ப்பிக்க முடியும். ஒன்றுக்கும் மேற்பட்ட விண்ணப்பங்களை சமர்ப்பிக்கும் விண்ணப்பதாரர்களின் அனைத்து விண்ணப்பங்களும் எவ்வித அறிவிப்புகளும் இன்றி நிராகரிக்கப்படும். 2018, 2019 மற்றும் 2020 ஆகிய மூன்று வருடங்களிலும் க.பொ.த (உ. தர) பரீட்சையில் சித்தியடைந்திருந்தாலும் ஒருவருக்கு ஒரு விண்ணப்பத்தை மட்டுமே சமர்ப்பிக்க முடியும். அத்தகைய விண்ணப்பதாரர்கள் தமது விருப்பத்திற்கு ஏற்ப தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரு வருடத்திற்காக மாத்திரம் விண்ணப்பிக்கலாம். இரண்டு அல்லது மூன்று வருடங்களுக்காகவும் விண்ணப்பங்கள் சமர்ப்பிக்கக்கூடாது. அவ்வாறின்றி இரண்டு அல்லது மூன்று வருடங்களுக்காகவும் விண்ணப்பங்களை சமர்ப்பிக்கும் விண்ணப்பதாரர்களின் அனைத்து விண்ணப்பங்களும் எவ்வித அறிவிப்புகளும் இன்றி நிராகரிக்கப்படும்.

1.2. கடந்த பல ஆண்டுகளாக மேற்கொள்ளப்பட்ட ஆட்சேர்ப்பு தொடர்பாக அவதானம் செலுத்தும் போது, ஒரு மாணவர் அரசாங்கத்தின் இலவசக் கல்விச் சலுகையின் கீழ் பல்வேறு அரச நிறுவனங்களினால் நடாத்தப்படும் கற்கை நெறிகள் பலவற்றில் இணைவதால், தகுதியுடைய பல மாணவர்களுக்கு இதுபோன்ற ஒரு வாய்ப்புக்கூட கிடைப்பதில்லை என்பது அவதானிக்கப்பட்டது. இது தவிர இந்த நிலை காரணமாக அரசாங்கத்தின் பணம் வீண் விரையமாகி வருவதுடன், பாடநெறியின் இறுதியில் எதிர்பார்த்த எண்ணிக்கையில் பயிற்றுவிக்கப்பட்ட தொழில்வல்லுனர்களின் எண்ணிக்கை இல்லாத காரணத்தால் சம்பந்தப்பட்ட நிறுவனங்களின் திட்டமிட்ட இலக்குகளை அடைய முடியாதுள்ளது. எனவே, மேற்படி நிலைமையைக் குறைப்பதற்கு ஒவ்வொரு விண்ணப்பதாரர்களுக்கும் ஒரு சந்தர்ப்பத்தையாவது வழங்குவதற்குத் தேவையான ஏற்பாடுகள் இந்த வர்த்தமானி அறிவித்தலின் பந்தி இலக்கம் 6 இல் வெளியிடப்பட்டுள்ளன. அதன்படி, இலக்கம் 6.1 முதல் 6.5 வரையிலான துணைப் பந்திகளில் விரிவாக குறிப்பிடப்பட்டுள்ளவாறு தகுதியற்ற ஒருவர் இதுற்காக விண்ணப்பித்தல் கூடாது. எவ்வாறாயினும், அத்தகைய தகுதியற்றவர்கள் இதற்கு விண்ணப்பித்து, பின்னர் கண்டறியப்பட்டால், வர்த்தமானி அறிவித்தலின் துணைப் பந்தி 7.3 இன்படி அவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படும்.

1.3. கடந்த ஆட்சேர்ப்புகளில், உண்மைக்குப் புறம்பான தகவல்கள் (தவறான பரீட்சை ஆண்டுகள், பாடங்கள், பெறப்பட்ட மதிப்பெண்கள் போன்றவை) உள்ளிட்டு விண்ணப்பங்கள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளமை அவதானிக்கப்பட்டுள்ளதுடன், சில விண்ணப்பதாரர்கள் பொய்யான தகவல்களை உள்ளிட்டு தயாரிக்கப்பட்ட சான்றிதழ்கள் நேர்முகப் பரீட்சைக்கு சமர்ப்பித்துள்ளமையும் அவதானிக்க முடிந்தது. இது ஒரு பாரிய தவறாகும். எனவே, எந்தவொரு விண்ணப்பதாரியும் அவர் சமர்ப்பிக்கும் இணையவழி விண்ணப்பத்தில் தவறான தகவல்களை உள்ளிடக்கூடாது. தவறான தகவல்களை உள்ளிட்டு சமர்ப்பிக்கப்படும் அனைத்து விண்ணப்பங்களும் எவ்வித அறிவிப்புகளும் இன்றி நிராகரிக்கப்படும் என்பதுடன், அத்தகைய விண்ணப்பதாரர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுப்பதற்கு குற்றப் புலனாய்வுத் திணைக்களத்திற்கு அனுப்பப்பட்டு, அவர்களின் பெயர்கள் மீண்டும் அரச சேவைக்கு இணைய முடியாதவர்களின் கருப்புப் பட்டியலில் சேர்க்கப்படும்.

1.4. ஒவ்வொரு விண்ணப்பதாரரும் முதலில் இந்த வர்த்தமானி அறிவித்தலில் மற்றும் இணையத்தளத்தில் குறிப்பிடப்பட்டுள்ள இணையவழி விண்ணப்பத்தை பூர்த்தி செய்வதற்கான அறிவுறுத்தல் படிவத்தில் குறிப்பிடப்பட்டுள்ள அறிவுறுத்தல்களை நன்றாக படித்துப் புரிந்து கொண்டு, இந்த கற்கைநெறிக்கான விண்ணப்பத்தைச் சமர்ப்பிக்கத் தகுதியானவரா என்பதை உறுதிப்படுத்தல் வேண்டும். அதன் பின்னர் வர்த்தமானி அறிவித்தலின் 8.4 பந்தியின்படி, எந்தவொரு இலங்கை வங்கிக்கிளையில் 1000.00 பணத்தை செலுத்தி பெறப்பட்ட பற்றுச்சீற்று, 10.4, 10.5 மற்றும் 10.6 ஆகிய பந்திகளில் குறிப்பிடப்பட்டுள்ள ஆவணங்களை தயார்செய்து கொண்டு விண்ணப்பத்தைப் பூர்த்தி செய்வதன் மூலம் விண்ணப்பத்தை சமர்ப்பிப்பதற்கான செயல்முறையை வெற்றிகரமாக மேற்கொள்ள முடியும்.

02. விண்ணப்பங்கள் கோரப்படும் கற்கை நெறிக்கள் பற்றிய தகவல்கள் :

| குறியீட்டு இல. | சேவை | பயிற்சி நெறியின் பெயர் | பயிற்சி காலம் | பயிற்சி நெறி வழங்கப்படும் மொழி |
|---|---|---|---|---|
| 1. | துணை மருத்துவ சேவை | பாடசாலை பற்சிகிச்சையாளர் | 02 வருடங்கள் | ஆங்கிலம் |
| 2. | | சுகாதார பூச்சியியல் அலுவலர் | 02 வருடங்கள் | ஆங்கிலம் |
| 3. | | இதயத்துடிப்பு பதிவாளர் | 02 வருடங்கள் | ஆங்கிலம் |
| 4. | | பொது சுகாதார ஆய்வுகூட தொழில்நுட்பவியலாளர் | 1 ¼ வருடங்கள் | ஆங்கிலம் |
| 5. | | மருந்து கலவையாளர் | 01 வருடங்கள் | ஆங்கிலம் |

**அட்டவணை இலக்கம் 01**

03. பதவி தொடர்பான கல்வி மற்றும் பிற விஷேட தகைமைகள் :

| தொடர் இலக்கம் | பயிற்சி நெறியின் பெயர் | க. பொ. த. (சா. தர) தகைமை | க. பொ. த. (உ. தர) தகைமை | பயிற்சிக்கான பிற தகைமைகள் மற்றும் விஷேட தகைமைகள் |
|---|---|---|---|---|
| 1. | பாடசாலை பற்சிகிச்சையாளர் | சிங்கள மொழி / தமிழ்மொழி, கணிதம், விஞ்ஞானம் மற்றும் மேலும் ஒரு பாடத்தில் குறைந்த பட்சம் திறமை சித்தியுடன் இரண்டு அமர்வுகளுக்கு மேற் படாமல் ஆங்கிலம் உட்பட ஆறு (06) பாடங்களில் க.பொ.த (சா.த.) சித்தியடைந்திருத்தல் | 2018 ஆம் ஆண்டில் அல்லது 2019 ஆம் ஆண்டின் (பழைய பாடத்திட்டம்) அல்லது 2019 ஆம் ஆண்டின் (புதிய பாடத் திட்டம்) அல்லது 2020 ஆம் ஆண்டின் (பழைய பாடத்திட்டம்) அல்லது 2020 ஆம் ஆண்டின் (புதிய பாடத்திட்டம்) ஆகிய பரீட்சைகளில் ஒன்றில் க.பொ.த. (உ.தர) பரீட்சையில் **உயிரியல்** பாடத்தில் திறமை சித்தியுடன் இரசாயனவியல், பௌதீக வியல், விவசாயவியல் ஆகிய பாடங்களில் இரண்டு (02) பாடங்களுடன் மூன்று (03) பாடங்களில் ஒரே அமர்வில் சித்தியடைந்திருத்தல் | 2024.04.25 ஆம் திகதி க்கு 18 வயதிற்கு குறை யாமலும் 30 வயதிற்கு மேற்படாமலும் இருக்க வேண்டும்.<br><br>பெண்கள் மாத்திரம் விண்ணப்பிக்கலாம்.<br><br>உயரம் 4 அடி 10 அங்குலம் அல்லது அதற்கு மேல் இருத்தல் வேண்டும். (147.3 CM)<br><br>விவாகம் ஆகாதவராக இருக்க வேண்டும். |
| 2. | சுகாதார பூச்சியியல் அலுவலர் | சிங்கள மொழி / தமிழ்மொழி, கணிதம், விஞ்ஞானம் மற்றும் மேலும் ஒரு பாடத்தில் குறைந்த பட்சம் திறமை சித்தியுடன் இரண்டு அமர்வுகளுக்கு மேற் படாமல் ஆங்கில மொழி உட்பட ஆறு (06) பாடங்களில் க.பொ.த. (சா.த) சித்தியடைந் திருத்தல் | 2018 ஆம் ஆண்டில் அல்லது 2019 ஆம் ஆண்டின் (பழைய பாடத்திட்டம்) அல்லது 2019 ஆம் ஆண்டின் (புதிய பாடத் திட்டம்) அல்லது 2020 ஆம் ஆண்டின் (பழைய பாடத்திட்டம்) அல்லது 2020 ஆம் ஆண்டின் (புதிய பாடத்திட்டம்) ஆகிய பரீட்சைகளில் ஒன்றில் க.பொ.த. (உ.தர) பரீட்சையில் **உயிரியல்** பாடத்தில் திறமை சித்தியுடன் இரசாயனவியல், பௌதீகவியல், விவசாயவியல் ஆகிய பாடங்களில் இரண்டு (02)பாடங்களுடன் மூன்று (03) பாடங்களில் ஒரே அமர்வில் சித்தியடைந்திருத்தல் | 2024.04.25 ஆம் திகதி க்கு 18 வயதிற்கு குறை யாமலும் 30 வயதிற்கு மேற்பட மலும் இருக்க வேண்டும்.<br><br>ஆண்கள் மாத்திரம் விண்ணப்பிக்கலாம். |

**அட்டவணை இலக்கம் 01** (தொடர்ச்சி)

| தொடர் இலக்கம் | பயிற்சி நெறியின் பெயர் | க. பொ. த. (சா. தர) தகைமை | க. பொ. த. (உ. தர) தகைமை | பயிற்சிக்கான பிற தகைமைகள் மற்றும் விஷேட தகைமைகள் |
|---|---|---|---|---|
| 3. | இதயத்துடிப்பு பதிவாளர் | சிங்கள மொழி / தமிழ்மொழி, கணிதம், விஞ்ஞானம் மற்றும் மேலும் ஒரு பாடத்தில் குறைந்த பட்சம் திறமை சித்தியுடன் இரண்டு அமர்வுகளுக்கு மேற்படாமல் ஆங்கில மொழி உட்பட ஆறு (06) பாடங்களில் க.பொ.த (சா.த.) இல் சித்தியடைந்திருத்தல் | 2018 ஆம் ஆண்டில் அல்லது 2019 ஆம் ஆண்டின் (பழைய பாடத்திட்டம்) அல்லது 2019 ஆம் ஆண்டின் (புதிய பாடத் திட்டம்) அல்லது 2020 ஆம் ஆண்டின் (பழைய பாடத்திட்டம்) அல்லது 2020 ஆம் ஆண்டின் (புதிய பாடத்திட்டம்) ஆகிய பரீட்சைகளில் ஒன்றில் க.பொ.த (உ.தர) பரீட்சையில் **உயிரியல்** பாடத்தில் திறமை சித்தியுடன் இரசாயனவியல், பௌதீகவியல் ஆகிய இரண்டு(02)பாடங்களுடன் மூன்று (03) பாடங்களில் ஒரே அமர்வில் சித்தியடைந்திருத்தல் | 2024.04.25 ஆம் திகதிக்கு 18 வயதிற்கு குறையாமலும் 30 வயதிற்கு மேற்படாமலும் இருக்க வேண்டும்.<br><br>ஆண்/ பெண் இரு பாலாரும் விண்ணப்பிக்கலாம். |
| 4. | பொது சுகாதார ஆய்வுகூட தொழில் நுட்பவியலாளர் | சிங்கள மொழி / தமிழ்மொழி, கணிதம், விஞ்ஞானம் மற்றும் மேலும் ஒரு பாடத்தில் குறைந்த பட்சம் திறமை சித்தியுடன் இரண்டு அமர்வுகளுக்கு மேற்படாமல் ஆங்கில மொழி உட்பட ஆறு (06) பாடங்களில் க.பொ.த. (சா.த.) இல் சித்தியடைந்திருத்தல் | 2018 ஆம் ஆண்டில் அல்லது 2019 ஆம் ஆண்டின் (பழைய பாடத்திட்டம்) அல்லது 2019 ஆம் ஆண்டின் (புதிய பாடத் திட்டம்) அல்லது 2020 ஆம் ஆண்டின் (பழைய பாடத்திட்டம்) அல்லது 2020 ஆம் ஆண்டின் (புதிய பாடத்திட்டம்) ஆகிய பரீட்சைகளில் ஒன்றில் க.பொ.த. (உ.தர) பரீட்சையில் **உயிரியல்** பாடத்தில் திறமை சித்தியுடன் இரசாயனவியல், பௌதீகவியல், விவசாயவியல் ஆகிய பாடங்களில் இரண்டு (02) பாடங்களுடன் மூன்று (03) பாடங்களில் ஒரே அமர்வில் சித்தியடைந்திருத்தல் | 2024.04.25 ஆம் திகதிக்கு 18 வயதிற்கு குறையாமலும் 30 வயதிற்கு மேற்பட மலும் இருக்க வேண்டும்.<br><br>ஆண்/ பெண் இரு பாலாரும் விண்ணப்பிக்கலாம். |
| 5. | மருந்து கலவையாளர் | சிங்கள மொழி / தமிழ்மொழி, கணிதம், விஞ்ஞானம் மற்றும் மேலும் ஒரு பாடத்தில் குறைந்த பட்சம் திறமை சித்தியுடன் இரண்டு அமர்வுகளுக்கு மேற்படாமல் ஆங்கில மொழி உட்பட ஆறு (06) பாடங்களில் க.பொ.த. (சா.த.) இல் சித்தியடைந்திருத்தல் | 2018 ஆம் ஆண்டில் அல்லது 2019 ஆம் ஆண்டின் (பழைய பாடத்திட்டம்) அல்லது 2019 ஆம் ஆண்டின் (புதிய பாடத் திட்டம்) அல்லது 2020 ஆம் ஆண்டின் (பழைய பாடத்திட்டம்) அல்லது 2020 ஆம் ஆண்டின் (புதிய பாடத் திட்டம்) ஆகிய பரீட்சைகளில் ஒன்றில் க.பொ.த. (உ.தர) பரீட்சையில் **இரசாயனவியல்** பாடத்தில் திறமை சித்தியுடன் பௌதீகவியல், உயிரியல், இணைந்த கணிதம் ஆகிய பாடங்களில் இரண்டு (02) பாடங்களுடன் மூன்று (03) பாடங்களில் ஒரே அமர்வில் சித்தியடைந்திருத்தல் | 2024.04.25 ஆம் திகதிக்கு 18 வயதிற்கு குறையாமலும் 30 வய திற்கு மேற்படாமலும் இருக்க வேண்டும்.<br><br>ஆண்/ பெண் இரு பாலாரும் விண்ணப்பிக்கலாம். |

**அட்டவணை இலக்கம் 02**

04. **கற்கை நெறிக்கு தெரிவு செய்யும் முறை** :

4.1. துணை மருத்துவ சேவையின் பதவிகளுக்கு ஆட்சேர்ப்பு செய்வதற்கான நடைமுறைகள் மற்றும் அதனுடன் தொடர்பாக காலத்திற்குக் காலம் மேற்கொள்ளப்பட்ட திருத்தங்களுக்கு அமைய தகைமைகளைக் கொண்டுள்ள விண்ணப்பதாரிகளிடமிருந்து ஆட்சேர்ப்பு மேற்கொள்ளப்படும் என்பதுடன், விண்ணப்பதாரர்களின் க.பொ.த. (உ.தர) Z புள்ளிகளின் அடிப்படையில், அடையாளமிட்ட கற்கை நெறிகளின் முன்னுரிமை வரிசையைக் கருத்தில் கொண்டு ஒரு பயிற்சி கற்கை நெறிக்கு மட்டுமே தெரிவு செய்யப்படும்.

4.2. கணிக்கப்பட்ட வெற்றிடங்களின் எண்ணிக்கை மற்றும் பயிற்சி திறன், பயிற்சி கல்லூரிகளில் காணப்படும் வசதிகள், நாட்டின் தற்போதைய நிதி நிலைமை மற்றும் பிற விஷேட நிலைமைகள் ஆகியவற்றை கருத்தில் கொண்டு பயிற்சிக்கு ஆட்சேர்ப்பு செய்யப்பட வேண்டிய எண்ணிக்கை தீர்மானிக்கப்படும் என்பதுடன், நாடளாவிய ரீதியில் ஆட்சேர்ப்பு செய்வதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ள மொத்த எண்ணிக்கை ஒவ்வொரு மாகாணத்தின் சனத்தொகையின் அடிப்படையில், சனத்தொகை விகிதாசாரத்திற்கு ஏற்ப பிரிக்கப்பட்டு ஒவ்வொரு மாகாணத்திலுமிருந்தும் ஆட்சேர்ப்பு செய்ய வேண்டிய எண்ணிக்கை தீர்மானிக்கப்படும்.

4.3. அதன்பின்னர் ஒவ்வொரு மாகாணத்திலுமிருந்து ஆட்சேர்ப்பு செய்ய வேண்டிய எண்ணிக்கை உரிய மாகாணத்திலிருந்து ஒவ்வொரு பரீட்சைக்கும் விண்ணப்பித்து தேவையான குறைந்தபட்ச தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ள விண்ணப்பதாரர்களின் எண்ணிக்கையின் விகிதாசாரத்திற்கு பிரிக்கப்பட்டு உரிய மாகாணத்திலிருந்து ஒவ்வொரு பரீட்சையிலும் ஆட்சேர்ப்பு செய்ய வேண்டிய எண்ணிக்கை தீர்மானிக்கப்படும்.

4.4. பின்னர் அந்த ஒவ்வொரு பரீட்சைகளில் இருந்தும் ஆட்சேர்ப்பு செய்யவேண்டிய எண்ணிக்கை அந்த பரீட்சையில் உயிரியல் விஞ்ஞான பாடத்துறையில் அல்லது பௌதீக விஞ்ஞான பாடத்துறையில் விண்ணப்பித்த, குறைந்தபட்ச தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ள விண்ணப்பதாரிகளின் எண்ணிக்கைக்கு விகிதாசாரமாக பிரிக்கப்பட்டு உரிய மாகாணத்திலிருந்து ஒவ்வொரு பரீட்சைக்கும் ஒவ்வொரு விடயத்துறைகளின் கீழ் அதிகூடிய Z புள்ளிகளைப் பெற்ற விண்ணப்பதாரர்களில் இருந்து அடையாளமிட்ட கற்கை நெறிகளின் முன்னுரிமை வரிசையையும் கருத்தில் கொண்டு மாகாண அடிப்படையில் தெரிவு செய்யப்படும்.

4.5. ஒரு குறிப்பிட்ட மாகாணத்திற்கு மேற்குறிப்பிடப்பட்டவாறு ஒதுக்கப்பட்டுள்ள வெற்றிடங்களின் எண்ணிக்கையை அந்த மாகாணத்திற்கான தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ள விண்ணப்பதாரர்களால் நிரப்ப முடியாத பட்சத்தில் அந்த வெற்றிடங்களின் எண்ணிக்கை நாட்டின் ஏனைய மாகாணங்களுக்கிடையில் அந்த மாகாணங்களின் சனத்தொகை விகிதத்தில் மீள்பகிர்வு செய்யப்படும்.

**குறிப்பு** :

(அ) ஒவ்வொரு விண்ணப்பதாரரும் மேலே 4.1 பந்தியின்படி தெரிவு செய்யப்பட்ட கற்கை நெறிக்கு இணைதல் வேண்டும் என்பதுடன், வேறு கற்கை நெறிகளுக்கு இணைவதற்கோ அல்லது மாறுவதற்கோ சந்தர்ப்பம் வழங்கப்பட மாட்டாது.

(ஆ) மேலும், கற்கை நெறியில் பதிவு செய்யப்படாத மாணவர்களுக்காக மீண்டும் ஒருமுறை மாணவர்களை தெரிவு செய்வதன் மூலம் அவர்கள் ஒவ்வொரு கற்கை நெறிகளுக்கிடையே மாறிக்கொள்வதன் மூலம் ஏற்படும் நெருக்கடி நிலையை தவிர்ப்பதற்கு ஒருமுறை மாத்திரம் மாணவர்கள் தெரிவு செய்யப்படுவதுடன், எந்த கற்கை நெறிக்கும் மீண்டுமொரு முறை மாணவர்கள் இணைக்கப்பட மாட்டார்கள்.

05. **தகுதிகள்** : அனைத்து விண்ணப்பதாரர்களும் -

5.1. இலங்கை பிரசையாக இருத்தல் வேண்டும்.

5.2. விண்ணப்பதாரர்கள் நன்நடத்தை உடையவராகவும், சிறந்த உடல் மற்றும் உள ஆரோக்கியத்தைக் கொண்டவராகவும் இருத்தல் வேண்டும்.

5.3. விண்ணப்பதாரர்கள் தங்கள் வதிவிடத்தை உறுதிப்படுத்துவதற்கு கிராம அலுவலர் சான்றிதழை சமர்ப்பித்தல் வேண்டும்.

06. **கற்கை நெறிக்கு விண்ணப்பிப்பதற்கு அல்லது இணைவதற்கு தகுதியற்றவர்கள்** :

6.1. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் கீழுள்ள அரசாங்க பல்கலைக்கழகம் ஒன்றில்/ அரசாங்க பல்கலைக்கழக கல்லூரியொன்றில் க.பொ.த. (உ.தர) தகைமைகளுடன் ஆட்சேர்ப்பு செய்யப்படும் பட்டப் படிப்பைத் தொடர்வதற்காக "அரசாங்க இலவசக் கல்விச் சலுகைகள்" இன் கீழ், உள்ளக மாணவராகப் பதிவு செய்தவர்கள்/ கற்றுக்கொண்டிருப்பவர்கள்.

6.2. தேசிய கல்வியியல் கல்லூரியொன்றில் க.பொ.த. (உ.தர) தகைமைகளுடன் ஆட்சேர்ப்பு செய்யப்படும் கற்கைக்காக பதிவு செய்தவர்கள்/கற்றுக்கொண்டிருப்பவர்கள்.

6.3. சுகாதார அமைச்சின் கீழ் அல்லது வேறு ஏதாவது அரச நிறுவனம் அல்லது க.பொ.த. (உ.தர) தகைமைகளுடன் ஆட்சேர்ப்பு செய்யப்பட்ட முழுநேர கற்கைக்காக பதிவு செய்தவர்கள்/கற்கையை தொடர்பவர்கள்.

6.4 மேலே 6.1, 6.2 மற்றும் 6.3 இன் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள நிறுவனமொன்றில் கற்கைக்காக பதிவு செய்துள்ள மாணவர்கள் இந்த வர்த்தமானி அறிவித்தல் வெளியான பிறகு, அவர்கள் தங்கள் பதிவை ,ரத்து செய்தாலும், அவர்கள் இதற்காக விண்ணப்பிக்க/இணைவதற்கு தகுதி பெற மாட்டார்கள். மேலும் வர்த்தமானி அறிவித்தல் வெளியான பிறகும்/ நேர்முகப்பரீட்சை நடாத்திய பிறகும் மேலே குறிப்பிடப்பட்டுள்ள நிறுவனங்களுக்குரிய கற்கைகளுக்கு பதிவு செய்து பின்னர் அந்த பதிவை இரத்து செய்தாலும், அவர்களும் இந்த கற்கை நெறியில் இணைவதற்கு தகுதி பெற மாட்டார்கள்.

6.5 திருமணம் செய்தவர்கள் அல்லது விவாகரத்து செய்தவர்கள் (இது பாடசாலை பற்சிகிச்சையாளர் கற்கை நெறிக்கு மாத்திரம் பொருந்தும்)

07. **ஏனைய விடயங்கள்** :

7.1. நீங்கள் ஏதாவது பல்கலைக்கழகம் ஒன்றில் பட்டப்படிப்பை பூர்த்தி செய்தவராக இருந்தால், அந்தப் பட்டம் நடைமுறைப்படுத்திய திகதியானது (Effective Date) இந்த கற்கைநெறிக்கான விண்ணப்பத் திகதிக்கு அதாவது 2024.03.22 இற்கு முந்திய திகதியாக இருக்க வேண்டும்.

7.2. மேற்படி சகல நிபந்தனைகளையும் பூர்த்தி செய்திருந்தாலும் கட்டாயமாக நீங்கள் விண்ணப்பிக்கும் இந்த கற்கை நெறிகளுக்கு அனுமதிக்கப்படுவீர்கள் என இந்த வர்த்தமானி அறிவித்தலில் எந்தவொரு இடத்திலும் அல்லது பந்தியிலும் **குறிப்பிடப்படவில்லை** என்பதை கவனத்திற் கொள்ளல் வேண்டும். குறிப்பிடப்பட்டுள்ள சகல நிபந்தனைகளைப் பூர்த்தி செய்திருந்தாலும் தகுதியைப் பெற போதுமான Z புள்ளியை பெறாத விடத்து அல்லது இங்கு குறிப்பிடப்பட்டுள்ள ஏனைய நிபந்தனைகளைப் பூர்த்தி செய்யவில்லை என்றால், அவர்கள் எவ்விதத்திலும் இப்பயிற்சிக்கு தகுதியற்றவர்களாகவே கருதப்படுவார்கள்.

7.3. மேலே 6.1, 6.2 மற்றும் 6.3 இன் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள நிறுவனமொன்றில் முழு நேர கற்கைக்காக பதிவு செய்துள்ள மாணவர்கள்/ கற்கை நெறிகளை தொடர்பவர்கள் அல்லது 6.4 மற்றும் 6.5 பந்திகளில் குறிப்பிடப்பட்டுள்ள தகுதியற்றவர்கள் இதற்காக விண்ணப்பித்து, பின்னர் கண்டறியப்பட்டால் உரிய கற்கையிலிருந்து/பதவியிலிருந்து நீக்கப்படுவதுடன் அதுவரை அரசாங்கத்தினால் அவருக்காக செலவிடப்பட்ட சகல கொடுப்பனவுகளும் அவரிடமிருந்து அறவிடப்படும். அத்துடன் அவர்களின் பெயர்கள் மீண்டும் அரசாங்க சேவையில் இணைய முடியாதவர்களின் பட்டியலில் உள்வாங்குவதற்கும் நடவடிக்கை எடுக்கப்படும்.

7.4. கல்வித் தகைமைகள் மற்றும் ஏனைய சகல அனைத்து தகைமைகளும் விண்ணப்ப இறுதித்தினமான 2024.04.25 ஆம் திகதிக்கு சகல விதத்திலும் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

7.5. மேலும், ஏதாவது கற்கை நெறிக்கு வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகள் இன்றி விண்ணப்பித்தால், அதனால் விண்ணப்பதாரர்களுக்கு பின்னர் ஏற்படக்கூடிய அசௌகரியங்களுக்கு இந்த அமைச்சு எந்த பொறுப்பையும் ஏற்காது.

08. **விண்ணப்பிக்கும் முறை** :

8.1. மேற்படி பயிற்சி நெறிக்கு சுகாதார அமைச்சின் உத்தியோகபூர்வ இணையத்தளத்தின் (www.health.gov.lk) ஊடாக விண்ணப்பிக்க முடியும். அதற்காக இந்த அமைச்சின் இணையத்தளத்தில் உரிய பகுதியில் உள்ள விண்ணப்பத்தை பூர்த்தி செய்து அனுப்ப வேண்டும். விண்ணப்பத்தை நிரப்புவதற்கு **எமது இணையத்தளத்தின் இந்த வர்த்தமானி அறிவுறுத்தலுடன் சமர்ப்பிக்கப்பட்டுள்ள** அறிவுறுத்தல் படிவத்தைப் பார்க்கவும்.

8.2. ஆங்கிலத்தில் மட்டுமே விண்ணப்பம் பூர்த்தி செய்யப்பட வேண்டும்.

8.3. மேற்படி கற்கைகளுக்கான அடிப்படைத் தகுதிகளை நீங்கள் பூர்த்தி செய்திருந்தால், நீங்கள் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட கற்கை நெறிகளுக்காக விண்ணப்பிக்கலாம். அவ்வாறு நீங்கள் இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட கற்கை நெறிகளுக்கு விண்ணப்பிப்பதாயின், இணைத்தளத்தில் காட்டப்பட்டுள்ள விண்ணப்பப் படிவத்தில் உங்கள் விருப்பத் தெரிவின்படி முன்னுரிமை வரிசையில் அந்தந்த கற்கை நெறிகளை தேர்ந்தெடுக்க வேண்டும். அவ்வாறு பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பத்தை பதிவேற்றிய பிறகு, அதில் உங்கள் விருப்பத் தெரிவுக்கு ஏற்ப தெரிவு செய்து அடையாளமிட்ட கற்கை நெறிகளின் வரிசை கிரமத்தை மாற்றவோ அல்லது தேர்ந்தெடுக்கப்பட்ட கற்கை நெறிகளில் ஒன்றை அல்லது அதற்கு மேற்பட்ட கற்கை நெறிகளை திரும்பப் பெறவோ அல்லது புதிய ஒரு கற்கை நெறியை அல்லது பல கற்கை நெறிகளை சேர்க்கவோ எந்த சந்தர்ப்பத்திலும் எதற்காகவும் அனுமதிக்கப்பட மாட்டார்கள்.

8.4. விண்ணப்பதாரிகள் ரூபா 1000.00 பணத்தை இலங்கை வங்கி, தப்ரோபேன் கிளையின் **இலக்கம் 7041318 எனும் சுகாதார அமைச்சின் செயலாளரின் பரீட்சைக் கட்டணம் அறவிடல் கணக்கிற்கு செலுத்தப்பட வேண்டும். ஒவ்வொரு விண்ணப்பதாரரும் விண்ணப்பத்தை சமர்ப்பிக்க முன்** ஏதேனும் இலங்கை வங்கிக் கிளையில் இந்த தொகையை செலுத்த நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்பதுடன், அதற்காக பெறப்பட்ட பற்றுச்சீட்டின் அச்சிடப்பட்ட இலக்கத்தை விண்ணப்பத்தின் உரிய இடத்தில் உள்ளிட்ட பிறகே தங்கள் விண்ணப்பத்தை இணையவழி ஊடாக சமர்ப்பித்தல் வேண்டும். **இப்பணத்தை பணம் வைப்புச் செய்யும் இயந்திரம் ஊடாக அல்லது இணைய வங்கி சேவை மூலம் செலுத்தக்கூடாது**. இக்கட்டணம் எக்காரணத்தைக் கொண்டும் மீண்டும் திருப்பித்தர மாட்டாது என்பதுடன் பிறிதொரு பரீட்சையொன்றுக்காக மாற்றம் செய்வதற்கும் இடமளிக்கப்பட மாட்டாது. நீங்கள் மேற்படி கட்டணம் செலுத்தியதற்கான ஆதாரத்தை (பற்றுச்சீற்று) பாதுகாப்பாக தம்வசம் வைத்திருத்தல் வேண்டும் என்பதுடன், நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட்டால் அதன் போது அதனை **கட்டாயமாக** சமர்ப்பித்தல் வேண்டும். அதன்படி, விண்ணப்பத்தை சமர்ப்பித்த பிறகு பணம் செலுத்தப்பட்டமை கண்டறியப்பட்டால் அந்த விண்ணப்பதாரர்களும் பற்றுச்சீட்டை சமர்ப்பிக்கத் தவறிய விண்ணப்பதாரர்களும் ஆட்சேர்ப்புக்குத் தகுதியற்றவர்களாக கருதப்படுவார்கள்.

8.5. சமர்ப்பிக்கப்பட்ட இணையவழி விண்ணப்பத்தின் பிரதி மற்றும் 05 இலக்கக் குறியீட்டைப் பெறல்

(அ) இந்த வர்த்தமானி அறிவிப்பில் மற்றும் அதனுடன் இணைந்ததாக இணையவழி விண்ணப்பம் பூர்த்தி செய்வதற்கு இணையத்தளத்தில் வெளியிடப்பட்டுள்ள அறிவுறுத்தல் படிவத்தில் குறிப்பிடப்பட்டுள்ள அனைத்து விடயங்களுக்கும் ஏற்ப விண்ணப்பத்தை வெற்றிகரமாகச் சமர்ப்பிக்கும் ஒவ்வொரு விண்ணப்பதாரருக்கும் விண்ணப்பம் முறையாக அனுப்பிய உடனேயே அதன் பிரதி மற்றும் தனித்துவமான 05 இலக்க குறியீடு பெறப்படும்.

(ஆ) ஒவ்வொருவிண்ணப்பதாரரும்கணினித்திரையில்தோன்றும்தமது விண்ணப்பத்தின் அச்சுப்பிரதியொன்றை (Print – out) எடுக்க வேண்டும். அதனை தபால் மூலம் அனுப்ப வேண்டிய அவசியமில்லை. விண்ணப்பத்தை சமர்ப்பித்த ஒவ்வொரு விண்ணப்பதாரரும் தான் இதற்காக விண்ணப்பம் சமர்ப்பிக்கப்பட்டதற்கான முறையான மற்றும் சரியான ஒரே ஆதாரமாக இருப்பதால் அதனை பாதுகாப்பாக வைத்திருப்பது உங்கள் பொறுப்பாகும். அதுமட்டுமன்றி, 05 இலக்கங்களைக் கொண்ட குறியீட்டையும் பாதுகாப்பாக வைத்திருப்பதன் மூலம் நீங்கள் சமர்ப்பித்த விண்ணப்பத்தின் பிரதியை பின்னர் பெறலாம்.

(இ) ஏதாவது சந்தர்ப்பத்தில் விண்ணப்பம் சமர்ப்பித்த பிறகு அதன் நகல் அல்லது 05 இலக்கங்களைக் கொண்ட குறியீடு கிடைக்காத விண்ணப்பதாரர்கள் தங்கள் விண்ணப்பங்கள் முறையாக பதிவேற்றம் செய்யப்படவில்லை/ சமர்ப்பிக்கப்படவில்லை என்பதை புரிந்து கொள்ள வேண்டும். அத்தகைய நபர்கள் அனைவரும் விண்ணப்பம் சமர்ப்பிக்காத மாணவர்களாகவே கருதப்படுவார்கள். அதன்படி, அத்தகைய விண்ணப்பதாரர்கள் உடனடியாக கீழே பந்தி 8.6 இல் குறிப்பிடப்பட்டுள்ள தொலைபேசி அல்லது /மற்றும் மின்னஞ்சல் ஊடாக **மனித வள முகாமைத்துவம் மற்றும் ஒருங்கிணைப்புப் பிரிவைத்** தொடர்பு கொண்டு 2024.04.25 ஆம் திகதிக்கு முன் தமது விண்ணப்பம் தொடர்பான சிக்கல்களைத் தீர்த்து, தமக்குரிய குறியீடு மற்றும் விண்ணப்பத்தின் நகல்களைப் பெற ஏற்பாடு செய்தல் வேண்டும். இது விண்ணப்பதாரியின் பொறுப்பாகும் என்பதை அவதானத்திற்கு உட்படுத்துகிறேன். எவ்வாறாயினும், இந்த அமைச்சிற்கு முறையாக அனுப்பப்படாத இணையவழி விண்ணப்பங்கள் தொடர்பாக 2024.04.25 ஆம் திகதிக்குப் பின்னர் சமர்ப்பிக்கப்படும் எவ்வித கோரிக்கைகளும் கருத்தில் கொள்ளப்பட மாட்டாது.

(இ) மேலும், விண்ணப்பதாரர் ஒருவரினால் இந்த ஆட்சேர்ப்பு தொடர்பான எந்தவொரு விடயம் தொடர்பாகவும் செய்யப்படும் கோரிக்கைகள் தமது விண்ணப்பத்தின் பிரதியுடன் அனுப்பப்படல் வேண்டும் என்பதுடன், அதற்கு மாறாக சமர்ப்பிக்கும் எந்தவொரு கோரிக்கையும் கருத்தில் கொள்ளப்பட மாட்டாது என்பதை மேலும் அவதானத்திற்கு உட்படுத்துகிறேன்.

8.6. அத்தியவசிய தகவல்களுக்காக விசாரித்தல்

(அ) இக்கற்கைக்கு விண்ணப்பிப்பதற்கான அனைத்து தகைமைகளையும் பூர்த்தி செய்துள்ள விண்ணப்பதாரர்கள் விண்ணப்பத்தை பூர்த்தி செய்வதில் ஏதேனும் சிக்கல்கள் எழுந்தால் அது தொடர்பாக தொழில்நுட்ப உதவிகளுக்கு அல்லது மேலே பந்தி 8.5 (இ) இல் குறிப்பிடப்பட்ட சிக்கல்களைத் தீர்ப்பதற்காக மட்டும் வாரத்தின் வேலை நாட்களில் மு.ப 9.00 தொடக்கம் 4.00 வரை சுகாதார அமைச்சின் மனித வள முகாமைத்துவம் மற்றும் ஒருங்கிணைப்புப் பிரிவின் 0112 340 007 எனும் தொலைபேசி இலக்குத்துடன் தொடர்பு கொள்ளவும். hrcodmoh@gmail.com என்ற மின்னஞ்சல் முகவரியிலும் தொடர்பு கொள்ளலாம். **(மின்னஞ்சல் ஊடாக தொடர்பு கொள்ளும்போது எப்போதும் உங்கள் தேசிய அடையாள அட்டை இலக்கம் மற்றும் தொலைபேசி இலக்கத்தை குறிப்பிடுவது கட்டாயமாகும்.)**

(ஆ) சம்பந்தப்பட்ட அனைத்து விபரங்களும் இந்த வர்த்தமானி அறிவித்தலில் மற்றும் சுகாதார அமைச்சின் இணையத்தளத்தில் விரிவாக குறிப்பிடப்பட்டுள்ளதுடன், ஏனைய விடயங்கள் தொடர்பாக விசாரிப்பதை தவிர்க்கவும்.

09. **விண்ணப்பதாரியின் கையொப்பத்தை உறுதிப்படுத்தல்:**

9.1. இலங்கை நிருவாக சேவையில் உள்ள உத்தியோகத்தர்/ இலங்கை கல்விச் சேவையிலுள்ள உத்தியோகத்தர்/ இலங்கை கணக்காளர் சேவையில் உள்ள உத்தியோகத்தர்/ அரச பாடசாலையொன்றின் அதிபர்/ சமாதான நீதவான்/சட்டத்தரணி அல்லது வருடாந்த சம்பளம் 512148.00 ரூபாவிற்கு குறையாத சம்பளம் பெறும் நிரந்தர ஓய்வூதியம் பெறக்கூடிய பதவியில் உள்ள அரசாங்க உத்தியோகத்தர் ஒருவரினால் விண்ணப்பதாரியின் கையொப்பம் உறுதிப்படுத்தப்படல் வேண்டும்.

9.2. இந்த வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள நியதிகளுக்கு இணங்காத மற்றும் பூரணமற்ற விண்ணப்பங்கள் எவ்வித அறிவித்தல்களும் இன்றி நிராகரிக்காப்படும்.

10. நேர்முகப்பரீட்சைக்கு நீங்கள் அழைக்கப்பட்டால் சமர்ப்பிக்க வேண்டிய விபரங்கள் :

10.1. நீங்கள் வெற்றிகரமாக பதிவேற்றிய இணையவழி விண்ணப்பங்களுக்கு அமைய குறைந்தபட்ச கல்வித் தகைமையை பூர்த்தி செய்துள்ள விண்ணப்பதாரர்களுள் Z பெறுமதிக்கு அமைய தயாரிக்கப்பட்ட முதன்மை பட்டியலொன்றை அடிப்படையாகக் கொண்டு தெரிவு செய்யப்பட்ட விண்ணப்பதாரர்கள் மாத்திரம் நேர்முகப்பரீட்சைக்கு அழைக்கப்படுவார்கள். சுகாதார அமைச்சின் செயலாளரினால் நியமிக்கப்படும் நேர்முகப் பரீட்சை சபையினால் ஒவ்வொரு பதவிக்குரித்தான ஆட்சேர்ப்புத் திட்டத்தில் மற்றும் இந்த வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகள் மற்றும் உடற்தகைமைகள் என்பன பரிசீலிக்கப்படும். நேர்முகப் பரீட்சையின் போது விண்ணப்பதாரர்கள் பின்வரும் ஆவணங்களின் மூலப்பிரதிகளை சமர்ப்பித்தல் வேண்டும்.

தவிர்க்க முடியாத காரணத்தினால் (நேர்முக சபையினால் ஏற்றுக்கொள்ளக்கூடிய) விண்ணப்பதாரர் ஒருவருக்கு ஏதாவது சான்றிதழ்/ஆவணத்தை அன்றைய தினத்தில் சமர்ப்பிக்க முடியாதவிடத்து நேர்முகப்பரீட்சை சபையின் அறிவுறுத்தல்களுக்கு அமைய அந்த சான்றிதழ்/ஆவணத்தை நேர்முகப்பரீட்சை நடைபெற்ற தினத்திலிருந்து 07 நாட்களுக்குள் இந்த அமைச்சின் பிரதிப் பணிப்பாளர் நாயகம் (நிர்வாகம்) III இற்கு நேரில் கொண்டு வந்து கையளிக்க வேண்டும் என்பதுடன், அவ்வாறு செய்வதற்கு தவறும் அனைத்து விண்ணப்பதாரர்களும் இந்த தேர்வுக்குத் தகுதியற்றவர்களாகக் கருதப்படுவார்கள்.

10.2. இணையத்தளத்தின் ஊடாக பதிவேற்றம் (UPLOAD) செய்யப்பட்ட விண்ணப்பத்தின் அச்சுப்பிரதி (9.1 பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள உத்தியோகத்தர் ஒருவரினால் சான்றுறுதி செய்யப்பட்ட)

10.3. பிறப்பு அத்தாட்சிப் பத்திரம்.

10.4. க.பொ.த (உ.தர) பரீட்சைப் பெறுபேறு மற்றும் Z பெறுமானத்தைக் குறிக்கும் சான்றிதழ் (பரீட்சை திணைக்களத் தினால் வழங்கப்பட்ட)

10.5. க.பொ.த (சா.தர) பரீட்சை பெறுபேறு (பரீட்சை திணைக்களத்தினால் வழங்கப்பட்ட)

10.6. ஆட்பதிவு திணைக்களத்தினால் வழங்கப்பட்ட தேசிய அடையாள அட்டை அல்லது கடவுச்சீட்டு அல்லது செல்லுபடியாகும் உள்நாட்டு சாரதி அனுமதிப்பத்திரம்

10.7. ரூபா 1000.00 பணத்தை வங்கிக்கு செலுத்தியமைக்கான ரசீது.

10.8. வதிவிடத்தை உறுதிப்படுத்துவதற்கான கிராம சேவை அலுவலரினால் வழங்கப்பட்ட வதிவு தொடர்பான சான்றிதழ் (DS- 04)

10.9. மாணவர் பணி காட்டி (பாடசாலை விடுகைப் பத்திரம் - கல்வி B 59 பொது படிவம்)

10.10. மேலே 6.5 துணைப் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு திருமணம் ஆகவில்லை அல்லது விவாகரத்து செய்யவில்லை என்பதை நிரூபிக்க சமாதான நீதவான் முன்னிலையில் 50.00 ரூபா முத்திரையில் கையெழுத்திட்ட உறுதிமொழி. (இது பாடசாலை பற்சிகிச்சையாளர் கற்கை நெறிக்கு மட்டுமே பொருந்தும்)

10.11. மேலே 6 ஆவது பந்தியின் 6.1 முதல் 6.4 வரையான துணைப் பந்திகளில் குறிப்பிடப்பட்டுள்ளபடி தகுதியற்ற ஒருவர் அல்ல என்பதை உறுதிப்படுத்துவதற்கான உறுதிமொழி.

**குறிப்பு :**

(அ) மேலே 10.2 தொடக்கம் 10.11 வரையான பந்திகளில் குறிப்பிடப்பட்டுள்ள ஆவணங்களின் தம்மால் சான்றுறுதி செய்யப்பட்ட நிழற்படப் பிரதிகள் நேர்முகப்பரீட்சைக்கு வரும் போது கொண்டு வர வேண்டும்.

(ஆ) பயிற்சிக் கல்லூரிகளில் காணப்படும் இடவசதிகள் மற்றும் சேவை அவசியம் உட்பட 4.2 பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களை கருத்தில் கொண்டு, பயிற்சிக்கு இணைக்கப்படும் எண்ணிக்கை மற்றும் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படும் விண்ணப்பதாரிகளின் எண்ணிக்கை என்பன சுகாதார அமைச்சின் செயலாளரினால் தீர்மானிக்கப்படும்.

(இ) நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படும் அனைவரும் பயிற்சிக்கு இணைக்கப்படுவதாக இந்த வர்த்தமானி அறிவித்தலில் எந்த இடத்திலும் அல்லது பந்தியிலும் குறிப்பிப்படவில்லை என்பதை கவனத்திற் கொள்ளல் வேண்டும்.

(ஈ) நேர்முகப் பரீட்சையின் பின்னர் தெரிவு செய்யப்பட்ட விண்ணப்பதாரிகள் தொடர்பான விபரங்கள் http://www.health.gov.lk எனும் அமைச்சின் இணையத்தளத்தில் வெளியிடப்படுவதுடன், எவருக்கும் தனிப்பட்ட முறையில் அறிவிக்கப்பட மாட்டாது. எவ்வாறாயினும், அவ்வப்போது எழும் குறிப்பிட்ட தகவல்களைப் பற்றி தெரிவிக்க நேரிட்டால், நீங்கள் சமர்ப்பித்த விண்ணப்பத்தில் குறிப்பிடப்பட்டுள்ள தொலைபேசி இலக்கம் மற்றும் / அல்லது மின்னஞ்சல் முகவரியின் ஊடாக அறிவிக்கப்படும். எனவே, விண்ணப்பத்துடன் சமர்ப்பிக்கப்பட்ட தொலைபேசி இலக்கம் மற்றும் மின்னஞ்சல் முகவரியை மாற்றாமல், செயலில் வைத்திருப்பது உங்களின் பொறுப்பாகும். மேலும் மாற்றங்கள் அல்லது செயலற்று இருப்பதால் உரிய தகவல்கள் சரியான நேரத்தில் தெரிவிக்க முடியாமையினால் ஏற்படக்கூடிய பிரச்சனைகளுக்கு இந்த அமைச்சு பொறுப்பல்ல.

(உ) வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ள விண்ணப்பதாரர்களுள் உரிய காலத்தில் நடாத்தப்படும் நேர்முகப் பரீட்சைக்கு சமுகமளிக்காதவர்கள் அல்லது நேர்முகப் பரீட்சைக்கு உரிய தினத்தில் சமுகமளித்து உரிய தினத்தில் பதிவு செய்யாத விண்ணப்பதாரிகளினால் கல்வி நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்ட பிறகு கற்கை நெறியில் இணைவதற்காக சமர்ப்பிக்கப்படும் மேன்முறையீடுகள் எக்காரணம் கொண்டும் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது.

11. **பயிற்சித் திட்டம்** :

11.1. நேர்முகப் பரீட்சையின் பின்னர் தெரிவு செய்யப்பட்ட விண்ணப்பதாரர்கள் இந்த கற்கை நெறியை தொடர்வதற்கு பயிற்சி கல்லூரிகளுக்கு உள்வாங்கப்படுவார்கள். கற்கை நெறிக்கான காலம் மற்றும் கற்க வேண்டிய மொழி என்பன இலக்கம் I அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

11.2. பயிற்சிக் கல்லூரிகளுக்கு இணைக்கப்படும் மாணவர்கள் பயிற்சிக் கல்லூரியில் வலுவில் உள்ள விதிமுறைகளுக்கும் மற்றும் சுகாதார அமைச்சினால் காலத்திற்குக் காலம் விதிக்கப்படும் ஏனைய விதிமுறைகளுக்கும் கட்டுப்படல் வேண்டும்.

11.3. பயிற்சிக்காலத்தில் நடாத்தப்படும் பரீட்சைகளில் சித்திபெறத் தவறும் அல்லது அவர்களின் வேலை மற்றும் நடத்தை என்பன திருப்திகரமாக இல்லாவிட்டால் அல்லது பரீட்சை மற்றும் லீவு நிபந்தனைகளை மீறும் அல்லது பயிற்சிக்கு இணைத்துக் கொள்வதற்காக சமர்ப்பிக்கப்பட்ட கல்வி மற்றும் ஏனைய தகைமைகளில் ஏதாவது உண்மைக்கு புறம்பானவை அல்லது பிழையானவையென தெரியவருமிடத்து பயிற்சியின் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் எவ்வித நட்டஈடுகளும் இன்றி பயிற்சியிலிருந்து நீக்கப்படுவார்கள்.

11.4. பயிற்சிக் காலத்தில் மாணவர்களுக்கு அரச நிருவாக சுற்றறிக்கை 03/2016 இன் உப அட்டவணை V இன் நியதிகளுக்கு அமைய மாதாந்த கொடுப்பனவொன்று வழங்கப்படும்.

11.5. பயிற்சிக் கல்லூரிக்கு பயிற்சிக்காக உள்வாங்கப்படும் போது பயிற்சியை சிறப்பாக நிறைவு செய்வதாகவும், அப்பயிற்சியை இடைநடுவில் கைவிடுவதில்லை எனவும், அந்த பயிற்சியை முழுமையாக நிறைவு செய்த பின்னர் உரிய பதவிக்கு நியமனம் வழங்கப்பட்டால் குறைந்தபட்சம் பத்து வருடங்கள் (10) மத்திய / மாகாண அரசாங்க சேவையின் கீழ் உரிய பதவியில் சேவையாற்றுவதாகவும், சுகாதார செயலாளரினால் பரிந்துரைக்கப்படும் அதிகாரியுடன் ஒரு ஒப்பந்தத்திற்கு வர வேண்டும் என்பதுடன், உங்கள் பயிற்சி மற்றும் கட்டாய சேவைக் காலம் தொடர்பாக சுகாதார அமைச்சினால் சமர்ப்பிக்கப்படும் பிணைக்கு இரண்டு பிணையாளிகளுடன் உடன்பட வேண்டும். மேலே 11.3 இன் படி, பயிற்சியின் போது பயிற்சியிலிருந்து விலகினால், பயிற்சியை இடைநடுவில் கைவிட்டால், பயிற்சியிலிருந்து நீக்கப்பட்டால் அல்லது நியமனம் பெற்று பத்து (10) வருட காலம் மேற்படி உரிய பதவியில் சேவையாற்றுவதற்கு தவறினால் அவ்வாறான மாணவர்கள் பயிற்சியிலிருந்து/பதவியிலிருந்து நீக்கப்பட்டு இந்த காலத்தினுள் அவருக்கு அரசாங்கத்தினால் வழங்கப்பட்ட கொடுப்பனவுகள், அரசினால் செலவிடப்பட்ட செலவுகள் மற்றும் பிணைத் தொகை என்பவற்றை அவர் சுகாதார அமைச்சிற்கு செலுத்த வேண்டும். அவ்வாறு செய்யத்தவறினால் அப்பணத்தை அறவிடுவதற்கு ஒப்பந்தத்தின் பிரகாரம் சட்டரீதியான நடவடிக்கை எடுக்கப்படும்.

11.6. இக்கற்கை நெறிக்கு விண்ணப்பிக்கும் விண்ணப்பதாரிகள் விண்ணப்பத் திகதியில் திருமணமாகாதவராக இருத்தல் வேண்டும் என்பதுடன், பயிற்சிக் காலத்திலும் திருமணம் புரியாமல் இருத்தல் கட்டாயமானதாகும்.

12. **சேவையில் ஈடுபடுத்தப்படும் நியதிகள் :**

12.1. பயிற்சியின் பின்னர் நிரந்தர நியமனம் வழங்குவதற்கு அரசாங்கம் கடமைப்பட்டிருக்காது. எனினும், பயிற்சியை நிறைவு செய்யும் தினமாகும் போது நிலவுகின்ற வெற்றிடங்களுக்கு அமைய தயாரிக்கப்படும் முன்னுரிமை வெற்றிட பட்டியலுக்கு அமைய சிரேஷ்ட உத்தியோகத்தர்களுக்கு இடமாற்றங்கள் வழங்கிய பின்னர் எஞ்சிய வெற்றிடங்களுக்கு பயிற்சியை சிறப்பாக நிறைவு செய்து இறுதிப்பரீட்சையில் சித்தியடையும் பயிலுனர்களின் பயிற்சி நெறியின் இறுதிப்பரீட்சை திறமையை கருத்திற்கொண்டு உரிய பதவியின் III ஆம் தரத்தின் பதவிக்கு நியமிப்பது குறித்து பரிசீலிக்கப்படும். அத்துடன் தெரிவு செய்யப்படும் விண்ணப்பதாரிகள் நிலவுகின்ற வெற்றிடங்களுக்கு அமைய இலங்கையில் எப்பிரதேசத்திலும் சேவையாற்றுவதற்கு கட்டுப்படல் வேண்டும்.

12.2. நியமனம் பெற்றவர்களுக்கு அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை 03/2016 இன் விதிமுறைகளுக்கு அமைய சம்பளம் வழங்கப்படும்.

12.3. விண்ணப்பத்தை நிரப்பும் போது கல்வி மற்றும் ஏனைய தகைமைகளை சரியாக உள்ளிட வேண்டும். பயிற்சிக்காக இணைத்துக் கொள்ளும் போது அல்லது நியமனம் பெற்ற பின்னர் மேற்படி சான்றிதழ்கள் பொய்யானவை எனக் கண்டறியப்பட்டால், சட்டரீதியாக நடவடிக்கை எடுப்பதற்காக குற்றப்புலனாய்வு திணைக்களத்திற்கு சமர்ப்பிப்பதற்கும்,வழங்கப்பட்ட நியமனம் இரத்து செய்யப்பட்டு பயிற்சியிலிருந்து/பதவியிலிருந்து நீக்கப்படுவதோடு அது தொடர்பாக ஒழுக்காற்று நடவடிக்கை எடுப்பதுடன், மீண்டும் அரசாங்க சேவையில் இணைய முடியாதவாறு கருப்பு பட்டியலில் அவருடைய பெயர் உள்வாங்கப்படும். மேலும், பயிற்சிக் காலத்தில் அரசாங்கத்தினால் வழங்கப்பட்ட கொடுப்பனவுகள், அரசினால் செலவிட்ட செலவினங்கள் மற்றும் ஒப்பந்த பணம் அவரிடமிருந்து அறவிடப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

12.4. தெரிவு செய்யப்பட்ட விண்ணப்பதாரிகள் பயிற்சியை தொடர்வதற்கு மற்றும் நாட்டின் எப்பிரதேசத்திலும் சேவையாற்றுவதற்கு போதியளவு உடல் மற்றும் உள ஆரோக்கியம் கொண்டவராக இருப்பதை உறுதிப்படுத்தும் பொருட்டு பயிற்சியின் முதல் மாதத்திற்குள் மருத்துவ பரிசோதனை மேற்கொள்ளப்படல் வேண்டும் என்பதுடன், மருத்துவ பரிசோதனையில் தகுதியற்றவர் எனக் காணப்படும் விண்ணப்பதாரிகள் பயிற்சியை தொடர தகுதியற்றவராக கருதப்படுவார்கள்.

12.5. மேற்படி இணைக்கப்படும் சகல உத்தியோகத்தர்களும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக்கோவையின் சட்ட திட்டங்களுக்கும், அரச சேவைகள் ஆணைக்குழுவினால் அரசாங்க சேவைகள் தொடர்பாக விதிக்கப்பட்டுள்ள விதிமுறைகள் மற்றும் கட்டளைகளுக்கும், சேவைப் பிரமாணக் குறிப்பின் விதிமுறைகளுக்கும், அரசாங்க நிதி ஒழுங்கு விதிகளுக்கும், அரசாங்க சுற்றறிக்கைகள் மற்றும் அறிவுறுத்தல்களுக்கும் மற்றும் அவை தொடர்பாக காலத்திற்குக்காலம் விதிக்கப்படும் கட்டளைகள் மற்றும் திருத்தங்களுக்கும் கட்டுப்படல் வேண்டும்.

12.6. பயிற்சிக்கு இணைக்கப்படும் விண்ணப்பதாரிகளுக்கு பயிற்சி கல்லூரிகளில் தங்குமிட வசதிகள் வழங்குவதற்கு இந்த அமைச்சு கட்டுப்பட்டில்லை. அவ்வாறு வழங்கப்பட்டால் அதற்காக மதிப்பீடு செய்யப்பட்ட தங்குமிட அறைக்கான வாடகை, நீர் மற்றும் மின்சார கட்டணம் அறவிடப்படும்.

12.7. இப்பயிற்சிக் காலத்தினுள் தொழிற்சங்க நடவடிக்கைகளில் ஈடுபடுதல் அல்லது தனியார் சேவையில் ஈடுபடுவதற்கான எவ்வித உரிமைகளும் இல்லை.

12.8. பயிற்சிக்கான ஆட்சேர்ப்பு தொடர்பாக இந்த வர்த்தமானி அறிவித்தல் மூலம் உள்வாங்கப்பட்ட அல்லது உள்வாங்கப்படாத ஏதேனுமோர் விடயம் தொடர்பாக சிக்கல்கள் தோன்றினால், அது தொடர்பாக சுகாதார அமைச்சின் செயலாளரினால் எடுக்கப்படும் தீர்மானமே இறுதித் தீர்மானமாகும். இந்த வர்த்தமானி அறிவித்தலில் சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகிய மொழிகளில் முரண்பாடுகள் ஏற்படுமிடத்து, சிங்கள மொழியே வலுவில் இருக்கும்.

டாக்டர் பீ. ஜீ. மஹீபால,
செயலாளர்,
சுகாதார அமைச்சு.

"சுவசிறிபாய",
385, சங்கைக்குரிய பத்தேகம விமலவங்ச தேரோ மாவத்தை,
கொழும்பு - 10,
2024.03.12.

03-355

## சுகாதார அமைச்சு

### ஆரம்ப தர வைத்திய உத்தியோகத்தர்களுக்கும் பல் சத்திரசிகிச்சை வைத்திய உத்தியோகத்தர்களுக்குமான திணைக்களப் பரீட்சை - 2024, மாச்சு

2014.10.11 ஆந் திகதிய 1883/ 17 ஆம் இலக்கமுடைய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் வெளியிடப்பட்டுள்ள சுகாதார சேவையின் வைத்திய உத்தியோகத்தர்கள் தொடர்பான நியதிச் சட்டக்கோவையின் 08 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள வகையில் ஆரம்ப தர வைத்திய உத்தியோகத்தர்கள் II ஆம் தரத்திற்கு உயர்த்தப்படுவதற்கு இரண்டு வருடங்களுக்கு முன்பும், அத்தோடு பல் சத்திர சிகிச்சை வைத்திய உத்தியோகத்தர்கள் தமது சேவையில் உறுதிப்படுத்துவதற்கு முன்பும், உத்தியோகத்தர் ஒருவர் அந்நியமனம் கிடைக்கப்பெற்ற திகதியிலிருந்து மூன்று வருட காலத்தினுள் சித்தியடைய வேண்டியதுமான திணைக்களப் பரீட்சை 2024.05.05 ஆந் திகதி சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய மும்மொழிகளிலும் நடாத்தப்படும் என்பதை இத்தால் அறிவிக்கப்படுகின்றது. பரீட்சை நடாத்தப்படும் இடமும் கால அட்டவணையும் அனுமதி அட்டையில் குறிப்பிட்டு அனுப்பி வைக்கப்படும்.

02. **தகைமைகள்**.- உரிய பரீட்சையினைப் பூரணப்படுத்தியிராத ஆரம்ப தர வைத்திய உத்தியோகத்தர்களும், நியமனத்தில் உறுதிப்படுத்தப்படாத பல் சத்திர சிகிச்சை நிபுணர்களும் இந்தப் பரீட்சையின் பொருட்டு விண்ணப்பிக்க முடியும். மேலும் இத்திணைக்களப் பரீட்சையினைப் பூரணப்படுத்தியிராத நிர்வாகத் தரத்தைச் சேர்ந்த வைத்திய உத்தியோகத்தர் தரத்தைச் சேர்ந்தவர்களும், விசேட வைத்திய நிபுணர் தரத்தைச் சேர்ந்தவர்களும் இப்பரீட்சையின் பொருட்டு விண்ணப்பிக்க முடியும்.

03. **விண்ணப்பங்கள்**.- இச் சுற்றுநிருபத்தில் இறுதியில் காட்டப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்துக்கு அமைவாக தயாரிக்கப்பட்டு பூரணப்படுத்தப்பட்டுள்ள விண்ணப்பதாரர்களின் விண்ணப்பங்கள் தங்களினுடைய திணைக்களத் தலைவரின் ஊடாக பணிப்பாளர் (பரீட்சைகள்), சுகாதார அமைச்சு, இலக்கம் 385, வணக்கத்திற்குரிய பத்தேகம விமலவங்ச தேரர் மாவத்தை, "சுவசிரிபாய", கொழும்பு - 10 என்னும் முகவரிக்கு 2024.04.01 ஆந் திகதிக்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு அனுப்பி வைத்தல் வேண்டும். கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் "ஆரம்பதர வைத்திய உத்தியோகத்தர்களுக்கும் பல் சத்திரசிகிச்சை வைத்திய உத்தியோகத்தர்களுக்குமான திணைக்களப் பரீட்சை - 2024 மாச்சு" என குறிப்பிடுதல் வேண்டும். இத்திணைக்களப் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு விண்ணப்பதாரி சகல தகைமைகளையும் பூர்த்தி செய்துள்ளார் என்பதை தனிநபர் கோவைகளை பேணும் உத்தியோகத்தரும், விண்ணப்பத்தில் வழங்கப்பட்டுள்ள தகவல்கள் அனைத்தும் சரியானவை என்பதை நிறுவன தலைவரும் சான்றுப்படுத்துதல் கட்டாயமாகும். தங்களது விண்ணப்பப் பத்திரத்துடன் விண்ணப்பதாரியின் முகவரியிடப்பட்ட ரூபா 110 பெறுமதியுடைய முத்திரை ஒட்டப்பட்ட கடித உறையொன்றையும் (இதில் விண்ணப்பதாரி தனது சொந்த முகவரியினையோ, அல்லது அலுவலக முகவரியினையோ குறிப்பிடலாம்) இணைத்து அனுப்பி வைக்க வேண்டும். விண்ணப்ப முடிவுத் திகதிக்கு பின்னராக கிடைக்கும் விண்ணப்பங்கள் எதுவித அறிவித்தலும் இன்றி நிராகரிக்கப்படும்.

**கவனிக்கவும்**.- மாதிரி விண்ணப்பப் படிவத்திற்கு அமைய விண்ணப்பம் A4 தாளின் இரண்டு பக்கங்களையும் உபயோகித்து தயாரிக்கப்பட வேண்டும். முதற்பக்கத்தில் இலக்கம் 01 - 04 (உ) தொடக்கமும் இரண்டாம் பக்கத்தில் 04 (C)-09 தொடக்கமும் அமையும் வண்ணம் விண்ணப்பம் தயாரிக்கப்படல் வேண்டும். மேற்படி தகவல்களுக்கு அமைய தயாரிக்கப்படாத விண்ணப்பங்கள் எதுவித அறிவித்தலுமின்றி நிராகரிக்கப்படும் என்பதை கவனத்தில் கொள்ளவும்.

04. **பரீட்சைக் கட்டணம்**.-

(i) முதன் முறையாகப் பரீட்சைக்குத் தோற்றும் விண்ணப்பதாரர்கள், பரீட்சைக் கட்டணத்தினின்றும் விலக்களிக்கப்படுவர். ஏனைய விண்ணப்பதாரர்கள் ஒரு விடயத்திற்கு ரூபா 25.00 வீதம் மதிப்பிழக்கப்படாத முத்திரைகளை விண்ணப்பத்தில் ஒட்டி அதன் மேல் தனது கையொப்பத்தையும் திகதியையும் இட்டு அதை செல்லுபடி நீக்கம் புரியப்படுதல் வேண்டும்.

(ii) எக்காரணத்தைக் கொண்டும் இவ்வாறு செலுத்தப்பட்ட பரீட்சைக் கட்டணம் வேறு பரீட்சையொன்றின் பொருட்டு மாற்றவோ அல்லது மீளச் செலுத்தப்படுதலோ புரியப்படமாட்டாது.

05. **பரீட்சைக்கு உட்படுத்தல்**.-

(i) ஏற்றுக்கொள்ளப்பட்ட விண்ணப்பங்களுக்கு அனுமதிப்பத்திரங்கள் வழங்கப்படும். அவ் அனுமதிப்பத்திரங்களை உரிய முறையில் நிரப்பி பரீட்சை நிலைய அதிபருக்குச் சமர்ப்பித்தல் வேண்டும். அனுமதி அட்டைகள் சமர்ப்பிக்கப்படாத எந்த ஒரு பரீட்சார்த்தியும் பரீட்சைக்கு அனுமதிக்கப்படமாட்டார்கள்.

(ii) விண்ணப்பதாரர்களினால் பரீட்சை மண்டபத்தினுள் பரீட்சை நிலைய அதிபருக்குத் தனது அடையாளத்தை நிரூபித்தல் வேண்டும். அதன் பொருட்டு கீழே குறிப்பிடப்படும் ஆவணங்களில் ஒன்றைச் சமர்ப்பித்தல் வேண்டும்:-

(அ) தேசிய ஆள் அடையாள அட்டை ;
(ஆ) சுகாதார அமைச்சு மற்றும் அதனுடன் ஏற்புடைய நிறுவனங்களினால் முறைப்படி வழங்கப்பட்ட அடையாள அட்டை ;
(இ) வலுவுள்ள அனுமதிப்பத்திரம்;
(ஈ) வலுவுள்ள கடவுச்சீட்டு.

(iii) தவிர்க்க முடியாத காரணத்தினால் பரீட்சை அனுமதிப்பத்திரம் கிடைக்கப்பெறாதவிடத்து சுகாதார அமைச்சின் இணையத்தளத்தில் தங்களினது பரீட்சைச் சுட்டெண், பரீட்சை நிலையம் என்பவற்றினை பெற்றுக்கொண்டு தங்களது கையொப்பத்தினை உறுதிப்படுத்திய திணைக்களத் தலைவரின் கடிதத்துடன் இணையத்தளத்தில் குறிப்பிடப்பட்டுள்ள பரீட்சை நிலையத்தில், இணையத்தளத்தில் குறிப்பிடப்பட்டுள்ள சுட்டெண்ணில் தாங்கள் பரீட்சையினை மேற்கொள்ள முடியும். அனுமதி அட்டை கிடைக்கப்பெற்றவர்கள் கட்டாயமாக கையொப்பத்தினை உறுதிப்படுத்திக்கொண்டு வருதல் வேண்டும். (கையொப்பத்தினை உறுதிப்படுத்திய கடிதம் அல்லது கையொப்பம் உறுதிப்படுத்தப்பட்ட அனுமதி அட்டையினை முன்னளிப்பு செய்யாதவர்கள் பரீட்சைக்கு தோற்ற அனுமதிக்கப்படமாட்டார்கள்). (சுகாதார அமைச்சின் இணையத்தள முகவரி : www.health.gov.lk).

06. **பரீட்சைத் திட்டம்**.- இப்பரீட்சை, மூன்று எழுத்து மூல கட்டுரை வினாப்பத்திரங்களையும் சிங்களம்/ தமிழ் வாய்மொழிப் பரீட்சை ஆகிய 04 பிரிவுகளைக் கொண்டுள்ளது. ஒவ்வொரு பிரிவிற்கும் 100 புள்ளிகள் வீதம் ஒதுக்கப்பட்டுள்ளது. தேர்ச்சியடைவதன் பொருட்டு ஒரு விடயத்திற்கு குறைந்தபட்சம் 50 புள்ளிகளைப் பெற்றுக்கொள்ள வேண்டும். ஒரு அமர்வில் அல்லது பல அமர்வில் பிரிவுகளுக்குத் தோற்றி பரீட்சையைப் பூரணப்படுத்திக் கொள்ளலாம்.

07. **பரீட்சைப் பாடத்திட்டம்**.-

7.1 **எழுத்துப் பரீட்சை**

7.1.1 **தாபனவிதிக்கோவை வினாத்தாள்**

நேரம் 02 மணித்தியாலம். 08 வினாக்களில் 05 வினாக்களுக்கு விடையளிக்க வேண்டும்.

**பாடவிதானம்**

(i) சுகாதார அமைச்சின் சுகாதாரத் திணைக்களத்தின் பொதுவான ஒழுங்குவிதிகள்.
(ii) அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் ஒழுங்குவிதிகள்.
(iii) தாபனவிதிக்கோவை
I ஆம் பிரிவு :- VI, VII, VIII, IX, XII, XIII, XIV, XV, XVI, XVII, XVIII, XXIII, XXIV, XXV, XXVI, XXVII, XXVIII, XXX, XXXI, XXXII அத்தியாயங்கள்.
II ஆம் பிரிவு :- XLVII, XLVIII ஆகிய அத்தியாயங்கள்.

7.1.2 **வைத்தியசாலைகள், மருந்துச்சாலைகள் என்பனவற்றின் நிர்வாகம் வினாத்தாள்**

நேரம் : 1 1/2 மணித்தியாலம். 07 வினாக்களில் 04 வினாக்களுக்கு விடையளிக்க வேண்டும்.

**பாடவிதானம்**

சுகாதாரக் கைந்நூல்

(i) வைத்தியசாலைகள், பொதுச் சுகாதார நிர்வாகம்
(ii) ஆய்வுகூட சேவை முகாமைத்துவம்
(iii) மருந்து முகாமைத்துவம்

7.1.3 **கணக்கியல் :**

நேரம் 02 மணித்தியாலம். 07 வினாக்களில் 04 வினாக்களுக்கு விடையளிக்க வேண்டும்,

**பாடவிதானம்**

(i) சுகாதாரத் திணைக்களத்தில் களஞ்சியக் கணக்கு வைத்தல் தொடர்பான ஒழுங்குவிதிகள்

(ii) சுகாதாரத் திணைக்களத்தில் வழிகாட்டிக் கைந்நூலில் நிதி தொடர்பான பந்தி

(iii) சுகாதார வைத்திய உத்தியோகத்தர் ஒருவரின் நாளாந்த கடமைகளுக்கு ஏற்புடைய நிதிப்பிரமாணம்

I ஆம் அத்தியாயம் - நிதிப்பிரமாணம் 1, 2, 78

II ஆம் அத்தியாயம் - நிதிப்பிரமாணம் 90, 91, 101, 102, 103, 104, 105, 106, 107, 108, 109, 110, 113, 115, 118, 119

III ஆம் அத்தியாயம் - நிதிப்பிரமாணம் 124, 125, 126, 127, 128, 131, 133, 134, 135, 136, 137, 138, 139, 140, 142, 143, 151, 152, 154, 155, 156, 189

V ஆம் அத்தியாயம் - நிதிப்பிரமாணம் 200, 201, 215, 225, 238, 245, 255, 257, 260

VI ஆம் அத்தியாயம் - நிதிப்பிரமாணம் 380, 381, 382, 383, 384, 385, 386, 388, 389, 390, 391, 392, 393, 394

VII ஆம் அத்தியாயம் - நிதிப்பிரமாணம் 488, 493

XIII ஆம் அத்தியாயம் - நிதிப்பிரமாணம் 715, 716, 756, 757, 758

**பெறுகை வழிகாட்டிக் கோவை :**

*1 ஆம் அத்தியாயம் - அனைத்துப் பிரிவுகளும்*

*2 ஆம் அத்தியாயம் - 2.3, 2.4, 2.5, 2.6, 2.7, 2.8*

*3 ஆம் அத்தியாயம் - 3.1, 3.2, 3.3, 3.4, 3.5, 3.6, 3.7, 3.8, 3.9*

7.2 ***சிங்களம்/தமிழ் /வாய்மொழிப் பரீட்சை.***- சிங்களம்/தமிழ் ஆற்றலை அளப்பதன் பொருட்டு திணைக்களத்தின் பதவிநிலை உத்தியோகத்தர்களினால் நடாத்தப்படும் வாய்மொழிப் பரீட்சையாகும். தனது நாளாந்த கடமைகளில் ஈடுபடும்பொழுது மேலோங்கும் நிகழ்வுகள் தொடர்பாக சிங்கள மொழி மூல உத்தியோகத்தர்களுக்கு தமிழ் மொழியிலும், தமிழ் மொழி மூல உத்தியோகத்தர்களுக்கு சிங்கள மொழியிலும் கலந்துரையாடுவதற்கு உத்தியோகத்தருக்கு உள்ள ஆற்றலைப் பரீட்சித்தல். (நேரம் : 10 நிமிடம்)

08. **பரீட்சை தொடர்பான ஒழுங்குவிதிகளைக் கடைப்பிடித்தல்**.- பரீட்சார்த்திகள் குறிப்புக்களை தன்னிடத்தில் வைத்து பார்த்து எழுதுதல் தடைசெய்யப்பட்டுள்ளது. ஏனைய பரீட்சார்த்திகளின் விடைத்தாளினைப் பார்த்து எழுதுதலும் தடை செய்யப்பட்டுள்ளது. ஒருவருக்கொருவர் உதவி செய்தலைத் தவிர்த்துக்கொள்ளல் வேண்டும். மேலும் கையடக்கத் தொலைபேசி மற்றும் அதனுடன் தொடர்புடைய தொடர்பாடல், இலத்திரனியல் உபகரணங்களைப் பயன்படுத்தாதிருத்தல் வேண்டும். இவ்விதிகளை மீறும் எந்தவொரு பரீட்சார்த்தி மீதும் நடவடிக்கை எடுக்கப்படும்.

09. தயவுசெய்து இச்சுற்றுநிருபத்தை உங்கள் நிறுவனத்தில் கடமையில் ஈடுபட்டுள்ள உத்தியோகத்தர்களுக்கு அறிவிப்பதன் ஏற்பாடுகளை மேற்கொள்ளவும். இத்தகவல்களை www.health.gov.lk எனும் இணையத்தளத்தில் பெற்றுக் கொள்ளமுடியும்.

**குறிப்பு**.- இச்சுற்றுநிருப கடிதத்தில் சிங்களம், தமிழ், ஆங்கில மொழி பெயர்ப்புக்களில் ஏதாவது ஒவ்வாமை காணப்படின் சிங்கள மொழி மூல அறிவித்தலே வலுவுடையதாகும்.

டாக்டர் பீ.ஜீ.மஹீபால,
செயலாளர்,
சுகாதார அமைச்சு.

சுகாதார அமைச்சு,
“சுவசிறிபாய”,
385, சங்கைக்குரிய பத்தேகம விமலவங்ச தேரர் மாவத்தை,
கொழும்பு - 10,
2024.03.15.

மாதிரி விண்ணப்பப் படிவம்

| அலுவலக பிரயோகத்தின் பொருட்டு |
|---|

**ஆரம்பதர வைத்திய உத்தியோகத்தர்களுக்கும் பல் சத்திரசிகிச்சை வைத்திய உத்தியோகத்தர்களுக்குமான திணைக்களப் பரீட்சை – 2024, மாச்சு**

01. (அ) (i) விண்ணப்பதாரரின் முழுப்பெயர் (தமிழில்) :...............................................................................................
.................................................................................................................................................

(ii) விண்ணப்பதாரரின் முழுப்பெயர் (ஆங்கில கெப்பிட்டல் எழுத்தில்) :-

| | | | | | | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | | | | | | | | | |

(iii) முதல் எழுத்துக்களுடன் பெயர் (தமிழில்) :...............................................................................................
.................................................................................................................................................

(iv) முதல் எழுத்துக்களுடன் பெயர் (ஆங்கில கெப்பிட்டல் எழுத்துக்களில்) :-

| | | | | | | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | | | | | | | | | |

(ஆ) (i) பதவி (உரிய கூட்டினுள் (✓) அடையாளமிடுக).

(i) வைத்திய உத்தியோகத்தர் : ☐ (ii) பல் சத்திர சிகிச்சை வைத்திய உத்தியோகத்தர் : ☐

(ii) தகுதிகூர் நிலைக்கால நியமனம் பெற்ற திகதி :...................................

(iii) ஆரம்ப தரத்திற்கு நியமிக்கப்பட்ட திகதி/ தரம் II :.................................

02. நீங்கள் இம்முறை தோற்றுவதற்கு எதிர்பார்க்கும் விடயங்களுக்கு முன்னால் உள்ள கூட்டினுள் (✓) அடையாளத்தை இடவும். தோற்றாவிடின் (x) குறியை இடவும்.

வைத்தியசாலைகள் மருந்துச்சாலைகள் என்பவற்றின் நிர்வாகம் ☐ தாபன விதிக்கோவை ☐ கணக்கியல் ☐

சிங்களம் வாய்மொழி ☐ தமிழ் வாய்மொழி ☐

03. பரீட்சைக்குத் தோற்றும் மொழி (உரிய கூட்டினுள் (✓) அடையாளத்தை இடவும்.)

சிங்களம் : ☐ ஆங்கிலம் : ☐ தமிழ் : ☐

04. (அ) (i) தற்பொழுது சேவையாற்றும் சேவை நிலையம் :-----.

(ii) சேவை நிலையம் நிர்வகிக்கப்படுவது : மத்திய அரசின்கீழ் ☐

மாகாண அரசின்கீழ் ☐

(ஆ) (i) மாகாண சபையெனின் உரிய மாகாணம் :-----.

(ii) அதற்குரிய மாவட்டம் :

(இ) (i) கையடக்கத் தொலைபேசி இலக்கம் :

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | |

(ii) மின்னஞ்சல் முகவரி :....................................................

(ஈ) தேசிய ஆள் அடையாள அட்டை இலக்கம் :

| | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | | | |

(உ) கீழ்வரும் பரீட்சை நிலையங்களுள் விரும்பிய பரீட்சை நிலையம்.- (தெரிவுசெய்யும் பரீட்சை நிலையத்திற்கு போதிய விண்ணப்பதாரிகள் இல்லாதவிடத்து அண்மையிலுள்ள பரீட்சை நிலையத்திற்கு அல்லது சுகாதார சேவைப் பணிப்பாளர் நாயகத்தினால் தீர்மானிக்கப்படும் பரீட்சை நிலையத்திற்கு அழைக்கப்படுவர்) பொருத்தமான கூட்டினுள் சரி (✓) அடையாளமிடுக.

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| கொழும்பு | | கந்தானை | | அம்பாந்தோட்டை | | அம்பாறை | |
| களுத்துறை | | காலி | | பதுளை | | வவுனியா | |
| குருநாகல் | | அநுராதபுரம் | | இரத்தினபுரி | | பொலநறுவை | |
| கண்டி | | மட்டக்களப்பு | | யாழ்ப்பாணம் | | திருகோணமலை | |

(ஊ) அனுமதிப்பத்திரம் அனுப்புவதன் பொருட்டு பிழையற்ற தெளிவாக முகவரி எழுதப்பட்ட 9" × 4" அளவுள்ள ரூபா 110.00 பெறுமதியான முத்திரைகள் ஒட்டப்பட்ட கடித உறைகள் 01 விண்ணப்பத்துடன் இணைத்து அனுப்ப வேண்டும்.

(எ) (i) அஞ்சல் முகவரி (சிங்களத்தில் அல்லது தமிழில்) :..........................................................................................
..........................................................................................................................................................

(ii) அஞ்சல் முகவரி (ஆங்கில கெப்பிட்டல் எழுத்தில்) :..........................................................................................
..........................................................................................................................................................

05. (அ) இதற்கு முன் இப்பரீட்சைக்குத் தோற்றி உள்ளீரா? :-----.

(ஆ) முதன் முறை அல்லாவிடின் முத்திரைகள் ஒட்டப்பட்டுள்ளனவா? அவ்வாறு தோற்றி இருப்பின் இம்முறையின் பொருட்டு முத்திரைகள் ஒட்டியுள்ளதா? ::..........................................................................................................

| முத்திரைக் கூட்டில் (முத்திரையை ஒட்டி அதன் மீது கையொப்பமிடுக.) |
|---|

06. விண்ணப்பதாரரின் உறுதியுரை:

எனது அறிவுக்கும் நம்பிக்கைக்கும் எட்டியவகையில்-

(i) இவ்விண்ணப்பத்தில் என்னால் தரப்பட்டுள்ள விபரங்கள் யாவும் உண்மையானவையெனவும், நான் இப்பரீட்சைக்குத் தோற்றுவது முதன் முறையாக என்றபடியால் கட்டணம் செலுத்தத் தேவையில்லை எனவும்/ முதன் முறை அல்லாதபடியால் ரூபா ......... பெறுமதியான முத்திரைகள் ஒட்டியுள்ளேனெனவும், இவ்விண்ணப்பத்திற்கு என்னால் ஒட்டப்பட்டுள்ள முத்திரைகள் செல்லுபடி நீக்கம் செய்யப்படுவதற்கு முன்பு பாவிக்கப்படாத முத்திரைகள் எனவும் வெளிப்படுத்துகின்றேன்.

(ii) சுகாதார அமைச்சினால் பரீட்சை தொடர்பாக விதிக்கப்பட்டுள்ள சட்டதிட்டங்களுக்கு அமைந்து நடப்பதற்கும், இப்பரீட்சை தொடர்பான நியதிச் சட்டத்தின் படி நான் தகைமையற்றவன் எனக் காணப்படின் எனது பரீட்சார்த்தத் தன்மையை இரத்துச் செய்வதற்கு மேற்கொள்ளப்படும் எவ்விதத் தீர்மானத்திற்கும் நான் அமைவேன் எனவும் இத்தால் உறுதிப்படுத்துகின்றேன்.

...................................................
விண்ணப்பதாரரின் கையொப்பம்.

திகதி :.........................

07. **சுயவிபரக் கோவையினைக் கையாளும் விடய உத்தியோகத்தரின் சான்றிதழ்** :

இவ்விண்ணப்பமானது விண்ணப்ப முடிவுத் திகதிக்கு முன்னர் / பின்னர் என்னிடம் பாரமளிக்கப்பட்டது என்றும், இத்திணைக்களப் பரீட்சைக்கு தோற்றுவதற்கு தேவையான சகல தகைமைகளையும் விண்ணப்பதாரி பூர்த்திசெய்துள்ளார் என்பதையும், சுயவிபரக் கோவையில் உள்ள தகவல்களின் அடிப்படையில் விண்ணப்பம் சரியாகப் பூரணப்படுத்தப்பட்டுள்ளது என்றும், இவ்விண்ணப்பப் பத்திரத்தின் பிரதி ஒன்று சுயவிபரக் கோவையில் கோவையிடப்பட்டுள்ளது என்றும் இத்தால் உறுதிப்படுத்துகின்றேன்.

.......................
....................... கையொப்பமும், திகதியும்.
பெயர்

08. **நிறுவனத் தலைவரின் சான்றிதழ்** :

திருவாளர்/ திருமதி/ செல்வி ................................ என்பவர் எனது நிறுவனத்தில் சேவை புரியும் வைத்திய உத்தியோகத்தர்/ பல் வைத்தியர் என்றும், இப்பரீட்சைக்குத் தோற்றுவது முதன் முறை/ அல்லாத படியால் ரூபா ............ பெறுமதியான முத்திரைகள் இவ்விண்ணப்பத்தில் ஒட்டியுள்ளதாகவும்/ முத்திரை ஒட்டவேண்டியதில்லை எனவும் விண்ணப்பத்தில் கொடுக்கப்பட்டுள்ள விபரங்கள் விண்ணப்பதாரரின் பெயர்வழிக் கோவையிலுள்ள விபரங்களின் படி பிழையற்றவைகளெனவும் இப்பரீட்சைக்குத் தோற்றுவதற்கு அவருக்குத் தகைமைகள் உண்டு எனவும் எனது முன்னிலையில் கையொப்பம் இட்டார் எனவும் உறுதிப்படுத்துகின்றேன்.

.......................
நிறுவனத் தலைவரின் கையொப்பம்.

திகதி :.......................

09. **விசேட இயக்கத் தலைவரின் சான்றிதழ்** :

திருவாளர்/ திருமதி/ செல்வி ................................. என்பவர் ஆரம்ப தர வைத்திய உத்தியோகத்தர் ஒருவராக/ பல் சத்திர சிகிச்சை வைத்தியர் ஒருவராக எனது நிறுவனத்தில் சேவையாற்றுகின்றார் எனவும், விண்ணப்பத்தில் கொடுக்கப்பட்டுள்ள விபரங்கள் விண்ணப்பதாரரின் பெயர் வழிக்கோவையிலுள்ள விபரங்களின் படி பிழையற்றவைகளெனவும் இப்பரீட்சைக்குத் தோற்றுவதற்கு அவருக்குத் தகைமைகள் உண்டு எனவும் இத்தால் உறுதிப்படுத்துகின்றேன்.

.......................
பன்முகப்படுத்தப்பட்ட பிரிவு/ விசேட இயக்கத்
தலைவரின் கையொப்பம்
(பதிவு முத்திரை இடப்படுதல் வேண்டும்).

திகதி :.......................

(தேவையற்றவற்றைக் கீறிவிடவும்.)

03-404

## வனவியல் மற்றும் வனவளங்கள் பாதுகாப்பு அமைச்சு

வனப் பாதுகாப்புத் திணைக்களம்

### வனப் பாதுகாப்புத் திணைக்களத்தில், இலங்கைத் தொழில்நுட்ப சேவையின், பயிற்சித் தரத்தைச் சேர்ந்த வட்டார வன உத்தியோகத்தர் பதவிகளுக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சை - 2023

வனப் பாதுகாப்பு திணைக்களத்தில், இலங்கைத் தொழில்நுட்ப சேவையின், பயிற்சித் தரத்தைச் சேர்ந்த வட்டார வன உத்தியோகத்தர் பதவிகளுக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கு தகுதி வாய்ந்த, திணைக்களத்தில் 10 ஆண்டுகளிலான முனைப்பானதும் திருப்திகரமானதுமான சேவை அனுபவமுள்ள மற்றும் உடன் முன்னரான 05 ஆண்டுகள் திருப்திகரமான சேவைக்காலத்தைப் பூர்த்தி செய்துள்ள, சேவையில் நிரந்தரப்படுத்திய பகுதி வன உத்தியோகத்தர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. இதற்கான பரீட்சை 2024 ஆம் ஆண்டு யூன் மாதம் கொழும்பில் நடாத்தப்படவுள்ளது.

*1.* **சம்பள முறைமை**

i. பயிற்சித் தரம்.- MN 01- பொ.நி.சு. இல. 03/2016 இற்கு அமைவாக: ரூபா 27,140 - 1 × 300 – 27, 440.00
ii. III வகுப்பு : MN 03 - பொ. நி. சு. 03/2016 இற்கு அமைவாக : ரூபா 31,040 – 10 × 445 – 11 × 660 – 10 ×730 – 10 × 750 - ரூபா 57,550.00.

*2.* **சேவையில் இணைத்துக்கொள்வதற்கான பொதுவான நியதிகளும் நிபந்தனைகளும்** :-

I. முதலாவதாக பயிற்றுவிப்பு தரத்திற்கு ஆட்சேர்ப்புச் செய்யப்படுவதுடன், பயிற்றுவிப்பு காலம் இரண்டு ஆண்டுகளாகும்.

II. 02 ஆண்டுகளிலான பயிற்சிக் காலப் பகுதியின் இறுதியில் நடாத்தப்படும் தேசிய தொழில்சார் ஆற்றல் (NVQ - 6) மட்டத்தின் பரீட்சையில் சித்தியடைந்த பின்னர், இலங்கை தொழில்நுட்ப சேவையின் தரம் III இன் வட்டார வன உத்தியோகத்தர் பதவிக்கு நியமனம் செய்யப்படும்.

III. இந்தப் பதவி நிரந்தரமானதும் ஓய்வூதியம் உரித்துடையதுமாகும். இப்பதவிக்குரிய ஓய்வூதிய முறை தொடர்பாக அரசாங்கத்தால் எதிர்வருங் காலங்களில் மேற்கொள்கின்ற கொள்கையுடனான தீர்மானத்திற்கு நியமனம் பெறுநர்கள் கீழ்படிதல் வேண்டும்.

IV. இந்த நியமனம் ஓராண்டு (1) தகுதிகாண் நிலைக் காலத்திற்கு உட்பட்டதாகும்

V. வட்டார வன உத்தியோகத்தர்களின் சேவை நிலையங்கள் நாட்டின் காட்டுப் பகுதியிலுள்ள கஷ்டப் பிரதேசங்களில் அமைந்துள்ளதுடன், தெரிவு செய்யப்படும் பரீட்சார்த்திகள் நாட்டின் எப்பிரதேசத்திலும் பணியாற்றுவதற்கு ஆயத்தமாக இருத்தல் வேண்டும்.

VI. இலங்கைத் தொழில்நுட்ப சேவையின் சேவைப் பிரமாணக் குறிப்பினதும் மேற்பார்வை முகாமைத்துவ உதவியாளர் - தொழில்நுட்ப சேவை தொகுதியில் வட்டார வன உத்தியோகத்தர்கள் மற்றும் வன கட்டுப்பாட்டாளர் பதவிகளுக்கான ஆட்சேர்ப்புத் திட்டத்தின் பிரிவுகள் ஏற்புடையதாகும்.

*3.* **வயதெல்லை**.- ஏற்புடையதாகாது.

*4.* **கல்வி மற்றும் ஏனைய தகைமைகள்** : சகல விண்ணப்பதாரிகளும் பின்வரும் கல்வித்தகைமைகளை விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியில் திருப்திகரமானவாறு பூர்த்தி செய்திருத்தல் வேண்டும் :-

(i) மொழிஅல்லது இலக்கியம், கணிதம் மற்றும் விஞ்ஞானம் ஆகிய பாடங்களில் திறமைச் சித்தியுடன், இரண்டு அமர்வுகளுக்கு மேற்படாத தடவைகளில் க.பொ.த (சா.த) பரீட்சையில் ஆறு (6) பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

(ii) விண்ணப்பதாரி இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும்.

(iii) விண்ணப்பதாரி நல்லொழுக்கமுடையவராக இருத்தல் வேண்டும்.

(iv) பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கு தேவையான 4 இல் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளை விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி திகதியில் எல்லாவகையிலும் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

(v) எல்லாப் பரீட்சார்த்திகளும் நாட்டின் எப்பிரதேசத்திலும் பணியாற்றுவதற்கும் பதவியின் கடமைகளை நிறைவேற்றுவதற்கும் பொருத்தமான உடல், உள ரீதியான ஆரோக்கியத்தைக் கொண்டிருத்தல் வேண்டும்.

(vi) திணைக்களத்தில் பகுதி வன உத்தியோகத்தராக 10 ஆண்டுகளிலான முனைப்பானதும் திருப்திகரமானதுமான சேவை அனுபவமும், உடன் முன்னரான 05 ஆண்டுகளிலான திருப்திகரமான சேவைக் காலத்தையும் கொண்டிருத்தல் வேண்டும்.

(vii) திணைக்களத்து பகுதி வன உத்தியோகத்தராக சித்தியடைய வேண்டியுள்ள 1. மரங்களின் இனங்களை அடையாளம் காணும் பரீட்சை (நடைமுறை) 2. வனச் சட்டம் தொடர்பான பரீட்சை என்பன சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

(viii) பகுதி வன உத்தியோகத்தர் பொருட்டு இலங்கை வனக் கல்லூரியால் நடாத்தப்படும் ஓராண்டு கற்கைநெறி பூர்த்தி செய்யப்பட்டு இறுதிப் பரீட்சையில் சித்தியடைந்து உரிய சான்றிதழ் பெற்றிருத்தல் வேண்டும்.

5. **ஆட்சேர்ப்புத் திட்டம்**.-

(i) மேலே 4 ஆம் பந்திகளின்கீழ் தகுதி பெறுகின்ற விண்ணப்பதாரிகள் எழுத்து மூலப் பரீட்சையில் பெற்றுக் கொள்ளுகின்ற சித்தியடைவதற்கான புள்ளிகளின் முன்னுரிமை ஒழுங்குமுறையின் மீது, ஆட்சேர்ப்புச் செய்வதற்குள்ள எண்ணிக்கைக்கு சமமான எண்ணிக்கையினரைப் பொது நேர்முகப் பரீட்சைக்கு உட்படுத்தி, பரீட்சையில் பெற்றுக்கொள்கின்ற மொத்தப் புள்ளிகளின் முன்னுரிமை ஒழுங்குமுறையின் அடிப்படைக்கமைவாக நிலவுகின்ற வெற்றிட எண்ணிக்கைக்கு நேரொத்ததாக ஆட்சேர்ப்புச் செய்யப்படுவர்.

(ii) மேலே 5.1 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு ஆட்சேர்ப்புச் செய்யவுள்ள இறுதி வெற்றிடத்திற்கு ஆட்சேர்ப்புச் செய்யும் போது, சமமான புள்ளிகளைப் பெற்றுள்ள விண்ணப்பதாரிகள் பலர் இருப்பின், அது தொடர்பாக அரசாங்க சேவை ஆணைக்குழுவின் ஆலோசனைகளுக்கமைவாக நடவடிக்கை எடுக்கப்படும். பரீட்சைக்குத் தோற்றிய சகல விண்ணப்பதாரிகளுக்கும் தனிப்பட்டரீதியில் பெறுபேறுகள் அறிவித்தல் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் தபால் மூலம் அல்லது www.results.exams.gov.lk இணையத்தளத்தின் ஊடாக அறிவிக்கப்படும்.

(iii) பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்கின்ற அலுவலர்கள் இலங்கை வனக் கல்லூரியினால் வட்டார வன உத்தியோகத்தர்களுக்காக நடத்தப்படுகின்ற கோட்பாட்டு மற்றும் செய்முறை ரீதியான பயிற்சி கற்கைநெறியைக் கற்று, ஏற்புடைய பரீட்சை சித்தியடைந்து (NVQ - 6) மட்டத்தின் சான்றிதழ் பெற்றுக்கொண்டதன் பின்னர் இலங்கைத் தொழில்நுட்ப சேவையில் III ஆம் தரத்திற்கு உள்வாங்கப்படுவார்கள்.

பயிற்சியின் இறுதியில் நடாத்தப்படுகின்ற பரீட்சையில் சித்தியடைவதற்கு தவறுகின்ற பயிலுநர்கள் இருப்பின் அவர்கள் 06 மாதங்களுக்கு மேற்படாத காலப்பகுதியின் பொருட்டு, தமது பயிற்சி காலத்தை நீடித்துக்கொள்வதற்கு வாய்ப்பு உள்ளது. அவ்வாறு நீடிக்கப்படும் காலப் பகுதியின் இறுதியில் மீண்டும் நடாத்தப்படும் பரீட்சையை சித்தியடைய தவறுகின்ற பயிலுநர்களை அவர்களின் முன்னரான பதவிகளுக்கு விடுவிக்கப்படும்.

(iv) தெரிவு செய்யப்படும் விண்ணப்பத்தாரிகள் மரங்களை அடையாளம் காணும் பரீட்சை சித்தியடைந்த பின்னரும் ஓராண்டு தகுதிகாண் நிலைக் காலப் பகுதியின் பின்னரும் சேவையில் நிரந்தரப்படுத்தப்படும்.

6. **பாடவிதானம்**.- எழுத்துமூலப் பரீட்சை இரண்டு வினாத்தாள்களைக் கொண்டிருக்கும்

| வினாத்தாள் | பாடவிதானம்.- |
|---|---|
| உளச்சார்பு (காலம் : 1 மணித்தியாலம்) - 100 புள்ளிகள்.- | விண்ணப்பதாரியின் தர்க்க ரீதியான திறனையும் பகுப்பாய்வையும், தீர்மானமெடுக்கும் திறனையும் தீர்மானிக்கும் வகையில் பல்வகை தேர்வு வினாக்களைக் கொண்டதாகவும், சுருக்க விடைகளைத் தெரிவிக்கும் வகையிலுமான 50 வினாக்களைக் கொண்டதாக அமையும். எல்லா வினாக்களுக்கும் விடையளித்தலும் வேண்டும். |

| வினாத்தாள் | பாடவிதானம்.- |
|---|---|
| தொழில்நுட்ப வினாத்தாள்<br><br>(காலம் : இரண்டு (2) மணித்தியாலங்கள்)<br><br>- 100 புள்ளிகள்.- | வட்டார வன உத்தியோகத்தரின் கடமைப் பொறுப்புகள், கள கட்டுப்பாடு தொடர்பான அறிவு, வனக் குற்றங்களை திடீர் சோதனையிடல் மற்றும் கட்டுப்படுத்தல் தொடர்பான அறிவு (வனச் சட்டம்) நீதிமன்ற நடவடிக்கைகள் தொடர்பான சட்டம், நாற்றங்கால் நிருவாகம் மற்றும் பராமரிப்பு தொடர்பான அறிவு, வட்டார வன அலுவலகமொன்றில் வைத்துக்கொள்ளப்பட வேண்டிய ஆவணங்கள், நிருவாகம் மற்றும் பராமரிப்பு தொடர்பான அறிவு, காடுகளின் நிருவாகத்திற்கு ஏற்புடையதான அலுவலக முறைகள், தாபனம் மற்றும் நிதி ஒழுங்குவிதி தொடர்பான அறிவு, களஞ்சிய முகாமைத்துவம், மதிப்பீடுகளை தயாரித்தல் தொடர்பான அறிவு, மீண்டும் வனச் செய்கையின் பராமரிப்பு, சுற்றாடல் பாதுகாப்பு மற்றும் வனவிரிவாக்கல் நடவடிக்கைகள் தொடர்பான அறிவு, வன வளங்கள் மற்றும் பொதுமக்களுக்கு இடையே நெருங்கிய தொடர்பினை பராமரிப்பதற்கு தேவையான அறிவை மதிப்பிடும் நோக்கிலான கட்டமைவு மற்றும் பகுதியளவிலான கட்டமைவு வினாத்தாளாகக் காணப்படும். (எல்லா வினாக்களுக்கும் விடையளித்தல் வேண்டும்.) |

பரீட்சை சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளில் நடாத்தப்படும். விண்ணப்பிக்கின்ற மொழி மூலத்தை பின்னர் மாற்றுவதற்கு இடமளிக்கப்படமாட்டாது.

விண்ணப்பதாரிகள் இந்த இரண்டு (2) வினாத்தாள்களுக்கும் ஒரே மொழி மூலத்தில் தோற்றுதல் வேண்டும். எழுத்துப் பரீட்சையில் சித்தி பெறுவதற்கு ஒவ்வொரு வினாத்தாளிலும் ஆகக்குறைந்தது 40% புள்ளிகள் பெற்றிருத்தல் வேண்டும்.

**7. விண்ணப்பங்கள் மற்றும் ஏனைய விபரங்கள் :**

I. இந்த அறிவித்தலின் இறுதியில் காட்டப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கேற்ப விண்ணப்பப்படிவத்தின் 1 தொடக்கம் 8 வரையிலான தலைப்புக்கள் முதலாவது பக்கத்திலும், மீதி அடுத்த பக்கத்திலும் உள்ளடங்குமாறு 21×29 செ. மீ. (ஏ4 அளவு) கடதாசியில் இரு பக்கங்களையும் உபயோகித்து விண்ணப்பப்படிவம் தயாரிக்கப்படுதல் வேண்டுமென்பதுடன், விண்ணப்பம் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு விண்ணப்பிக்கும் மொழி மூலத்தில் தமது கையெழுத்தினாலேயே பூர்த்தி செய்யப்படுதல் வேண்டும். விண்ணப்பபடிவம் உள்ளிட்டு அனுப்பி வைக்கும் கடிதவுறையின் இடதுபக்க மேல் மூலையில் "வட்டார வன உத்தியோகத்தர் பதவிகளுக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான (மட்டுப்படுத்தப்பட்ட) போட்டிப் பரீட்சை - 2023" எனக் குறிப்பிட்டு 2024.04.19 ஆம் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு "பரீட்சை ஆணையாளர் நாயகம், தாபனப் பரீட்சை மற்றும் ஒழுங்கமைப்பு பிரிவு, இலங்கைப் பரீட்சைத் திணைக்களம், த. பெ. இல. 1503, கொழும்பு" என்னும் முகவரிக்குப் பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும். (தனிப்பட்ட பெயருக்கு அல்லது வேறேதேனும் முகவரிக்கு அனுப்புதலாகாது) பூர்த்திசெய்யப்பட்ட விண்ணப்பப்படிவத்தின் நிழற்பட பிரதி தம்வசம் வைத்துக் கொள்ளுதல் பயனுள்ளதாகும். விண்ணப்பப்படிவத்தின் தலைப்பில் குறிப்பிடப்பட்டுள்ள பரீட்சையின் பெயர் சிங்கள மொழி விண்ணப்பப்படிவங்களில் சிங்கள மொழிக்கு மேலதிகமாக ஆங்கில மொழியிலும், தமிழ் விண்ணப்பங்களில் தமிழ் மொழிக்கு மேலதிகமாக ஆங்கில மொழியிலும் விண்ணப்பத்தைப் பூர்த்தி செய்தல் வேண்டும்.

II. தாமதமாகக் கிடைக்கின்ற அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள மாதிரிப் படிவத்திற்கு ஒழுங்கமையாத மற்றும் முழுமை பெறாத விண்ணப்பங்கள் அறிவிக்காமலே நிராகரிக்கப்படுவதால் விண்ணப்பம் அனுப்பி வைப்பதற்கு முன்னதாக, அதனை பரீட்சை அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ள மாதிரிப் படிவத்திற்கு ஒழுங்கமைவானதாக உள்ளதா என்பது தொடர்பாகவும், எல்லா தகவல்களையும் உள்ளடக்கி விண்ணப்பம் சரியாக பூர்த்தி செய்யப்பட்டுள்ளதா என்பது தொடர்பாகவும் உரிய பரீட்சைக் கட்டணம் செலுத்தப்பட்டு அதன் விபரங்களை விண்ணபத்தில் உள்ளடக்கப்பட்டு பற்றுச்சீட்டு ஒட்டப்பட்டுள்ளதா என்பது தொடர்பாகவும் கவனமாக இருத்தல் வேண்டும்.

III. தபாலில் காணாமல் போகும் விண்ணப்பங்கள் தொடர்பாக பொறுப்புக் கூறமாட்டாது.

IV. தகைமைகளை பெற்ற அலுவலர்கள் தமது விண்ணப்பங்களைத் தமது நிறுவன/திணைக்களத் தலைவர் மூலம் சமர்ப்பித்தல் வேண்டும்.

V. விண்ணப்பங்கள் கிடைத்தமைப் பற்றிஅறிவிக்கப்படமாட்டாது.

*8. **பரீட்சைக் கட்டணங்கள்** :*

(i) *பரீட்சைக் கட்டணம் 600 ரூபா ஆகும். இந்தக் கட்டணத்தைப் பரீட்சைஆணையாளர் நாயகத்தின் வருமானத் தலைப்பு 20-03-02-13 இன்கீழ் அரசாங்க வருமானத்தில் வரவுவைக்கும் வகையில் நாட்டிலுள்ள எந்தவொரு தபால் அலுவலகத்திலும் அல்லது உபதபால்அலுவலகத்திலும் மேற்குறிப்பிட்ட கட்டணத்தைச் செலுத்திப் பெற்றுக்கொண்ட உரிய பற்றுச்சீட்டு/இரசீது விண்ணப்பத்தில் உரிய இடத்தில் கழராதவாறு ஒட்டுதல் வேண்டும். பரீட்சைக் கட்டணம் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி திகதிக்கு முன்னர் செலுத்தப்படல் வேண்டும். (குறித்தபற்றுச்சீட்டின் நிழற்பட பிரதி விண்ணப்பதாரியிடம் வைத்துக்கொள்ளுதல் பொருத்தமாகும்.)*

(ii) *எந்தவொரு காரணத்தினாலும் பரீட்சைக் கட்டணம் மீளச்செலுத்தப்படமாட்டாது என்பதுடன் வேறு பரீட்சையொன்றுக்காக மாற்றுவதற்கும் இடமளிக்கப்படமாட்டாது.*

*9. விண்ணப்பதாரி பின்வரும் ஆவணங்களில் ஒன்றையோ, சிலவற்றையோ, எல்லாவற்றையுமோ கோரப்படுமிடத்து சமர்ப்பித்தல் வேண்டும் :*

(i) *பிறப்பு அத்தாட்சிப்பத்திரம் ;*
(ii) *கல்விச் சான்றிதழ்கள் ;*
(iii) *அண்மையில் பெற்றுக்கொண்ட கிராம அலுவலரின் சான்றிதழ் ;*
(iv) *நற்சான்றிதழ்கள் இரண்டு ;*
(v) *உரிய பிற சான்றிதழ்கள்.*

***குறிப்பு**.- ஆவணங்கள்/சான்றிதழ்கள் அல்லது இவற்றின் பிரதிகள் விண்ணப்பத்துடன் அனுப்பப்படலாகாது.*

*10. விளம்பரத்தில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு விண்ணப்பங்களைப் பொறுப்பேற்கும் இறுதித் திகதியன்று அல்லது அன்றைய தினத்திற்கு முன்னர் உரிய கட்டணத்தைச் செலுத்தி அதற்கான பற்றுச்சீட்டுடன் செம்மையாகப் பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்களைச் சமர்ப்பித்துள்ள விண்ணப்பதாரிகளுக்கு பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் பரீட்சை அனுமதி அட்டைகள் வழங்கப்படும். பரீட்சை அனுமதி அட்டைகள் விநியோகிக்கப்பட்டவுடன் இது பற்றிக் குறிப்பிட்டு பத்திரிகை விளம்பரமொன்று இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தினால் பிரசுரிக்கப்படும். அறிவிப்பு வெளியாகி 2 நாட்கள் அல்லது 3 நாட்கள் சென்ற பின்னரும் அனுமதி அட்டைகள் கிடைக்கப்பெறாத விண்ணப்பதாரிகள் இருப்பின் அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு இது தொடர்பில் இலங்கைப் பரீட்சைத் திணைக்களம், தாபன பரீட்சை ஒழுங்கமைப்புக் கிளையில் வினவவேண்டும். இவ்வாறு வினவும் போது விண்ணப்பதாரி தான் விண்ணப்பித்த பரீட்சையின் பெயர், விண்ணப்பதாரியின் முழுப்பெயர், தேசிய ஆள் அடையாள அட்டை இலக்கம் மற்றும் முகவரி போன்றவற்றைச் சரியாகக் குறிப்பிடல் வேண்டும். விண்ணப்பதாரி கொழும்புக்கு அப்பால் வசிப்பவராயின் இந்த விபரங்களுடன் தொலைநகல் ஊடாக பரீட்சை அனுமதிஅட்டையின் பிரதியொன்றைத் துரிதமாக பெற்றுக்கொள்ளக்கூடிய வகையில் விண்ணப்பதாரியின் தொலைநகல் இலக்கத்தையும் குறிப்பிட்ட கோரிக்கைக் கடிதமொன்றை விளம்பரத்தில் காட்டப்பட்டுள்ள தொலைநகல் இலக்கத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டதன் பின்னர் வினவுதல் மிக்கபயனுள்ளதாக இருக்கும். அவ்வாறு கோரும் போது பரீட்சைத் திணைக்களத்தினால் கோருகின்ற ஏதேனும் தகவல்களை உறுதிப்படுத்திக் கொள்வதற்கு தன்னிடம் வைத்திருக்கும் விண்ணப்பத்தின் பிரதி, பரீட்சைக் கட்டணத்தைச் செலுத்திய பற்றுச்சீட்டின் பிரதி ஆயத்தமாக வைத்திருத்தல் பயனுள்ளதாக இருக்கும்.*

*விண்ணப்பதாரிக்கு பரீட்சை அனுமதி அட்டையை வழங்குதல் அவர் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ளாரென ஏற்றுக் கொள்ளப்பட்டதாகக் கருதப்படலாகாது என்பதுடன் பரீட்சைக்குத் தோற்றுகின்ற முதல் தினத்திலேயே தமது கையொப்பத்தை உறுதிப்படுத்திய அனுமதி அட்டையை பரீட்சை நிலைய மேற்பார்வையாளரிடம் சமர்ப்பித்தல் வேண்டும்.*

*பரீட்சை நடாத்துதல் மற்றும் பெறுபேறுகள் வெளியிடுதல் தொடர்பில் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் பிறப்பிக்கப்படுகின்ற ஒழுங்குவிதிகளுக்கு பரீட்சார்த்திகள் கீழ்ப்படிதல் வேண்டும். இந்த ஒழுங்குவிதிகளை மீறுமிடத்து பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் பிறப்பிக்கப்படும் தண்டனைக்கும் அவர் ஆளாகுதல் வேண்டும்.*

*11. **விண்ணப்பதாரியின் ஆள் அடையாளம்**.-*

- *பரீட்சார்த்திகள் பரீட்சைமண்டபத்தில் தாம் தோற்றும் ஒவ்வொரு பாடங்களின் பொருட்டும் பரீட்சை நிலைய பரிசோதகர் திருப்தியுறும் வகையில் தங்களது ஆள் அடையாளத்தை நிரூபித்தல் வேண்டும் என்பதுடன் இதற்காகப் பின்வரும் ஏதேனும் ஆவணங்களில் ஒன்று ஏற்றுக்கொள்ளப்படும் :-*

  (i) *ஆட்பதிவுத் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட தேசிய ஆள் அடையாள அட்டை ;*

(ii) செல்லுபடியான கடவுச்சீட்டு.

(iii) செல்லுபடியான இலங்கை சாரதி அனுமதிப்பத்திரம்

அதேபோன்று பரீட்சார்த்திகளின் ஆளடையாளத்தை உறுதிப்படுத்த முடியுமான வகையில் முகம் மற்றும் இரண்டு காதுகளையும் மூடப்படாது பரீட்சை மண்டபத்திற்குள் பிரவேசித்தல் வேண்டும். அவ்வாறு தமது ஆளடையாளத்தை உறுதிப்படுத்துவதை நிராகரிக்கின்ற விண்ணப்பதாரிகள் பரீட்சை மண்டபத்திற்குள் சேர்த்துக்கொள்ளப்படமாட்டார்கள். மேலும் பரீட்சை மண்டபத்திற்குள் பிரவேசித்த நேரம் தொடக்கம் பரீட்சை முடிவடைந்து வெளியேறும் வரை பரீட்சை அதிகாரிகளுக்கு விண்ணப்பதாரியை அடையாளம் காணக்கூடிய வகையில் முகம் மற்றும் இரண்டு காதுகளையும் மூடாதிருத்தல் வேண்டும்.

12. **போலியான தகவல்களை வழங்குவதற்கான தண்டனைகள்.-** தெரிவு செய்யப்படுவதற்கு முன்னர் அல்லது தெரிவு செய்யப்பட்டதன் பின்னர் உரிய தகைமைகள் பூர்த்தி செய்யப்படவில்லை எனத் தெரியவருமிடத்து எந்தவொரு சந்தர்ப்பத்திலும் அவரது பரீட்சார்த்த உரிமை இரத்துச்செய்யப்படும் என்பதுடன், பரீட்சார்த்தி அளித்துள்ள எவையேனும் விபரங்கள் அவரது அறிவுக்கு எட்டிய வரையில் பொய்யானவையென்றும் அல்லது எவையேனும் முக்கிய விபரங்களை வேண்டுமென்றே மாற்றியுள்ளாரென அவர் தெரிவு செய்யப்பட்டதன் பின்னர் தெரியவருமிடத்து அவர் அரசாங்க சேவையிலிருந்து பணி நீக்கத்திற்கு உட்படுவார்.

13. சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளில் பிரசுரிக்கப்படுகின்ற இந்த அறிவித்தலில் மொழிகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை அல்லது ஏற்புடையதாகாமை உள்ளமை பற்றி தெரியவருமிடத்து இவ்வாறான சந்தர்ப்பத்தில் சிங்களமொழி அறிவித்தலுக்கமைய நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

14. தேவையான சந்தர்ப்பங்களில் இந்த அறிவித்தலில் குறிப்பிடப்படாத விடயங்கள் தொடர்பில் வனப் பாதுகாப்பு நாயகத்தால் தீர்மானிக்கப்படுகின்றவாறு நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

ஈ. ஏ. பீ. நிஷாந்த எதிரிசிங்க,
வனப் பாதுகாப்பு நாயகம்.

வனப் பாதுகாப்பு திணைக்களம்,
ரஜமல்வத்த வீதி,
பத்தரமுல்லை,
2024 , மாச்சு 15.

**வனப் பாதுகாப்புத் திணைக்களத்தில், இலங்கைதொழில்நுட்ப சேவையின் பயிற்சித் தரத்தைச் சேர்ந்த வட்டார வன உத்தியோகத்தர் பதவிகளுக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சை - 2023**

## LIMITED COMPETITIVE EXAMINATION FOR RECRUITMENT TO THE POST OF RRNGE FOREST OFFICER IN TRAINING GRADE OF THE SRI LANKA TECHNOLOGICAL SERVICE OF THE FOREST DEPARTMENT – 2023

பரீட்சைக்குத் தோற்றுகின்ற நகரம் :

| | நகரம் | நகர இலக்கம் |
|---|---|---|
| முதல் தெரிவு | | |
| இரண்டாம் தெரிவு | | |

(அட்டவணை 1 இற்கமைவாகப் பூர்த்தி செய்யவும்.) :

01. பரீட்சைக்குத் தோற்றும் மொழி மூலம் :

சிங்களம் - 2
தமிழ் - 3 ☐
ஆங்கிலம் - 4
(உரிய இலக்கத்தினை கூட்டினுள் எழுதுக)

2\. (i) முதலெழுத்துக்களை இறுதியில் இட்டு முதலெழுத்துக்களுடன் பெயர் (ஆங்கில கெப்பிற்றல் எழுத்துக்களில்) : ..................
.................................................................................................................................................................
(உ-ம் : Gunawardhana, M. G. B. S. K.)

(ii) முழுப்பெயர் (ஆங்கில கெப்பிற்றல் எழுத்துக்களில்) : ..................................................................................................

(iii) முழுப்பெயர் (சிங்களத்தில்/தமிழில்) : ...............................................................................................................

3\. (i) அனுமதி அட்டையை அனுப்ப வேண்டிய முகவரி (ஆங்கில கெப்பிற்றல் எழுத்துக்களில்) ..................................................
.......................................................

(ii) நிரந்தர முகவரி (சிங்களத்தில்/தமிழில்) : ..........................................................................................................

4\. தேசிய ஆள் அடையாளஅட்டை இலக்கம் : | | | | | | | | | | | | |

5\. பெண்/ ஆண் -
ஆண் - 0
பெண் - 1 ☐
(உரிய இலக்கத்தைக் கூட்டினுள் எழுதுக)

6\. (i) பிறந்த திகதி :
ஆண்டு : ☐☐☐☐ மாதம் : ☐☐ திகதி : ☐☐

(ii) 2024.04.19 ஆம் திகதியன்று வயது :
வருடங்கள் : ☐☐ மாதங்கள் : ☐☐ நாட்கள் : ☐☐

7\. பிரஜாவுரிமை :
பரம்பரையாக - 1
பதிவின் மூலம் - 2 ☐
(உரிய இலக்கத்தைக் கூட்டினுள் எழுதுக)

8\. தொலைபேசி இலக்கம் : 1. கையடக்க ☐☐☐☐☐☐☐☐☐☐

2\. அலுவலகம் ☐☐☐☐☐☐☐☐☐☐

9\. கல்வித் தகைமைகள்.-

(i) கல்விப் பொதுத் தராதர (சா. த.) பரீட்சை :

முதலாம் அமர்வு :
வருடம் : ...................... சுட்டெண் : ..............................

| பாடம் | தரம் |
|---|---|
| | |
| | |
| | |
| | |
| | |
| | |
| | |
| | |
| | |

இரண்டாம் அமர்வு
வருடம் : ..................... சுட்டெண் : ...........................

| பாடம் | தரம் |
|---|---|
| | |
| | |
| | |
| | |
| | |
| | |
| | |
| | |
| | |

(10) கல்வி பொதுத் தராதர (உ. த.) பரீட்சை :
வருடம் :.................................... சுட்டெண் :...........................................

| பாடம் | தரம் |
|---|---|
| | |
| | |
| | |
| | |

11. வேறு கல்வித் தகைமைகள் :...........................................

12. தொழில்சார் தகைமைகள் :...........................................

I. தற்போது வகிக்கும் பதவி மற்றும் தரம் :...........................................

II. குறித்த பதவிக்கு நியமனம் பெற்ற திகதி :...........................................

III. நிரந்தரப்படுத்திய திகதி :...........................................

IV. ........................................... ஆம் திகதியில் முனைப்பான சேவைக் காலம் :...........................................

V. உடன் முன்னரான 05 ஆண்டு காலப்பகுதியில் திருப்திகரமான சேவைக்காலம் :...........................................

| ஆண்டு | சம்பள ஏற்றங்களை உழைத்துக் கொள்ளுதல்/ உழைத்துக் கொள்ளாமை | ஒழுக்காற்று தண்டனை/ சம்பளமற்ற லீவு தொடர்பான விபரங்கள் | செவ்வையானது என்பதற்கு நிர். அலு./பிர. அலு. கையொப்பம் |
|---|---|---|---|
| 2018 | | | |
| 2019 | | | |
| 2020 | | | |
| 2021 | | | |
| 2022 | | | |

13. ஏனைய தகைமைகள் :

I. மரங்களைஅடையாளம் காணும் பரீட்சையில் சித்தியடைந்த திகதி : ...........................................

II. வனச் சட்டம் தொடர்பான பரீட்சையில் சித்தியடைந்த திகதி :...........................................

III. வனக் கல்லூரியில் பயிற்சி பூர்த்தி செய்த திகதி :...........................................

14 I. பரீட்சைக் கட்டணங்கள் செலுத்தப்பட்ட அஞ்சல் அலுவலகம் ...........................................

II. பற்றுச்சீட்டு இலக்கம் மற்றும் திகதி ...........................................

| பற்றுச்சீட்டை கழறாதவாறு இங்கு ஒட்டவும் |
|---|

15. (i) நீங்கள் எப்போதாவது எந்தவொரு குற்றச்சாட்டுக்காகவும் நீதிமன்றத்தில் தண்டனை பெற்றுள்ளீர்களா? ஆம்/இல்லை :...........................................

(ii) ஆம் எனில் விபரங்களைக் குறிப்பிடுக :...........................................

16. விண்ணப்பதாரியின் உறுதியுரை:

இந்த விண்ணப்பப்படிவத்தில் என்னால் குறிப்பிடப்பட்டுள்ள தகவல்கள் உண்மையானவையும் சரியானவையுமென நான் உறுதிப்படுத்துகின்றேன். இதில் உள்ளடக்கப்பட்டுள்ள விபரங்கள் ஏதும் பொய்யானவை அல்லது தவறானவையென தெரிவுசெய்வதற்கு முன்னர் தெரியவருமிடத்து எனது விண்ணப்பப்படிவம் இரத்துச் செய்யப்படுமெனவும் நியமனம் பெற்றதன் பின்னர் இவ்வாறு தெரியவருமிடத்து இழப்பீடு எதுவுமின்றி சேவையிலிருந்து நீக்கப்படுவதற்கு உட்படுவேன் எனவும் நான் அறிவேன். மேலும் பரீட்சை நடாத்துவதும் பெறுபேறுகளை வெளியிடுவதும் தொடர்பில் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் பிறப்பிக்கப்படுகின்ற ஒழுங்குவிதிகளுக்கும் நான் கட்டுப்படுவேன் எனவும் இத்தால் உறுதிப்படுத்துகிறேன்.

திகதி :...........................................

...........................................
விண்ணப்பதாரியின் கையொப்பம்
(கையொப்பத்தை உறுதிப்படுத்துபவர்
முன்னிலையில் கையொப்பமிடுதல் வேண்டும்
(பதவிமுத்திரை)

17. விண்ணப்பத்தாரியின் கையொப்பம் உறுதிப்படுத்தல்

இவ்விண்ணப்பம் சமர்ப்பிக்கும் திரு./திருமதி/செல்வி ........................................... என்பவர் நான் தனிப்பட்ட வகையில் அறிவேன் எனவும்,அவர் என் முன்னிலையில் ...........................................ஆம் திகதி அவரது கையொப்பம் வைத்தார் எனவும், உரிய பரீட்சைக் கட்டணம் செலுத்தி உள்ளார் எனவும், குறித்த பற்றுச்சீட்டு ஒட்டப்பட்டுள்ளது எனவும் உறுதிப்படுத்துகின்றேன்.

உறுதிப்படுத்தும் அலுவலரின் பெயர் :.....................
பதவி :...........................................
முகவரி :...........................................
திகதி :...........................................
(பதவி முத்திரை வைக்கவும்)

18. விண்ணபதாரியின் கையொப்பம்/திணைக்களத் தலைவரால் இந்தப் பகுதி பூர்த்தி செய்யப்படுதல் வேண்டும்.
இவ் விண்ணப்பம் சமர்ப்பிக்கும் திரு./திருமதி/செல்வி ........................................... நிரந்தர/ தற்காலிக பதவி வகிக்கின்றார் எனவும், அலுவலரின் தனிப்பட்ட கடிதக்கோவை மற்றும் ஏனைய உரிய ஆவணங்களின் படி அவர் வழங்கியுள்ள தகவல்கள் உண்மையானதும் மற்றும் சரியானதும் எனவும், சான்றுப்படுத்துகின்றேன். அவர் இப்பதவிக்காக தெரிவுசெய்யப்பட்டால், இத் திணைக்களத்தில் தற்போது வகிக்கும் பதவியிலிருந்து அவரை விடுவிக்க இயலும் / விடுவிக்க இயலாது எனவும் அறிவித்துக்கொள்கின்றேன்.

...........................................
திணைக்களத் தலைவர் அல்லது அவரால்
அதிகாரம் கையளிக்கப்பட்ட
அலுவலரின் கையொப்பம்

பெயர் :...........................................
பதவி :...........................................
(உத்தியோகபூர்வ முத்திரை இடவும்)
திகதி :...........................................

கவனிக்க.- விண்ணப்பத்துடன் பணம் செலுத்தப்பட்டு பெற்றுக்கொள்ளப்பட்ட பற்றுச்சீட்டு/ரசீது தவிர்ந்த வேறு எந்தவொரு ஆவணமோ அதன் பிரதியோ இணைக்கப்படுதல் ஆகாது.

**அட்டவணை -1**

பரீட்சை நிலையம் தாபிக்கும் நகரம் மற்றும் நகர இலக்கங்கள்

| நகரம் | நகர இலக்கம் |
|---|---|
| கொழும்பு | 01 |
| கோட்டே | 02 |
| நுகேகொடை | 03 |
| மஹரகம | 04 |
| ஹோமாகம | 05 |
| அவிஸ்ஸாவெல்ல | 06 |
| மொறட்டுவை | 07 |
| பிலியந்தலை | 08 |
| தெகிவளை | 09 |
| கடுவளை | 10 |

## வனப் பாதுகாப்புத் திணைக்களம்

வனப் பாதுகாப்புத் திணைக்களத்தில், இலங்கை தொழில்நுட்ப சேவையின் பயிற்சித் தரத்தைச் சேர்ந்த வட்டார வன உத்தியோகத்தர் பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை - 2023

வனப் பாதுகாப்பு திணைக்களத்தில், இங்கை தொழில்நுட்ப சேவையின், பயிற்சித் தரத்தைச் சேர்ந்த வட்டார வன உத்தியோகத்தர் பதவிகளுக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கு தகுதி வாய்ந்த இலங்கைப் பிரசைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. இதற்கான பரீட்சை 2024 ஆம் ஆண்டு யூன் மாதம் கொழும்பில் நடாத்தப்படவுள்ளது.

*1.* **சம்பள முறைமை**

- *பயிற்சித் தரம்.-* MN *01- பொ.நி.சு. இல. 03/2016 இற்கு அமைவாக:*
  I *ஆவது வருடம் - 27,140.00*
  II *ஆவது வருடம் - 27,440.00*

- *சம்பளஅளவுத்திட்டம்.-* MN *03 - பொ. நி. சு. 03/2016 இற்கு அமைவாக*
  *ரூபா 31,040 – 10 ×445 – 11 ×660 – 10 × 730 – 10 × 750 - ரூபா 57,550.*

*2.* **சேவையில் இணைத்துக்கொள்வதற்கான பொதுவான நியதிகளும் நிபந்தனைகளும் :-**

I. முதலாவதாக பயிற்றுவிப்புத் தரத்திற்கு ஆட்சேர்ப்புச் செய்யப்படுவதுடன், பயிற்றுவிப்பு காலம் இரண்டு ஆண்டுகளாகும்.

II. 02 ஆண்டுகளிலான பயிற்சிக்காலப் பகுதியின் இறுதியில் நடாத்தப்படும் தேசிய தொழில்சார் ஆற்றல் (NVQ – 6) மட்டத்தின் பரீட்சையில் சித்தியடைந்த பின்னர், இலங்கை தொழில்நுட்ப சேவையின் தரம் III இன் வட்டார வன உத்தியோகத்தர் பதவிக்கு நியமனம் செய்யப்படும்.

III. இந்தப் பதவி நிரந்தரமானதும் ஓய்வூதிய உரித்துடையதுமாகும். இப்பதவிக்குரிய ஓய்வூதியமுறை தொடர்பாக அரசாங்கத்தால் எதிர்வரும் காலங்களில் மேற்கொள்கின்ற கொள்கையுடனான தீர்மானத்திற்கு நியமனம் பெறுநர்கள் கீழ்படிதல் வேண்டும்.

IV. இந்த நியமனம் மூன்று (3) வருட தகுதிகாண் நிலைக் காலத்திற்கு உட்பட்டதாகும்.

V. வட்டார வன உத்தியோகத்தர்களின் சேவை நிலையங்கள் நாட்டின் காட்டுப் பகுதியிலுள்ள கஷ்டப் பிரதேசங்களில் அமைந்துள்ளதுடன், தெரிவு செய்யப்படும் பரீட்சார்த்திகள் நாட்டின் எப்பிரதேசத்திலும் பணியாற்றுவதற்கு ஆயத்தமாக இருத்தல் வேண்டும்.

VI. இலங்கைத் தொழில்நுட்ப சேவையின் சேவைப் பிரமாணக் குறிப்பினதும் மேற்பார்வை முகாமைத்துவ உதவியாளர் - தொழில்நுட்ப சேவை தொகுதியில் வட்டார வன உத்தியோகத்தர்கள் மற்றும் வன கட்டுப்பாட்டாளர் பதவிகளுக்கான ஆட்சேர்ப்புத் திட்டத்தின் பிரிவுகள் ஏற்புடையதாகும்.

VII. பரீட்சைசிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளில் நடாத்தப்படும். விண்ணப்பிக்கின்ற மொழி மூலத்தை பின்னர் மாற்றுவதற்கு இடமளிக்கப்பட மாட்டாது.

*3.* **வயதெல்லை.-** விண்ணப்பதாரிகள் விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படும் இறுதித் திகதியன்று 18 வயதுக்குக் குறையாமலும் 30 வயதுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

*4.* **கல்வித் தகைமைகள்** :- சகல விண்ணப்பதாரிகளும் பின்வரும் கல்வித் தகைமைகளைத் திருப்திகரமானவாறு பூர்த்தி செய்திருத்தல் வேண்டும் :

(i) கல்விப் பொதுத் தராதர (உயர்தர) பரீட்சையில் உயிரியல் அல்லது விவசாயம் உட்பட மூன்றுபாடங்களில் (வழமையான பொதுப் பரீட்சை தவிர்ந்த) ஒரே அமர்வில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

அல்லது

பழைய பாடத்திட்டத்தில் விலங்கியல், தாவரவியல் அல்லது விவசாயம் ஆகிய பாடங்களில் 2 பாடங்கள் உட்பட மூன்று (3) பாடங்களில் க. பொ. த. (உ. த.) தரப் பரீட்சையில் ஒரேஅமர்வில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

அத்துடன்

க. பொ. த. (சா. த.) பரீட்சையில் ஒரே அமர்வில் சிங்களம்/தமிழ்/ஆங்கில மொழி, கணிதம், விஞ்ஞானம் மற்றும் வேறு ஏதாவது ஒரு பாடத்தில் திறமைச் சித்தியுடன் ஆறு (6) பாடங்களில் ஒரே அமர்வில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

5. **ஏனைய தகைமைகள் :**

(i) விண்ணப்பதாரி இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும்.

(ii) விண்ணப்பதாரி நல்லொழுக்கமுடையவராக இருத்தல் வேண்டும்.

(iii) விண்ணப்பதாரி மேலே உள்ள 3 ஆம் மற்றும் 4 ஆம் பந்திகளில் குறிப்பிடப்பட்டுள்ள அனைத்து தகைமைகளையும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியில் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

(iv) இப் பதவிக்கு ஆண் விண்ணப்பதாரிகள் மட்டும் விண்ணப்பிக்கலாம்.

(v) எல்லாப் விண்ணப்பதாரிகளும் நாட்டின் எப்பிரதேசத்திலும் பணியாற்றுவதற்கும் பதவியின் கடமைகளை நிறைவேற்றுவதற்கும் பொருத்தமான உடல், உள ரீதியான ஆரோக்கியத்தைக் கொண்டிருத்தல் வேண்டும்.

6. **ஆட்சேர்ப்புத் திட்டம்**:-

(i) மேலே 3, 4 மற்றும் 5 ஆம் பந்திகளின்கீழ் தகுதிபெறுகின்ற விண்ணப்பதாரிகள் எழுத்துமூலப் பரீட்சையில் பெற்றுக்கொள்ளுகின்ற சித்தியடைவதற்கான புள்ளிகளின் முன்னுரிமை ஒழுங்குமுறையின் மீது, பொதுநேர்முகப் பரீட்சைக்கு உட்படுத்தி பரீட்சையில் பெற்றுக்கொண்ட மொத்தப் புள்ளிகளின் முன்னுரிமை ஒழுங்குமுறையின் அடிப்படைக்கமைவாக நிலவுகின்ற வெற்றிட எண்ணிக்கைக்கு நேரொத்ததாக ஆட்சேர்ப்புச் செய்யப்படுவர்.

(ii) பரீட்சைக்குத் தோற்றிய சகல விண்ணப்பதாரிகளுக்கும் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் தனிப்பட்ட ரீதியில் பெறுபேறுகள் தபால் மூலம் அல்லது www.results.exams.gov.lk இணையத்தளத்தின் ஊடாகஅறிவிக்கப்படும்.

(iii) மேலே 6.1 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு ஆட்சேர்ப்புச் செய்யவுள்ள இறுதி வெற்றிடத்திற்கு ஆட்சேர்ப்புச் செய்யும் போது சமமான புள்ளிகளைப் பெற்றுள்ள விண்ணப்பதாரிகள் பலர் இருப்பின் அதற்கு அதிக புள்ளிகளைப் பெற்றுக்கொண்ட விண்ணப்பதாரிகள் மட்டும் ஆட்சேர்ப்புச் செய்யப்படுவர்.

(iv) மேலே 6.1 ஆம் பந்தியின்கீழ் தகுதி பெற்று தெரிவு செய்யப்படுகின்ற விண்ணப்பதாரிகள் நுவரெலியாவில் அமைந்துள்ள இலங்கை வனக் கல்லூரியினால் நடத்தப்படுகின்ற இரண்டு வருட செயல்முறை மற்றும் கட்டமைப்பு ரீதியான பரீட்சை நெறியை திறம்பட பூர்த்தி செய்து தேசிய தொழிற்தகைமை 6 ஆம் மட்டம் (NVQ 6) சித்தியடைந்ததன் பின்னர் இலங்கை தொழில்நுட்ப சேவையில் III ஆம் தரத்திற்கு உள்வாங்கப்படுவார்கள்.

7. **பாடவிதானம்**.- எழுத்துமூல பரீட்சை இரண்டு வினாத்தாள்களைக் கொண்டுள்ளதாகும்.

| வினாத்தாள் | பாடவிதானம் |
|---|---|
| உளச்சார்பு<br>(காலம் : 1 மணித்தியாலம்) - 100 புள்ளிகள்.- | இவ்வினாத்தாள் ஐம்பது (50) பல்வகை தேர்வு வினாக்களைக் கொண்டதாகவும், விண்ணப்பதாரியின் தர்க்க ரீதியான திறனையும் பகுப்பாய்வையும், தீர்மானமெடுக்கும் திறனையும் தீர்மானிக்கும் வகையில் சுருக்க விடைகளைத் தெரிவிக்கும் பல்தேர்வு வினாக்களைக் கொண்டதாகவும் அமையும். (எல்லா வினாக்களுக்கும் விடையளித்தலும் வேண்டும்.) |
| தொழில்நுட்ப வினாத்தாள்<br><br>(காலம் : இரண்டு (2) மணித்தியாலங்கள்)<br><br>- 100 புள்ளிகள்.- | இந்தவினாத்தாள் வன வளங்கள் மற்றும் இதன் உயிர்வாழ்க்கை தொடர்பில் ஏற்படுகின்ற தாக்கங்கள் பற்றிய அறிவு, இலங்கையின் சூழற்றொகுதிகள் பற்றிய அறிவு, புவியியல் முக்கியத்துவம் தொடர்பிலான அறிவு, இலங்கைக் கமத்தொழில் பொருளாதாரம் தொடர்பிலான அறிவு, வனவியல் மற்றும் வனப் பாதுகாப்பு அமைச்சு, வனப் பாதுகாப்பு திணைக்களம் தொடர்பிலான முக்கிய தகவல்கள்-இதன் பணிகள் மற்றும் நோக்கங்கள் தொடர்பிலான புரிந்துணர்வு, இயற்கை சூழல், காடுகள் மற்றும் தாவரங்கள் தொடர்பிலான அறிவு, காடுகளுக்கும் பொதுமக்களுக்கும் இடையே நெருங்கிய தொடர்பிலுள்ள முக்கியத்துவம், புவியியல் தொடர்பிலான அடிப்படை அறிவு (பூமியின் வடிவம் மற்றும் புவியியல் காரணிகள்) அத்துடன் விண்ணப்பதாரியின் பொது அறிவை மதிப்பிடும் நோக்கிலான கட்டமைவு மற்றும் பகுதியளவிலான கட்டமைவு வினாத்தாளாகக் காணப்படும். (எல்லாவினாக்களுக்கும் விடையளித்தல் வேண்டும்.) |

விண்ணப்பதாரிகள் இந்த இரண்டு (2) வினாத்தாள்களுக்கும் ஒரேமொழி மூலத்தில் தோற்றுதல் வேண்டும். எழுத்துப் பரீட்சையில் சித்திபெறுவதற்கு ஒவ்வொரு வினாத்தாளிலும் ஆகக்குறைந்தது 40% புள்ளிகள் பெற்றிருத்தல் வேண்டும்

*8. **விண்ணப்பங்கள் மற்றும் ஏனைய விபரங்கள்***

❖ *விண்ணப்பமானது இலங்கைப் பரீட்சைகள் திணைக்களத்தின்* www.doenets.lk *இணையத் தளத்தில்* "Our Services" "Online Applications - " Recruitment Exams " *ஊடாக வெளியிடப்பட்டுள்ளதுடன், விண்ணப்பங்களை இணையத்துடன் நேரடிதொடர்பு மூலம்* (Online) *மட்டுமே சமர்ப்பிக்கலாம். இணையத்துடன் நேரடிதொடர்பு மூலம்* (Online) *விண்ணப்பங்கள் பொறுப்பேற்கப்படுதல் 2024, மாச்சு மாதம் 22 ஆந் திகதி மு.ப. 9.00 மணிக்கு ஆரம்பமாவதுடன், 2024 ஏப்பிறல் மாதம் 19 ஆந் திகதி பி.ப. 9.00 மணிக்கு முடிவடையும்.*

❖ *இணையத்துடன் நேரடிதொடர்பு மூலம்* (Online) *பரீட்சைகளுக்கான விண்ணப்பம் ஆங்கில மொழியில் மட்டும் பூர்த்தி செய்யப்படுதல் வேண்டும். விண்ணப்பதாரியால் இணையத்துடன் நேரடிதொடர்பு மூலம்* (Online) *முன்வைக்கப்படும் விண்ணப்பப்படிவம் திணைக்களத்தால் பொறுப்பேற்கப்பட்டது/பொறுப்பேற்கப்படவில்லை கட்டமைவில் பிரவேசிப்பதற்கு பயன்படுத்திய கையடக்கத் தொலைபேசி இலக்கத்திற்கு குறுஞ்செய்தி மூலம்* (SMS) *அல்லது மின்னஞ்சல்* (E-mail) *முகவரிக்கு அறிவிக்கப்படும். இணையத்துடன் நேரடிதொடர்பு மூலம்* (Online) *விண்ணப்பப்படிவம் பூர்த்தி செய்வதற்கு முன்னர் பரீட்சை பொருட்டு தயாரிக்கப்பட்டுள்ள ஆலோசனை பத்திரத்தை* (Instructions) *பதிவிறக்கம் செய்து கொள்ளவும். விண்ணப்பப்படிவத்தைப் பூர்த்தி செய்கின்றபோது குறித்த ஆலோசனைகளை கட்டாயமாகப் பின்பற்றவும். தற்போது அரசாங்க சேவையில்/ மாகாண அரசாங்க சேவையில் ஈடுபட்டுள்ள விண்ணப்பதாரிகளால் பரீட்சைக்கான விண்ணப்பப்படிவத்தின் பிரதிகளை தமது சுயவிபரக் கோவையில் உள்ளடக்குவதற்கு உரிய அதிகாரிகளிடம் ஒப்படைத்தல் வேண்டும். நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கும் சந்தர்ப்பத்தில் நிறுவனத் தலைவரால் சான்றுப்படுத்திய விண்ணப்பப்படிவத்தின் பிரதி மற்றும் சேவை உறுதிப்படுத்தும் கடிதமொன்று சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும்.*

*9. **பரீட்சைக் கட்டணம்***

❖ *பரீட்சைக் கட்டணம் ரூபா 600.00 ஆகும். பரீட்சைக் கட்டணம் செலுத்துகையில் இணையத்துடன் நேரடி தொடர்பு அமைப்பின் மூலம் வழங்கப்படும் பின்வரும் கட்டணங்களை செலுத்தும் முறைமையின் கீழ் மட்டும் கொடுப்பனவுகளை மேற்கொள்ளுதல் வேண்டும்.*

i. *எந்தவொரு வங்கி கடன் அட்டை மூலம்* (Any Bank Credit Card)
ii. *இணையத்தள கொடுப்பனவு வசதிகளுடன் எந்தவொரு வங்கி பற்றட்டை மூலம்* (Any Bank Debit Card with the Facility of Internet Transactions)
iii. *இலங்கை வங்கி ஒன்லயின் வங்கிமுறை மூலம்* (Online Banking Method of Bank of Ceylon)
iv. *எந்தவொரு இலங்கை வங்கி கிளை மூலமும்* (Any Branch of the Bank of Ceylon)

***குறிப்பு** :-*

*(அ) மேற்படி முறைகளின் மூலம் கொடுப்பனவுகளை செய்தல் தொடர்பான ஆலோசனைகள் இணையதளத்தில் பரீட்சைக்கு ஏற்புடையதான தொழில்நுட்ப ஆலோசனைகளின் கீழ் வெளியிடப் பட்டுள்ளது.*

*(ஆ) கொடுப்பனவுகள் கிடைக்கப் பெறுதல் தொடர்பாக குறுஞ் செய்தி மூலம்* (SMS) *அல்லது மின்னஞ்சல் செய்தி மூலம் அறிவிக்கப்படும். பரீட்சைக் கட்டணம் பொருட்டு மொத்த பணத் தொகையும் செலுத்தப்படுதல் வேண்டுமென்பதுடன், பரீட்சைக் கட்டணம் குறைவாகவோ அதிகமாகவோ செலுத்தப்பட்டுள்ள விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். மேற்படி கொடுப்பனவு முறைகள் மூலம் பரீட்சைக் கட்டணம் செலுத்தும் போது ஏற்படும் குறைபாடுகள் தொடர்பில் இலங்கைப் பரீட்சைத் திணைக்களம் பொறுப்பு கூறமாட்டாது.*

*(இ) பரீட்சை பொருட்டு செலுத்தப்பட்ட மொத்த தொகை எந்தவொரு காரணம் கொண்டும் மீள செலுத்தலோ வேறு பரீட்சைக்காகவோ மாற்றம் செய்யப்படமாட்டாது.*

*10. விண்ணப்பதாரி பின்வரும் ஆவணங்களில் ஒன்றையோ, சிலவற்றையோ, எல்லாவற்றையுமோ கோரப்படுமிடத்து சமர்ப்பித்தல் வேண்டும் :*

(i) *பிறப்பு அத்தாட்சிப்பத்திரம்*
(ii) *கல்விச் சான்றிதழ்கள்*
(iii) *அண்மையில் பெற்றுக்கொண்ட கிராம அலுவலரின் சான்றிதழ்*
(iv) *நற்சான்றிதழ்கள் இரண்டு*
(v) *உரிய பிற சான்றிதழ்கள்.*

***குறிப்பு**.- ஆவணங்கள்/சான்றிதழ்கள் அல்லது இவற்றின் பிரதிகள் விண்ணப்பத்துடன் அனுப்பப்படலாகாது.*

*11.* ***பரீட்சை நிலையங்களும் அனுமதி அட்டைகளும்.-***

(i) *பரீட்சையானது இந்த அட்டவணை 1 இல் காட்டப்பட்டுள்ள நகரங்களில் அமைக்கப்படவுள்ள பரீட்சை நிலையங்களில் நடாத்தப்படும். விண்ணப்பதாரிகள் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு எதிர்பார்க்கின்ற நகரம், அதற்குரித்தான இலக்கம் விண்ணப்பத்தின் உரியதலைப்பில் முதலாவது மற்றும் இரண்டாவது தெரிவுகளாகக் குறிப்பிடல் வேண்டும். ஏதேனும் நகரமொன்றில் பரீட்சை நிலையமொன்றை அமைப்பதற்கு விண்ணப்பதாரிகள் போதுமானளவு விண்ணப்பிக்காதவிடத்து இந்தவிண்ணப்பதாரிகள் அவர்களது இரண்டாவது விருப்பாகக் காட்டியுள்ள நகரில் அல்லது அண்மையிலுள்ள வேறு நகரில் அமைக்கப்படுகின்ற பரீட்சை நிலையத்துடன் தொடர்புபடுத்தப்படுவர். அத்துடன் உத்தேச எல்லா நகரங்களிலும் மேலதிகமாக அல்லது பரீட்சை நிலையத்தைத் தாபிப்பதற்குப் போதுமான அளவு விண்ணப்பதாரிகள் விண்ணப்பிக்காதவிடத்து பரீட்சையை கொழும்பில் மாத்திரம் நடாத்துவதற்கு பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் தேவையான நடவடிக்கை எடுக்கப்படும்.*

(ii) *விளம்பரத்தில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு விண்ணப்பங்களைப் பொறுப்பேற்கும் இறுதித் திகதியன்று அல்லது அன்றைய தினத்திற்கு முன்னர் உரிய கட்டணத்தைச் செலுத்தி அதற்கான பற்றுச்சீட்டுடன் செம்மையாகப் பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்களைச் சமர்ப்பித்துள்ள விண்ணப்பதாரிகளுக்கு பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் பரீட்சை அனுமதி அட்டைகள் வழங்கப்படும். பரீட்சை அனுமதி அட்டைகள் விநியோகிக்கப்பட்டவுடன் இது பற்றிக் குறிப்பிட்டு பத்திரிகை விளம்பரமொன்று இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தினால் பிரசுரிக்கப்படும். அனுமதி அட்டைகள் கிடைக்கப்பெறாதவிண்ணப்பதாரிகள் இருப்பின் அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு இது தொடர்பில் இலங்கைப் பரீட்சைத் திணைக்களம், ஏற்பாடுகள் மற்றும் வெளிநாட்டுப் பரீட்சைப் பிரிவில் வினவவேண்டும். இவ்வாறு வினவும்போது விண்ணப்பதாரி தான் விண்ணப்பித்த பரீட்சையின் பெயர், விண்ணப்பதாரியின் முழுப்பெயர், தேசிய ஆள் அடையாளஅட்டை இலக்கம் மற்றும் முகவரி போன்றவற்றைச் சரியாகக் குறிப்பிடல் வேண்டும். விண்ணப்பதாரி கொழும்புக்கு அப்பால் வசிப்பவராயின் இந்த விபரங்களுடன் தொலைநகல் ஊடாக பரீட்சை அனுமதி அட்டையின் பிரதியொன்றைத் துரிதமாக பெற்றுக்கொள்ளக்கூடிய வகையில் விண்ணப்பதாரியின் தொலைநகல் இலக்கத்தையும் குறிப்பிட்ட கோரிக்கைக் கடிதமொன்றை விளம்பரத்தில் காட்டப்பட்டுள்ள தொலைநகல் இலக்கத்திற்கு அனுப்பிவைக்கப்பட்டதன் பின்னர் வினவுதல் மிக்க பயனுள்ளதாக இருக்கும். அவ்வாறு கோரும்போது பரீட்சைத் திணைக்களத்தினால் கோருகின்ற ஏதேனும் தகவல்களை உறுதிப்படுத்திக் கொள்வதற்கு தன்னிடம் வைத்திருக்கும் விண்ணப்பத்தின் பிரதி, பரீட்சைக் கட்டணத்தைச் செலுத்திய பற்றுச்சீட்டின் பிரதி என்பவற்றை ஆயத்தமாக வைத்திருத்தல் பயனுள்ளதாக இருக்கும்.*

(iii) *விண்ணப்பதாரிக்கு பரீட்சை அனுமதி அட்டையை வழங்குதல் அவர் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ளாரென ஏற்றுக் கொள்ளப்பட்டதாகக் கருதப்படலாகாது என்பதுடன் பரீட்சைக்குத் தோற்றுகின்ற முதல் தினத்திலேயே தமது கையொப்பத்தை உறுதிப்படுத்திய அனுமதி அட்டையை பரீட்சை நிலைய மேற்பார்வையாளரிடம் சமர்ப்பித்தல் வேண்டும்.*

(iv) *பரீட்சை நடாத்துதல் மற்றும் பெறுபேறுகள் வெளியிடுதல் தொடர்பில் பரீட்சைஆணையாளர் நாயகத்தினால் பிறப்பிக்கப்படுகின்ற ஒழுங்குவிதிகளுக்கு பரீட்சார்த்திகள் கீழ்ப்படிதல் வேண்டும். இந்த ஒழுங்குவிதிகளை மீறுமிடத்து பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் பிறப்பிக்கப்படும் தண்டனைக்கும் அவர் ஆளாகுதல் வேண்டும்.*

*12.* ***விண்ணப்பதாரியின் ஆள் அடையாளம்.-***

❖ *பரீட்சைநிலைய பரிசோதகர் திருப்தியுறும் வகையில் தங்களது ஆள் அடையாளத்தை நிரூபித்தல் வேண்டும் என்பதுடன் இதற்காகப் பின்வரும் ஏதேனும் ஆவணங்களில் ஒன்று ஏற்றுக்கொள்ளப்படும் :-*

(i) *ஆட்பதிவுத் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட தேசிய ஆளடையாளஅட்டை*

(ii) *செல்லுபடியானகடவுச்சீட்டு.*

(iii) *செல்லுபடியான இலங்கை சாரதி அனுமதிப்பத்திரம்*

*அதேபோன்று பரீட்சார்த்திகளின் ஆளடையாளத்தை உறுதிப்படுத்த முடியுமான வகையில் முகம் மற்றும் இரண்டு காதுகளையும் மூடாது பரீட்சை மண்டபத்திற்குள் பிரவேசித்தல் வேண்டும். அவ்வாறு தமது ஆளடையாளத்தை உறுதிப்படுத்துவதை நிராகரிக்கின்ற விண்ணப்பத்தாரிகள் பரீட்சை மண்டபத்திற்குள் சேர்த்துக்கொள்ளப்படமாட்டார்கள். மேலும் பரீட்சை மண்டபத்திற்குள் பிரவேசித்த நேரம் தொடக்கம் பரீட்சை முடிவடைந்து வெளியேறும் வரை பரீட்சை அதிகாரிகளுக்கு விண்ணப்பதாரியை அடையாளம் காணக்கூடிய வகையில் முகம் மற்றும் இரண்டு காதுகளையும் மூடாதிருத்தல் வேண்டும்.*

13. **போலியான தகவல்களை வழங்குவதற்கான தண்டனைகள்.**-தெரிவு செய்யப்படுவதற்கு முன்னர் அல்லது தெரிவு செய்யப்பட்டதன் பின்னர் உரியதகைமைகள் பூர்த்தி செய்யப்படவில்லை எனத் தெரியவருமிடத்து எந்தவொரு சந்தர்ப்பத்திலும் அவரது பரீட்சார்த்த உரிமை இரத்துச்செய்யப்படும் என்பதுடன், பரீட்சார்த்தி அளித்துள்ள எவையேனும் விபரங்கள் அவரது அறிவுக்கு எட்டியவரையில் பொய்யானவையென்றும் அல்லது எவையேனும் முக்கிய விபரங்களை வேண்டுமென்றே மாற்றியுள்ளாரென அவர் தெரிவுசெய்யப்பட்டதன் பின்னர் தெரியவருமிடத்து அவர் அரசாங்க சேவையிலிருந்து பணி நீக்கத்திற்கு உட்படுவார்.

14. தேவையான சந்தர்ப்பங்களில் இந்த அறிவித்தலில் குறிப்பிடப்படாத விடயங்கள் தொடர்பில் வனப் பாதுகாப்பு நாயகத்தால் தீர்மானிக்கப்படுகின்றவாறு நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

15. சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளில் பிரசுரிக்கப்படுகின்ற இந்த அறிவித்தலில் மொழிகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை அல்லது ஏற்புடையதாகாமை உள்ளமைபற்றி தெரியவருமிடத்து இவ்வாறான சந்தர்ப்பத்தில் சிங்கள மொழி அறிவித்தலுக்கமைய நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

ஈ. ஏ. பீ. நிஷாந்த எதிரிசிங்க,
வனப் பாதுகாப்பு நாயகம்.

வனப் பாதுகாப்பு திணைக்களம்,
ரஜமல்வத்த வீதி,
பத்தரமுல்லை,
2024.03.15 ஆந் திகதி.

**அட்டவணை -1**

பரீட்சை நிலையம் தாபிக்கும் நகரம் மற்றும் நகர இலக்கங்கள்

| நகரம் | நகர இலக்கம் |
|---|---|
| கொழும்பு | 01 |
| கோட்டே | 02 |
| நுகேகொடை | 03 |
| மஹரகம | 04 |
| ஹோமாகம | 05 |
| அவிஸ்ஸாவேல்ல | 06 |
| மொறட்டுவை | 07 |
| பிலியந்தலை | 08 |
| தெகிவளை | 09 |
| கடுவளை | 10 |

03-414

---

## பெருந்தோட்ட கைத்தொழில் அமைச்சு

## தேசிய பெருந்தோட்ட முகாமைத்துவ நிறுவனம் - இலங்கை

பெருந்தோட்ட விரிவாக்கல் முகாமைத்துவ தேசிய டிப்ளோமா (NVQ மட்டம் 05)

**2024 - கல்வி ஆண்டுக்கான மாணவர் அனுமதி**

தேசிய பெருந்தோட்ட முகாமைத்துவ நிறுவனமானது (NIPM) 1979 ஆம் ஆண்டின் 45 ஆம் இலக்க தேசிய பெருந்தோட்ட முகாமைத்துவ நிறுவன சட்டத்தின் மூலம் நிறுவப்பட்டதுடன் இலங்கைப் பெருந்தோட்ட முகாமைத்துவ துறையில் உள்ள ஒரேயொரு அரச கல்விசார் மற்றும் தொழில்சார் அமைப்பாகும். இது பெருந்தோட்ட கைத்தொழில் அமைச்சின் கீழ் இயங்கி வருகிறது. அதன் பதிவு செய்யப்பட்ட அலுவலகமானது எம்.டி.எச் ஜெயவர்தன மாவத்தை, அதுருகிரிய எனும் முகவரியில் அமைந்துள்ளது. இது

பெருந்தோட்ட கைத்தொழிலில் இணைந்திருப்போர் மற்றும் பெருந்தோட்டத் தொழில்துறையில் இணைந்துகொள்ள விரும்புவோரின் கல்வி மற்றும் தொழில்சார் தகைமைகளை உயர்த்துவதில் கவனம் செலுத்துகின்றது.

இந்த டிப்ளோமாவின் பிரதான நோக்கம் விரிவாக்கல் பணியாளர்களின் கல்வி நிலையை மேம்படுத்தல் மற்றும் நவீன பயிர் சார்ந்த விரிவாக்கல் சேவைகளை கையாள்வதற்கு இணைக்கப்பட்ட புதிய விரிவாக்கல் அலுவலர்களை விருத்திசெய்தல்.

இந்த டிப்ளோமா கற்கை நெறியை நிறைவு செய்பவர்கள் நிறுவனத்தால் நடத்தப்படும் பெருந்தோட்ட பயிர் தொழில்நுட்பம் மற்றும் முகாமைத்துவ தொழில்நுட்ப இளமானி (கௌரவ) பட்டத்திற்கு விண்ணப்பிக்க முடியும்.

| | | |
|---|---|---|
| காலம் | : | 1 1/2 வருடம் (75% நிகழ்நிலையிலும், 25% வார இறுதி வகுப்புக்கள் NIPM இலும்) |
| மொழி | : | ஆங்கிலம்/சிங்களம் |
| பாடநெறிக் கட்டணம் | : | ரூபா 145,000.00 (5 தவணைகளில் செலுத்த முடியும்) |

**நுழைவுத் தகைமைகள் :**

1. தொடர்புடைய துறையில் NVQ மட்டம் 04 தகைமை

   அல்லது

2. க.பொ.த. உயர்தரம் (ஏதாவது பாடப்பிரிவில்)

   அல்லது

3. NVQ சான்றிதழ் பெற தகைமையுடையவர்கள்.

   (க. பொ. த. உயர்தர தகைமை பெற்றிராத விண்ணப்பதாரர்கள் பெருந்தோட்டத்துறை அனுபவத்துடன் RPL (முன் கற்றல் அங்கீகாரம்) முறையின் கீழ் NIPM ஊடாக NVQ 3/4 சான்றிதழைப் பெற்றுக்கொள்ள முடியும்)

இந்த டிப்ளோமா கற்கைநெறிக்கான முழுமையாக பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பப் படிவங்களை 2024, ஏப்பிறல் 05, அல்லது அதற்கு முன்னராக அனுப்பி வைக்கலாம். விண்ணப்பங்களை "பணிப்பாளர் /CEO தேசிய பெருந்தோட்ட முகாமைத்துவ நிறுவனம், எம். டி. எச். ஜெயவர்தன மாவத்தை, அதுருகிரிய, இலங்கை" என்ற முகவரிக்கு அனுப்பி வைக்கலாம் அல்லது www. nipm.gov.lk என்ற இணையத்தளத்தின் ஊடாக நிகழ்நிலை விண்ணப்பங்களை சமர்ப்பிக்கலாம்.

**மேலதிக விபரங்களுக்கு :**

011-2770232 /071-0645355

03-421